விவேகபோதினி

தொகுதி 24 { பிரஜோத்பத்தி௵ தைமீ :: 1932-ம் ௵ ஜனவரிமீ } பகுதி 1

உ

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு-
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன்
மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொரு
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு [போதே;
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வரு
வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள [வாயே;
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா-
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்தசந்தன ம்ருகமதபுயவரை யுடையோனே;
தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி னவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வரர்தொழ மகிழ்
தெனத்தெ னந்தன எனவரி யளிநறை [வோனே-
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

*   *   *

சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாத-
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்;
அவமாயை கொண்டுலகில் விருதாஅ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்-
அறிவாக மும்பெருக இடரான துன்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே;
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே-
நவலோக முங்கைதொழு நிஜதேவ லங்க்ருத
நலமான விஞ்சைகரு விளைகோவே;
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா-
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
ஜெகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

*   *   *

பரவைக் கெத்தனை விசைதூது
பகரற் குற்றவ ரெனமாலுன்;
மரபுக் குச்சித ப்ரபுவாக-
வரமெத் தத்தர வருவாயே;
கரடக் கற்பக னிளையோனே-
கலைவிற் கட்குற மகள்கேள்வா;
அரனுக் குற்றது புகல்வோனே-
அயனைக் குட்டிய பெருமாளே.

*   *   *

கடிமா மலர்க்கு ளின்ப முளவேரி கக்கு நண்பு
தருமா கடப்ப மைந்த தொடைமாலை-
கனமேரு வொத்தி டும்ப னிருபாபு யத்த ணிந்த
கருணாக ரப்ர சண்ட கதிர்வேலா;
வடிவார்கு றத்தி தன்பொ னடிமீது நித்த முந்தன்
முடியான துற்று கந்து பணிவோனே-
வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயி லக்க ணங்க ளியல்போதி;
அடிமோனை சொற்றி ணங்க வுலகாமு வப்ப என்று
னருளால ளிக்கு கந்த பெரியோனே-
அடியேனு ரைத்த புன்சொ லதுமீது நித்த முந்த
னருளேத ழைத்து கந்து வரவேணும்;
செடிநேரு டற்கு டம்பை தனின்மேவி யுற்றி டிந்த
படிதான லக்க ணிங்க ளுறலாமோ-
திறமாத வர்க்க னிந்து னிருபாத பத்ம முய்ந்த
திருவேர கத்த மர்ந்த பெருமாளே.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

தமிழ் மொழியின் நறுமணம் எங்கே?

WHERE IS THE GLORY OF THE TAMIL?

[ஸ்ரீமான் சுத்தாநந்த பாரதியார் அவர்கள்.]

பரந்த மனமும் பண்ணொலி
யின்பம் பரிவோடென்
விரிந்த நெஞ்சம் விளங்கி
யருளாம் தமிழன்னை !

ஆர்கலி முழங்கி, அரிமாக் கூட்டம்போல் தாவிப் பாய்ந்து வீறிடுகின்றது. கடலணங்கு அலைக் கைகளை யுயர்த்தித் தனது நெய்தற் செல்வம் முழுதும் குலுங்கக் 'கொல்' லென்று நகைக்கிறாள். இப் பெரு நகையுடன் சில குறு நகைகளின் கலகலப்பும் கேட்கிறது. அக் குறு நகைகளைக்கண்டே கடல் பெருநகை புரிகின்றது போலும் !

நாகரிகமே தங்களால்தான் வாழுகின்ற தென்ற புதிய மெது நடையுடன் சில வாலிபர்களும் மாதராரும் கை குலாவி யுலாவினர். இன்று ஆண்டிறுதியாகையால் சென்றவாண்டுப் பேச்சனைத்தும் ஒரே மூச்சாகப் பேசி, புத்தாண்டில் தாம் எய்தும் எண்ணற்ற எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி, கமலக் கண்கள் விரியக் கைகள் சொற்களுக்குத் தக்கபடி விரிந்தும், குவிந்தும், நிவந்தும், தட்டியும் கொட்டியும் இங்குமங்கும் ஆடிக்காற்றில் சவுக்கு மரம்போல் அசைய, வாய் புத்தாண்டின் நலத்தை முழுதும் விழுங்குவதுபோல் வியப்புடன் திறந்து, ஹ! ஹ! ஹ! என்று வருமாண்டிற்கு வரவேற்புக் கூற, சிறுவரும் சிறுமியரும் உல்லாசமாகச் சென்றனர்! நாமும் அவர்கள் பின்னே வியப்புடன் செல்ல நேர்ந்தது!

வியப்பா, இல்லை, பதைப்பு ! ஏன்? புத்தாண்டுப் பேச்சுகளில் எத்தனையோ எண்ணங்கள் மீன் கூட்டம்போலத் துள்ளி மனக்கடலினின்றெழுந்து வருகின்றன ! இவ்விளைஞர் கூட்டத்தில் இருப்பவர் பதின்மர். அவர்களில் பாதி தமிழர் ! தமிழர் என்றால் இத்தமிழ் நிலத்திற் பிறந்தவர் ! தமிழக முதித்தவரேனும் தமிழக மற்றவர். மறு பாதியார் வங்கரும், இந்தி பேசுவோரும். இக்கூட்டத்தை மூவகையாதப் பிரித்து விடுவோம் (1) வங்கர், (2) ஹிந்தி பேசுவோர், (3) தமிழர். இம்மூவரும் ஆங்கிலமே பேசுகின்றனர். வங்கநாடும் இந்தி முன்னேற்றமும் அவர் பேச்சின் பல்லவியா யிருக்கின்றன. ஆனால் நமது தமிழர் - பஞ்சபாண்டவர் - உம், உம், என்று சொல்லி உடனிகழ்ச்சி புரிகின்றனர். ஊடே என்னென்னவோ பேசுகின்றனர். ஆனால் தமிழைப்பற்றிப் பெருமையான தொன்றும் பேசவில்லை தமிழுணர்ச்சி சற்றும் அவர்களிடமில்லை. அதுதான் நமது மனப் பதைப்பிற்குக் காரணம். அந்தோ! ஐவர் இருந்தும், தமிழன்னையின் மானங்காக்க ஒருவரும் முன்வரவில்லையா என்ற வெட்கத்துடன், தேசாபிமானியை இரகசியச் சேவகன் தொடருவதுபோல், என்னை யாரென்று காட்டாமல் பின்னேயே காது கேட்குந் தொலைவிற் சென்றேன். "தமிழ் எங்கே? தமிழ் எங்கே?" என்று அவர்கள் வார்த்தை வாரியிற் செவி வலையை வீசி வீசிச் சென்றேன். இம்மூவகையாரும் பாரதரே. எனினும் ஆங்கிலத்தையே பொதுமொழியாக்கிப் பேசினர். நான் தமிழன் ஆகையால் அவர்கள் மொழியை எனது தமிழிலேயே குறித்துக்கொண்டேன். அக்குறிப்பைத் தமிழணங்கின் முன்னே இன்று அரங்கேற்றுகிறேன்.

வங்கன்:— ஆகா ! ரிஷி பங்கிம் சந்த்ரரின் இனிய, எளிய, நளின வங்க நடைபோல் உலகில் எம்மொழியிலும் இருத்தல் அரிது. ஸ்ரீ அரவிந்தர் அவரைப்பற்றிக் கூறுங்கால் அவரை ரிஷிக்கூட்டத்தில் சேர்க்கிறார்.

" தேன்மலர் சொரியும் தீஞ்சொற் புலவன்
ஆன்மக்கடல் கடைந் தமுதளி யமுதன்
பாற்கட லமுதினும் பன்மடங் கினிய
நூற்கடற் சொற்கள் நுவலரு மினியன்"

என்று மெச்சிப் போற்றுகிறார். ரிஷி பங்கிம் சந்த்ரரின் வந்தேமாதர மந்திரம் முழங்காத இடமுளதோ? "ஸுஜலாம்! ஸுபலாம்! மலயஜ ஶீதளாம்" என்னும் அவருடைய கானத்தைக் கேட்கும் செவி மனத்தை யெழுப்பிப் பரவசப் படுத்துகிறது. எங்கள் பங்கிமே இந்தியானவ வந்தேமாதர மந்திரத்தால் வசப்படுத்தி வங்காளத்திற்கு வணங்கச் செய்தான்.

தமிழன்:— ஆம், மிஸ்டர்! அவருடைய வந்தேமாதரம் ஸாங் மிகவும் ஸ்வீட்! அவரு

டைய கிருஷ்ணகாந்த சாஸனம் படித்தேன். அந்த லவ் டிஸ்க்ரிப்ஷன் என்னை மிகவும் அட்ராக்ட் பண்ணிற்று! (இது தமிழன் தமிழனுக்குச் சொன்னதை அப்படியே எடுத்தது. ஓர் உதாரணமே இப்படிநேயருக்குக் காட்டுகிறோம்.) ஆம். வங்கதாஸரே! பங்கிம் சந்த்ரரின் நூல்களில் வேறு எதற்காவது ஆங்கிலமொழிபெயர்ப்பு இருக்கிறதா?

வ:— ஏன்? தமிழில் அவருடைய ஆனந்தமடம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதாமே; அதைத் தாங்கள் பார்க்க வில்லையோ?

த:— தமிழ் நூல்களை நான் அதிகமாகப் பார்ப்பதில்லை. தமிழில் பார்க்கத்தக்க நூல்களும் மிகக் குறைவு!

வ:— அப்படியா? தாங்கள் தமிழர்தானே?

த:— இல்லை, நான் ஐயங்கார்! வடகலை, விசுவாமித்ர கோத்ரம். ஆபஸ்தம்ப சூத்ரம்!

வ:— என்ன? தாங்கள் தமிழ் நாட்டில் பிறந்தவரில்லையா? தங்கள் ஊர் எது?

த:— நான் அசல் மதுரையில்தான் பிறந்தேன்.

வ:— பின்பு தமிழரல்லவோ தாங்கள்?

த:— அப்படியில்லை! தமிழ் நாட்டில் பிறந்தால் ஜாதிக்குத் தக்கபடி அந்த இறுதி'ன்' சேர்க்கப்படும். பிராமணன், வைசியன், வடமன், திராவிடன் என்று வருமேயொழிய நாங்கள் எல்லோரும் தமிழன் ஆய்விடுவோமா? விரலுக்கு விரல் வேற்றுமை இருக்கிறதன்றோ?

வ:— அதனால்தான் உங்கள் நாடு தலைதூக்கவில்லை (இச்சொல் என் தலையிலடித்தாற்போலிருந்தது.) நண்பரே! கவனியுங்கள். வங்கநாட்டிற் பிறந்த நாங்கள், எங்களை 'வங்காளிகள்' என்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளுகிறோம். யாராயினும் எங்களுள் ஒருவனை நீ யார் என்றால், உடனே "நான் வங்காளி" என்றே சொல்லுவான். ஜாதிமதங்களை நெடுநேரம் உசாவியே யறிதல்வேண்டும். தங்களை யார் என்றால், ஐயர், ஐயங்கார், நாயுடு, ரெட்டி, செட்டியார், முதலியார், ராஜு, நாயக்கர் என்கின்றீர்கள். உங்கள் பெயர்களுக்குப் பின்னே தொங்கவிடும் இந்த வால்களை நீங்கள் ஏன் எடுத்தெறியக்கூடாது? ஏன் நீங்கள் பெருமையாகத் தமிழன் என்று உங்களைப் பொதுப்பட சகோதர வுணர்ச்சியுடன் கூப்பிட்டுக்கொள்ளக் கூடாது? நாங்கள் மூவர் வங்காளிகள் உள்ளோம். அனைவரும் வங்கத்தாயின் புதல்வராகவே யுணருகின்றோம்.

ஹிந்தி:— தாங்கள் சொல்வதுதான் நலம். நான் இந்தத் தமிழ் நாட்டிற்கு வந்து மிகவும் கஷ்டப்பட்டேன். இவர்களுக்கு ஹிந்தி வருவதில்லை. இவர்கள் பாஷை எங்கும் பரவினதில்லை. "கரபுர, வழவழ" வென்று என் வாயில்கூட நுழையவில்லை. உலகத்தில் ஒருவரும் பேசாத பாஷையை இவர்கள் பேசுகிறார்கள். இவர்கள் எழுத்து விநோதமாயிருக்கிறது. எழுத்தில், இரண்டாவது நான்காவது மெய் எழுத்துக்கள் இல்லை. ஸ, ஷ, ஜ, க்ஷ இவையெல்லாம் எங்கள் வடமொழியி லிருந்துதான் கடன் வாங்கியிருக்கிறார்கள். பாஷை மிகவும் அபக்குவமானது. அதற்குத்தக்கபடிதானே நாகரிகமும் இருக்கும்.

த:— நண்பரே, தாங்கள் சொல்வது மெய்யே. வங்கநாட்டில் லிடரேசர் மிகவும் விருத்தியாய் விட்டது. அதன் நாட்டுணர்ச்சியுடன் பாட்டுணர்ச்சியும் தீட்டிக் கூர்ந்துவிட்டது. விசுவ பாரதியான ரவீந்த்ரர் ஒருவரே வங்கப் பெருமையை நிலைநாட்டப் போதாதா? அவருடைய கீதாஞ்சலிக்கு நோபள் வெகுமதி யளித்தனர். அத்தகைய தமிழ்ப் பாடல் எங்கிருக்கிறது? தமிழ் மொழிக்குத் தக்க ஆதரவில்லை. ஹிந்தியை காங்கிரஸ் ஆதரிக்கிறது.

வ:— தமிழைத் தமிழனே ஆதரியாவிட்டால் வேறு யார் கவனிப்பார்? தன்னுதவியின்மேல்தான் உலகில் புகழ் மாளிகை எழுப்பப்படுகின்றது. வங்கபாஷை ஒரு காலத்தில் எழுத்துக்கூட இல்லாதிருந்தது. இப்போது அது உலகில் அற்புதமான உயர்ந்த பரிசுபெற்று ஒரு ரவீந்த்ரக் கவிக் கனியாகப் பழுத்து, உலகின் செவிக் கமுதளித்து நிற்கின்றது. தமிழைத் தமிழரே முதலில் நன்கு வளர்க்கவேண்டும். தோட்டப் பயிருக்குக் காட்டுக்கிணறு இறைக்குமா? உங்கள் தாய்மொழியை வளர்க்க உங்கள் நாட்டிலேயே சிறந்த சங்கங்கள், அரங்கங்கள், கல்வி மேடைகள், கவிச்சாலைகள், வெளியிட்டு மன்றங்கள் ஏற்படவேண்டும். எங்கள் வங்க நாட்டைப் பாருங்கள்! எத்தனை நூற்கழகங்கள்! எத்தனை வங்கப் பத்திரிகைகள் உலாவுகின்றன! சித்திரப் படங்கள் பொலியும் எத்தனை சஞ்சிகைகள் வெளிவருகின்றன.

ஹி:— எங்கள் ஹிந்தியிலும் குறைவா? இந்தியாவில் நூற்றுக்கு அறுபது பேருக்கு மேல்

ஹிந்தி பேசுகிறார்கள். எங்கள் துளஸிதாஸர் இராமாயணமும், கபீர், மீரா முதலியோரின் அன்பு ததும்பும் பாட்டுகளும், பிரேமசந்த்ரர், சத்தியதேவர் முதலிய எண்ணிறந்த நடைப் புலவர் நூல்களும் எங்கும் பரவியுள்ளன. இந்த தமிழ் நாட்டில்தான் இந்தியாவின் தாய்மொழியான ஹிந்தி எளிதில் பரவுவதில்லை. இந்தியாவின் பாஷை ஹிந்தியே. நாள்தோறும் ஆயிரக்கணக்கான அரிய நூல்கள் ஹிந்தியில் வெளியாகிப் பரவுகின்றன. இந்தியின் கம்பீரம் ஆங்கிலத்துடன் போட்டி போடுகிறது. எத்தனை ஹிந்திப் பத்திரிகைகள் நாள்தோறும், மாதந்தோறும், வாரந்தோறும் சிறந்த சிற்பச் செல்வத்துடனும், சித்திர விளக்கத்துடனும், கவிநயத்துடனும், பொருட் பொலிவுடனும், வீர மொழியுடனும், அத்யாத்ம எழுச்சியுடனும் வெளிவந்துலவுகின்றன? ஆதரவும் பலமாயிருக்கிறது.

த:— ஆம்! ஆம்! நான் வடக்கே போயிருந்த போது ஹிந்தி தெரியாது பெரிதும் இடர்ப்பட்டேன். தமிழை யார் தேடுகிறார்கள்? திருப்பதி தாண்டினால் தமிழ் அமிழவேண்டியதுதான். தமிழில் சிறந்த நூல்கள் இருக்கின்றன. ஆனால், அவைகள் கொடுந்தமிழில் இருப்பதால் புரிவதில்லை. அதில் எமக்குக் கவனமுமிருப்பதில்லை.

வ:—என்ன ஆச்சரியம்! தமிழ் நாட்டில் நீங்கள் பிறந்து தமிழை இப்படி அவமதிக்கின்றீர்களே. தமிழிலும் அரிய நூல்கள் இருக்கின்றனவே. குறள் என்ற ஒரு நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு என் மனதைக் கவர்ந்தது. அது வ. வெ. சு. ஐயரால் செய்யப்பட்டது.

த:— அந்த வீர விளக்கு அவிந்ததுதானே தமிழ் நாட்டிற்குப் பெருத்த துயரம். அவர் குறளை ஆங்கிலத்திற் செய்யாவிடில் என் போன்றவர்கள் படித்தே இருக்கமாட்டோம். நீங்கள் துளஸிதாஸரையும், தாகூரைப்பற்றியும் பேசும் போது நான் தலை குனிகிறேன். தமிழ் நாட்டில் கம்பன் என்ற இணையற்ற கவியிருந்தான். அவனுடைய இராமாயணம் தெய்வகாவியம். அதைப்பற்றியும், வ. வெ. சு. ஐயர் Study of Kamban என்ற ஒரு சிறந்த ஆங்கில நூல் எழுதியிருந்தார். அதைப் பார்த்துத்தான் கம்பன் கவியைக் கருத்துடன் அறிந்தேன். இப்போது தமிழ் நாட்டில் கட்சி, ஜாதி, வகுப்பு வேற்றுமைதான் தலைவிரித்தாடுகிறது. தமிழ்வீணை இந்த வகுப்புச் சண்டையின் பறையில் அமுங்கிப் போயிற்று. என்ன செய்வது? தமிழ் நாட்டைக் குறித்துப் பேச வெட்கமாயிருப்பதால்தான் வீண் பெருமை கூறாதிருக்கிறேன். நமது புத்தகசாலையில் எண்ணிறந்த நூல்கள் உள்ளன. ஆங்கில நூல்கள் எவ்வளவு அழகான கட்டுகளுடனும், அச்சுகளுடனும், படங்களுடனும் விளங்குகின்றன! ஹிந்தி, வங்க நூல்களும் அது நிகர்த்த சிறப்புடன் பொலிகின்றன. தெலுங்கு நூல்களும் அப்படியே. தெலுங்கு நாடுகூட பாரதி, சாரதா போன்ற சிறந்த பத்திரிகைகளைத் திறமையாக நடத்திவருகிறது. ஆனால், நமது தமிழ் நூல்களோ தொகையிற் குறைவு; கட்டிலும் அச்சிலும் தாழ்வு. தமிழ்க் கவிகளையும், தமிழ்ப் பத்திரிகைகளையும், நூலாசிரியரையும் தக்கபடி ஆதரிப்பார் யார்? வரும்படியை நோக்கிப் பள்ளிப் புத்தகங்களும் தீராப் பொறியாக அரைப்பட்டினி ஆசிரியருக்கு பாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு ரூபா கொடுத்து எழுதப்படும் நூல்களுமே இங்கு வெளியிடப்படுகின்றன. நமது நாட்களிலும் சிறந்த கவிகளும் நூலாசிரியரும் உள்ளனர். ஆனால் ஆதரிப்பாரில்லை. கவியைச் சுவைப்பாரில்லை. பழம் பழுத்துப் பழுத்து நடுக் காட்டில் உதிர்ந்து மண்ணோடு மண்ணாகிறது! இதுதான் தமிழ் நாட்டுச் சரித்திரம். தமிழில்லாத் தமிழ் நாடு, தலையில்லா வடிவழகுபோலத்தான் இருக்கும்.

இதைப் பேசிய தமிழன் எனது நெருங்கிய துணைவன் துரைசாமி என்பான் ஆதலின், மற்றைத் தமிழர் என்னென்னவோ பேசியபோது எனக்கு வெட்கமும், சினமும் ஏற்பட்டன. எனது நண்பனின் உண்மை மொழி என்னை இளக்கியது உடனே தாவிக் குதித்து எனது நண்பனைத் தழுவிக்கொண்டேன். "சபாஷ்! துரைசாமி! உண்மையை உள்ளபடி சொன்னாய்! தமிழே தமிழ் நாட்டிற்கு கண்ணும் அறிவுமாகும். தமிழை விடுத்து, தான்தோன்றிகளாகத் தருக்கித் திரியும் தலைவர்கள் ஒருநாளும் தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடப்போவதில்லை" என்றேன்.

நான்:— அன்பர்களே! தமிழ்நாட்டைப்பற்றி வடநாட்டார் பெருமைப்படுவதில்லை. தமிழ்நாடு வெறும் பூகோளபாகமாயிருக்கிறதேயொழிய ஒரு சக்திபொருந்திய நாடாக உலகம் இன்றும் அறிந்திலது. இன்று அன்பர்கள் அறிக!

எவ்வ துறைவ துலக முலகத்தோ டவ்வ துறைவ தறிவு.

தமிழ்மொழி, தனிமொழி. அதற்கு'ஸா'வுண்டா என்று அன்பர் முன்னே கேட்டார்.

ஆனந்தக்களிப்பு

ஸாவுண்டோ ஜாவுண்டோ வென்றீர் — தமிழ்
சாவறு தனிமொழி சார்பறு மொழியே!
நாவினுக் கினியது தமிழே—உயிர்
நாடிய தாவும் நயப்பது தமிழே!
கற்பதற் கெளியது தமிழே—கற்றோர்
கருத்தினுக் கின்னமு தாவதுந் தமிழே!
சொற்சுவை சிறந்ததுந் தமிழே—மிகத்
தொல்மொழி யாதிற்குந் தென்மொழி தமிழே!
என்ன தமி ழெனச் சொன் னீர்!—நீர்
எதுக்த மிழை யறியாமற் சொன் னீர்!
கன்னத்திலே யறைந்தாற்போல்—என்றன்
காதினைச் சுட்ட தந்தச் சுடு கோலே!
அரசியற் கரசி யுந் தமிழே—தெய்வ
அருட் கவிக்கருள் வெள்ள மானதுந் தமிழே!
மூரசதிர் மூரியில் நாவாய்-ஊர்ந்து
மூது லகின் புகழ்மொண்டதுந் தமிழே!
வீரம் நிறைந்த துந் தமிழே-ஆத்ம
வெற்றிக் கதிரின் விளக்குந் தமிழே
பூரணப் பொன் மொழி தமிழே—அதன்
பொற் பினங் கற்பைப் புகலு வன் யானே!

வ:— பேஷ்! பேஷ்! ஆனந்தரே! உங்களைப் போன்ற தமிழுணர்ச்சியுடன் தமிழ் நாட்டிற்குத் தமிழ்ப் பணி புரியச் சிலர் எழுந்தால் போதும். தமிழ்நாடு இன்னொரு வங்கமாகிவிடும்.

ஆனந்தன்:— ஆம். நண்பரே! எல்லாம் இருக்கின்றன. விதையும், நிலமும், நீரும் உள்ளன. ஒரு தோட்டக்காரனே வேண்டும். தமிழ் நாடு வீர நாடு. தமிழ்மொழி தனித் தென்மொழி. தமிழரும் வீரர்தான்.

வீர நினைவும், வீர வினையும்
வீர வாழ் வொடும்
வீர முரசு விண்மு ழங்க
வெற்றி யோங்கு நாடே!
வெற்றி யோங்கு நாடே!—ஜெய
வீரர் வணங்கும் நாடே!
வாழிய தமிழன்னை வாழ்கவே!

என்ற பாட்டு எனதுள்ளத்தை வீணை மீட்டிக் கொண்டேயிருக்கிறது. ஆனால் சமூக ஊழல்கள் சாத்தான்போன்று குறுக்கிட்டு நன்முயற்சிகளை வீழ்த்துகின்றன. தமிழர் தமிழ் ஜாதியராகி ஒரு குலமைந்தராகத் தீவிர வீரத்துடன் ஒன்றுபட வேண்டும். அவர்களை ஒன்றுபடுத்தப் பரா சக்தியின் அருள் பெற்ற ஒரு பூரண வீரன் வரவேண்டும். முகம்மது நபிக்கு அடுத்தபடியாக, அற்புத சக்தி பெற்ற குரு கோவிந்த சிங்கனைப்போன்ற ஒரு வீரன் இப்போது எழுந்தால் நாடு ஒன்றுபடும். சீக்கியர் போன்று தமிழர் ஒரே நாளில் வீர மைந்தராவார். தங்கள் ஜாதி, சமய வேற்றுமைகள், பொறாமைகள், சிறுமைச் சண்டைகள் முதலிய அசட்டுப் பிடிவாதங்களை விடுத்துத் தமிழ் நாடு என்று சக்திபெற்று, சக்தியாக ஒன்று படுகிறதோ அன்றுதான் தமிழ் பெருமைபெறும். வங்கமும் மயங்க விளங்கும்; இந்தியும் பிந்த மூந்தும். ஹிந்திக்கு எவ்வளவு இனிமையும், பெருமையும் உள்ளதோ, அதனினும் பன்மடங்கு தொன்மையும், வன்மையும், திண்மையும், தன்மையும், கனிவும், இனிவும் துணிவும் தமிழுக் குள்ளது. தமிழ் மொழி எழுந்தால், உண்மையாக முயன்றால், உலகளாவி யொளிரும் என்பது திண்ணம்.

ராய் பகதூர் பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர், ஸி.ஐ.ஈ.

RAI BAHADUR BANKIM CHANDRA CHATTERJEE, C. I. E.

கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
கற்றபின் கண்ணு மாகும்;
மெய்ப்பொருள் விளக்கும்; நெஞ்சின்
மெலிவற்கோர் துணையு மாகும்;
பொய்ப்பொருள் பிறகள்; பொன்னும்;
புகழுமாந் துணைவி யாக்கும்;
இப்பொருள் எய்தி நின்றீர்?
இரங்குவ தென்னை யென்றான்.
— சீவகசிந்தாமணி

இவ்வுபதேச மொழிகள் எக்காலத்திற்கும் பொருந்தும். கல்விப் பெருக்கால் மனித ஜன்மத்திற்கு உண்டாகும் அளவற்ற நன்மையைப் பற்றி விரித்துரைத்தல் மிகைபாகும். படித்தவரால் உலகிற் கேற்படும் நன்மைகளை விஸ்தாரஞ் செய்வதும் அநாவசியம். ஆயினும், அத்தகையாரது வாழ்க்கையைக் கவனிப்பது, நமது அறியாமையைப் போக்கும். கல்வியால் பிரக்யாதி

பெற்று, வங்க பாஷைக்கே புதிய உயிர் தந்து அதைக் கற்றோரனைவரும் கவனிக்கச் செய்தவருள் பங்கிம் சந்த்ர சட்டோபாத்தியாயர் ஒருவர்.

இவர் 1838-ம் ஹூ பிறந்தவர். இவர் தந்தை யாதவசந்த்ர சட்டோபாத்தியாயர் ஆவர்; டெப்டி கலெக்டர் உத்தியோகஞ் செய்துவந்தவர். பங்கிம் பாபு, முதலில் ஹூக்ளி கலாசாலையில்படித்து, பிறகு கல்கத்தா இராஜாங்கக் கலாசாலையில் படித்தார். வங்காளத்தில் ஏற்படுத்திய கல்கத்தா சர்வகலாசாலையில் முதல் முதல் பி. ஏ., பட்டம் பெறும் பாக்கியம் இவரதேயாகும். இவர்க்கு ஆதிமுதல், பத்திரிகை நடத்தும் தொழிலில் அதிக ஆசை உண்டு. பி. ஏ., பரீக்ஷைக்குப் போகுமுன்பே பத்திரிகைகளுக்கு எழுதுவதல்லாமல், அக்காலம் ஈசுவர சந்த்ர குப்தர் என்பவர் நடத்திவந்த "ப்ரபாகர்" என்னும் பத்திரிகை ஆபீஸில், பத்திரிகை நடத்தும் விஷயங்களில் அனுபவம் பெற்றிருந்தார். எனினும், அவர் பி. ஏ., பரீக்ஷை தேறியதும், டெப்டி கலெக்டராக நியமிக்கப்படவே, அவர் விருப்பத்திற்கு இடையூறு வந்தது போலும்! என்றாலும், சிலநாள் கற்ற நூல் பழக்கமும், ப்ரபாகர் பத்திரிகைச்சாலையில்பெற்ற அநுபவமும் அவரைச் சும்மா இருக்கவிடவில்லை.

இதற்கு அக்காலத்து வங்காளத்து நிலைமையே காரணம். மதுஸூதனதத்தர் தமது பாவினங்களின் பெருமையாலும், கவி சமத்காரத்தாலும், வங்க பாஷையின் யாப்பு நிலையை நவீனமாக்கி, புதுமையாக சிருஷ்டித்து எங்கும் புகழ்பெற்றனர். அச் சனங்களுள்ளும் பாஷாபிவிருத்தியைப்பற்றிப் பெரும் கவலையும் சிரத்தையு முண்டாயிற்று. வங்க பாஷைக்கே ஒருவித இளமையும், யௌவனமும் இருந்தாற்போல இருந்த உண்டாயிற்று. இக்காலத்தில் விளங்கிய பங்கிம் பாபுவுக்குத் தாமும் நூலெழுதி அழியாப் புகழுடைய வேண்டுமென்ற பேராவல் உண்டானது அதிசயமாகாது. ஆனால் மதுஸூதனருடன் போட்டி போடத்தக்க கவனசக்தியில்லை யென்பது பங்கிம் பாபு நன்குணர்ந்தவராதலால், ஆங்கில நாட்டில் பைரன் மகாகவி தோன்றியதும், ஸர் வால்டர் ஸ்காட் என்னும் கவிமான் தன் கவிக்கடையைக் கட்டி விட்டு அதியற்புதமான நவீனங்களெழுதும் நூலாசிரியர் ஆனதுபோல, பங்கிம் பாபுவும் வங்க பாஷையில் அணித்தரமான நவீனங்கள் எழுதக் கங்கணம் கட்டிக்கொண்டனர். சிலவேளைகளில் அவர் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய நூல்களைப் பாஷாந்தரப்படுத்த ஆவல் கொண்டாராயினும் அது ஈடேறுவது கஷ்ட சாத்தியமல்லவெனக் கைவிட்டனர்.

இவ்வாறு அவர் நிச்சயித்ததும், இந்திய சரித்திரங்களையே ஆதாரமாகக் கொண்டு தமது முதல் நூலாகிய துர்க்கேச நந்தினி என்னும் இன்றும் வங்கபாஷையில் மிகச் சிறந்த கிரந்தமாகக் கருதப்படும் நூலை வெளியிட்டனர். அதன் உயர்ந்த பாவப் போக்கும், விசித்திர அமைப்பும், அலங்கார பாவனா சர்ப்பமும், கவி ஹிருதிய வைபவமும், நடையின் அழகும், படிப்பார்தம் மனதைக் கவரும் பான்மையும், இவற்றை வங்க பாஷயின் வசன நூல்களைச் சர்ச்சை செய்யும் எவரும் புகழாதிரார் என்பது திண்ணம். எனினும், இப்புத்தகம் எழுதியதும், பங்கிம் பாபு பலர் வாயில் நுழைந்து வெளிவர வேண்டியிருந்தது. அவர் வழக்கம்போன்ற வசனரசனை வழிகளை விட்டு, தமக்கெனவே புதிதான சில வழிகளை ஏற்படுத்தும் தைரியம் கொண்டதே அதற்குக்காரணமேயன்றி வேறல்ல. கட்டிய வீட்டிற்குப் பழுது சொல்ல வெகு கஷ்டமா? எனினும், பங்கிம் இவர்களது மொழிகளைச் சிறிதும் கவனியாது தன் காரியத்தின்மேலே கண்ணாயிருந்தார்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புக் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்."

என்பது கவி வாக்கன்றோ? எனினும் பங்கிம், வங்க பாஷையையே புதுப்பிக்கும் சாதனமாக்கி தன்னைப் பரிஹஸித்தவரும் போற்றும்படியான நிலைமையடைய அவர் அடங்கா முயற்சி இடந்தந்தது.

துர்க்கேச நந்தினியை அக்காலத்து மதிப்பாசிரியர் வெகு அன்புடன் ஏற்கவில்லை. அதன் சைலி வெகு தீவிரமானதென்றும், கதையின் ஒழுங்கு அபூத கல்பனையாகவும், அதில் இடையிடைத் தோன்றிய அபிப்பிராயங்கள் இயற்கைக்கு மாறானதென்றும் அவர் கண்டித்தனர். எனினும், தீர நெஞ்சம் படைத்த பங்கிம் பாபு, புதுத் துறைகளின் வாயிலாக, பல நவீன நூல்கள் இயற்றினர். குழந்தை பிறக்கும்போது அதனுடன் தோன்றும் கல்மஷங்கள் தாமே

யகல்வனபோலப் பங்கிம் பாபுவின் புகழும் களங்கமற்றுமேலோங்க ஆரம்பித்தது. அடங்கா ஊக்கத்துடன் அவரெழுதிய அற்புத நவீனங்கள், படித்தறிந்த பெரியோரது வெறுப்புக்கு முதலில் பாத்திரமா யிருந்தனவேனும், வரவர அவரே அவற்றின் சௌலப்யத்தைக் கண்டு பன்முறையும் படித்துப் பரவசமடைவதாயினர். இச் சமயமே பங்கிம் பாபு கபால குண்டலா என்னும் அதிசயோக்தி நிறைந்த அற்புத நூலை வெளியிட்டனர். அதன் உற்பாத கற்பனையும், வெண்பொருளின் பொருள் மிகுதியும், தட்டற்று ஒழுகும் நடையும், அவரை வங்கபாஷா சிருஷ்டிகர்த்தலைவராக மதிக்கச் செய்தன. அடுத்தாற்போல் அவர் எழுதிய மிருநாளினி என்னும் நூலில், உலக வழியின் அநுபவங்களை வெகு விசித்திரமாக அபார அனுபவத்துடன் வெளியிட்டனர். இயற்கையுடன் பேசும் இசை வன்மைகொண்ட நாவலனை இச்சமயம் பங்கிம் பாபுவை யாவரும் மதித்தனரென்பது மறக்கமுடியாத விஷயமாகும்.

இவ்வாறு பல நூல்களை எழுதியதும் பங்கிம் பாபுவுக்கு வங்க பாஷையின் சிறந்த சாஸ்திர நுட்பங்களையும், ஜனங்களின் மனதைத் திருத்தி நிஷ்களங்கராகச் செய்யும் போதனைகளையும் எற்கும் கருவியாக்கி, தனது அநுபவஸ்தானத்திலிருந்து வெளியிட்டு, பொதுஜனங்களைச் சீர்திருத்த வேண்டும் என்ற பேரவா உண்டாயிற்று. இந்த ஆவலே அவரை 1872-ம் ஆு வங்கதர்சன் என்னும் மாதாந்தப் பத்திரிகையை வெகு சிறப்புடன் நடத்தச் செய்தது. அதன் வாயிலாகப் பங்கிம் பலவித கதைகளையும், போதனைகளையும் பிரசுரித்து வங்காளிகளின் லௌகிக ஸமஷ்டி விஷயங்களைப் பன்முறையும் கண்டித்து, சரியான வழியில் ஒடச் செய்ததன்றி இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் முதலிய அரிய விஷயங்களைப்பற்றிய முதல்தரமான சர்ச்சைகளையும் வெளியிட்டனர். அதன் பக்கங்களில் வெளிவந்த 'பிஷப்ருக்' அதாவது 'விஷ விருக்ஷம்' என்னும் நவீனம் பொதுஜனங்களால் வெகு ஆதரவுடனும், அன்புடனும், அளவற்ற மதிப்புடனும் எற்கப்பட்டது. இக்கதையில் வங்காளிகளின் ஜன சமூக வாழ்க்கையின் தன்மை வெகு நுட்பமாக வளர்க்கப்பட்டிருந்ததே பாமர ரஞ்சகத்திற்குக் காரணம்போலும்! இந்நூல் ஆங்கிலத்திலும், மற்றும் மேனாட்டுப் பாஷைகளிலும் பர்ஷாந்தரப்படுத்தப்பட்டதென்பது அதற்கிழுக்காகாது. அதை ஆங்கிலத்தில் மதிப்பிட்ட ஜேம்ஸ் டர்மேஸ்டேடர் என்பவர், வங்கபாஷையின் முதல் கற்பனை நூலாசிரியரால், இந்நாட்டில் இதுவரையும் அக்கால ஜனங்களின் பரஸ்பர நடைகொடி பாவனைகளைப்பற்றி வெகு கண்டிதமாக எழுதப்பட்ட நவீனமாக அதைக் கொண்டாடினர். அந்த நவீனத்தை ஆங்கிலத்தில் பாஷாந்திரப் படுத்திய மிஸஸ் நைட் என்னும் மாதரசி அந்நூல் ஆங்கில நாட்டில் வெளிவரத்தக்க போக்கியதை எற்றதாகத் தன் உள்ளக் கருத்தை வெளியிட்டனள். இவ்வபிப்பிராயங்க ளெல்லாம் பங்கிம் பாபுவின் சிறந்த ஞானத்திற்கும், கதை எழுதும் திறத்திற்கும் அவரது அநுபவப் பெருக்கிற்குமே சான்றாகும்.

பங்கிம் பாபு எழுதிய நவீனங்கள் கணக்கில் அடங்கா. அவரெழுதிய சந்திரசேகரன், சீர்கெட்ட மனத்தை வழிப்படுத்தும் பெருமையை வெளியிடும். சீதாராமன் என்னும் நூல் அவரது சரித்திரஞானத்தைத் தெற்றென விளக்கும். ஆனந்தமடம் என்னும் நூல் அளவற்ற ஆவலையூட்டி எம் மனத்தையும் பறிக்கும். வந்தே மாதரம் என்னும் பதங்களைச் சிருஷ்டித்த பெரும்பேறு இந்த நவீனத்திற்கே உரியது. மற்றும் அவர் எழுதிய நூல்கள் அநந்தம். அவற்றுள் முக்கியமானவை கிருஷ்ணகாந்தனது உயில், தேவி சௌதுராணி, ராஜஸிம்ஹன் முதலியன. நாவல்களன்றி, சில ஹாஸ்ய நூல்களும் பங்கிம் பாபு இயற்றியுள்ளார். லோக ரஹஸ்யம், கமலகாந்தனது தஸ்திரம் என்னும் நூல்களில் வங்காளிகளின் சில துர்வழக்கங்களைப் பரிகசித்துக் கண்டித்துள்ளார்.

வரவர, பங்கிம் பாபுவுக்கு லோகாயத ஞானங்களில் வெறுப்பேற்பட்டதற்கு அவர் விருத்தாப்பியமே காரணம். எனவே, அவர் தமது வயோதிக காலத்தில் தமது வியவஹாரங்களை யெல்லாம் பாரமார்த்திக வழியிலேயே செலவிட்டனர். இக்காலங்களில் அவர் வேதங்களைப் பன்முறையும் படித்துக் களிகொண்டு அவற்றிலாழ்ந்து பரவச பெய்தினர். ஹிந்து மதத்தின் மங்கிய சாயையை ஒழித்து அது நிஷ்களங்கமாகப் பிரகாசிக்கச்செய்ய அவாக் கொண்டனர். ஸ்ரீ கிருஷ்ண பகவானே அவரது மனன மூர்த்தமாக விளங்கியது இங்கு மதிக்கத் தக்

கது. அவரைப் பங்கிம் பாபு உலகத்திற்கு உண்மை வழிகாட்டவந்த உத்தமோத்தமராகக் கருதிப் பூஜித்தனர். அவரது சரிதையையும், அதி விஸ்தாரமாக எழுதி வெளியிட்டனர். இந்நாலே பங்கிம் பாபு எழுதியவற்றுள் முதற்றரமானதெனின், அவரது மற்றைய நூல்களுக்கிழுக்காகாது. ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்திலன்றி தர்ம தத்துவம் என்னும் நூலிலும், ஸநாதன தர்மத்தின் மெய்ஞ்ஞானப் போக்கையும், விஞ்ஞானத்தோடு ஒற்றப்பாடுடன் விளங்கும் வைபவத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

பங்கிம் பாபு வங்காளியிலன்றிச் சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் நல்ல மேதாவி. முதன் முதல் ஆங்கிலத்திலேயே அவர் நூல் எழுத அவாக்கொண்டு, அப்போது நடைபெற்றுவந்த இண்டியன் பீல்ட் என்னும் பத்திரிகையில் ராஜமோஹனன் மனைவி என்னும் நவீனத்தை ஆங்கிலத்திலேயே எழுதினர். ஆனால், அந்நிய பாஷையில் முதன்மை யடைவது அசாத்தியமெனக் கண்டு, பின் எழுதுவதை விட்டனர் போலும்!

சர்க்கார் வேலையில் உழைத்தும், தமது வேலையிடங்கொடுத்த எஞ்சிய வேளைகளில் ஊக்கங்கொண்டு, மனங் குன்றாது தன் தாய் பாஷை மேல் பேரன்பு வாய்ந்து வெகு தீவிரத்துடன், பிறரது கண்டனம், புகழ்ச்சி இவற்றைக் கவனியாது தன் மனச் சாட்சியின்படி வங்காள பாஷையை பிரௌட சைலி பெறும்படி யாக்கிய பெருமை பங்கிம் பாபுவினதல்லாது மற்று யாரால் முடியும்? அவரது ஞானமே குயுக்தியில் பாயாது, வங்காளிகளின் மனச் சலனங்களை யொழித்துப் பரமசாந்தி யடையும்படிச் செய்ததென்றால், அவரது நடை நொடி பாவனைகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? வங்காளிகளில் சிலர், புதிதாக ஏற்படுத்திக்கொண்ட பிரம்ம ஸமாஜத்தின் கொள்கைகளைப் பங்கிம் பாபு ஏற்றவ ரல்லர் என்பது இங்குக் குறிப்பிடத்தகும். அவர் உத்தம பாரத புத்திரன்; உண்மை ஹிந்து. அவரைப் புதல்வனாகப் பெற்ற இந்தியைக்குக் குறை எப்படி யிருக்க முடியும்?

1894-ம் ஆண்டு இந்திய தேவி பங்கிம் பாபுவின் பாஞ்ச பௌதிகத்தை யொழித்துத் தன் கருவில் புனர் கர்ப்பங்கொண்டு அவரது புகழுடம்பை வெளியுலாவக் களிகொண்டனள். பங்கிம் பாபு தமது சர்க்கார் வேலையில் நன்குழைத்ததன் பெருமையை விவரிக்க வேண்டியதில்லை. அவர் சிறிதுகாலம் டெப்டி மாஜிஸ்டிரேட் ஆகவும், கலெக்டராகவும் இருந்தனர். அவரது ஊழியத்தின் பெருமையையும், அவரது வங்க பாஷா ப்ரவீண யோக்யதையையும் மதித்து, கவர்ன்மெண்டார் அவர்க்கு ராய் பஹதூர், ஸீ. ஐ. ஈ. என்னும் பட்டங்களை அளித்தனர்.

'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்
அச்செல்வம் செல்வத்துளெல்லாந் தலை.'

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி.)

அகாமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி
அகமாகி-
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி
அவர்மேலாய்;
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி
வருவோனே-
இருநில மீதி லெளியனும் வாழ எனதமு னேடி
வரவேணும்;
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும்
வடிவோனே-
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம
முடையோனே;
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு
மயிலோனே-
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு
பெருமாளே-

* * *

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற அருளாலே-
அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு மகிழ்வாக;
மண்டலமு முனிவோரு மெண்டிசையி லுளபேரு
மஞ்சினனு மயனாரு மெதிர்காண-
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூர
மைந்துமயி லுடனாடி வரவேணும்;
புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
புந்திநிறை யறிவாள வுயர்தோளா-
பொங்குகட லுடனாகம் விண்டுவரை யிகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு வடிவேலா;
தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா-
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு பெருமாளே.

‘அஷ்டபதி’ என்றும் ‘கீதகோவிந்தம்’ என்றும் சொல்லப்படும் சிருங்கார மஹா காவியம்

ASHTAPATHI OR GEETA GOVINDAM

[ஸ்ரீமான் பாபநாசம் சிவன் அவர்கள்.]

ஐந்தாவது ஸர்க்கம் ஆரம்பம்

சுலோகம்

அஹமிஹ நிவஸாமி யாஹி ராதாம்
அனுநய மத்வசனேன சானயேதா: |
இதி மதுரிபுணா ஸகீ நியுக்தா
ஸ்வயமித மேத்ய புனர்ஜகாத ராதாம் |

(இ - ள்.) ‘யான் இங்கேயே இருக்கின்றேன். நீ சென்று நான் பிரார்த்தித்ததாகப் பேசி இணங்கச்செய்து அவ்விராதையை இங்கு அழைத்துவா’ என்று மதுஸூதனனால் நியமிக்கப்பட்ட (இராதையின்) தோழியானவள் - இராதையிடம் வந்து பின்னும் இவ்வாறு சாதுர்யமாய் இயம்பலுற்றாள் (எ - று.)

பத்தாவது அஷ்டபதி

ராகம் - ஆனந்தபைரவி தாளம் - ஆதி

பல்லவி

தவ விரஹே வனமாலீ

அனுபல்லவி

ஸகி ஸீததி ராதே! (தவ)

சரணங்கள்

1. வஹதி மலயஸமீரே மதன முபநிதாய
ஸ்புடதி குஸுமநிகரே விரஹி ஹ்ருதய தளனாய()
2. தஹதி சிசிரமயூகே மரண மனுகரோதி
பததி மதனவிசிகே விலபதி விகலதரோதி (தவ)
3. த்வனதி மதுபஸமூஹே ச்ரவண மபிததாதி
மனஸி சலிதவிரஹே நிசிநிசி ருஜ முபயாதி (தவ)
4. வஸதி விபினவிதானே த்யஜதி லலிததாம
லுடதி தரணிசயனே பஹு விலபதிதவநாம (தவ)
5. பணதி கவிஜயதேவே—விரஹவிலஸிதேன.
மனஸி ரபஸவிபவே ஹரிருதயது ஸுக்ருதேன (தவ)

(இ - ள்.) ஸகி! உனது பிரிவினால் வனமாலியானவர் மிகவும் வருந்துகின்றார்.

(1) காமத்தீயை விசிறிப் பற்ற வைக்கும் தென்றற் காற்று தவழுந்தோறும் காம வேதனைப் படுகின்றார். பிரிந்த காதலருள்ளத்தைப் பிளக்கவே மொட்டுகள் மலர்ந்து இதழ்களை விரிக்கின்றனவென்று இதயம் வெடித்தது போல் துடிக்கின்றார்.

(2) தண்மைபொருந்திய கிரணங்களையுடைய திங்கள் தழல் போல் சுடுகின்றதே என்று உயிரற்றவர் போற் சமைகின்றார். காமனம்புகள் பாயவே மிகவும் மனம் மாழ்கிக் கரைகின்றார்.

(3) வண்டுகள் முழங்குங்கால் காதுகளைப் பொத்திக் கொள்ளுகின்றார். நினைந்து நினைந்துருகி மனநோயால் தொலையாத இராப்பொழுதைத் தொலைக்கின்றார்.

(4) மரத்தடிகளில் உட்கார்வதைத் தவிர மெல்லிய புஷ்ப சயனத்தை வெறுக்கின்றார். தரையிற் கிடந்து புரள்கின்றார். எந்நேரமும் (ராதே ராதேயென்று) உன் பெயரைப் புலம்பிய வண்ணமிருக்கின்றார்.

(5) (பரமாத்மாவின்) பிரிவாற்றாது உழலும் அவல நிலைமையை ஜயதேவ கவி வர்ணிப்பதைக் கொண்டேனும், பல்வகை விஷயங்கள் அடர்ந்திருண்ட அரண்யத்தில் சிக்கியுழலும் உள்ளத்தில் ஸ்ரீஹரியின் (ஸூர்யனென்றும் பொருள்) தியான உதயமாகும் பாக்கியம் நம்மனோர்க்குச் சித்திக்கட்டும் (எ - று.)

இந்த அஷ்டபதியில் ஐந்து சரணங்களே இருப்பதற்கு, முதல் அஷ்டபதியில் பதினொறு சரணங்கள் அவசியமாய் இருந்ததே காரணமென்பது பெரியோர் அபிப்பிராயம்.

சுலோகம்

பூர்வம் யத்ர ஸமம் த்வயா ரதிபதே:
ஆராதிதா: ஸித்தய:
தஸ்மின்னேவ நிகுஞ்ஜ மன்மத மஹா
தீர்த்தே புனர் மாதவ: |
த்யாயம் ஸ்த்வாம் அனிசம் ஜபன்னபி தவை-
வாலாப மந்த்ராவலிம்
பூயஸ் த்வத் குசகும்ப நிர்பர பரீ-
ரம்பாம்ருதம் வாஞ்சதி ||

(இ - ள்.) ஹே ராதே! அம் மாதவன் முன்னம் உன்னுடன் சேர்ந்து எந்த இடத்தில் மன்மதனது ஸித்திகளை ஆராதித்தாரோ (மதன லீலைகளைச் செய்யக் கருதினாரோ) அப் பூங்கொடி மனையாகிய அதே மன்மத மஹா தீர்த்தத்தில் உன்னையே ஸதாத் தியானித்துக்கொண்

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார் பெருக்கம் பெருமித நீர்த்து.

டும் உன் ஸம்பந்தமான பேச்சுகளாகிய மந்திரங்களையே ஜபித்துக்கொண்டும் - உனது கும்பத் தனத்தடங்களை இறுகப் புல்லுவதால் உண்டாகும் இன்பாமுதத்தை அடைய மேலும் ஆவலுள்ளவனா யிருக்கின்றார். (எ - று)

ஒரு பயனைவிரும்பித் தவஞ் செய்வோர் புனிதமான இடத்தில் தங்கித் தகுந்த மந்திரங்களை உச்சரித்தல் வேண்டுமென்பதை யுணர்ந்து கண்ணன், 'மன்மத மஹா - தீர்த்தமான-பூங்கொடி மனையில் வீற்றிருக்கின்றா'ரென உருவகப் படுத்தினாள். தீர்த்தம் - பரிசுத்தமான ஸ்தானம்.

அடுத்த அஷ்டபதியில் தோழி—இதையே வலிவுறுத்தி-விரைந்து கண்ணன்பால் அணையுமாறு இராதையை வற்புறுத்துகின்றாள்.

பதினொன்றாவது அஷ்டபதி

ராகம் - கேதாரகௌளம்] தாளம் - ஆதி

பல்லவி

தீரஸமீரே யமுனாதீரே வஸதிவனே வனமாலீ

அனுபல்லவி

கோபீ பீன பயோதர மர்தன சஞ்சல கரயுகசாலீ ()

சரணங்கள்

1. ரதிஸுகஸாரே கதமபிஸாரே
மதன மனோஹர வேஷம்
ந குரு நிதம்பினி கமனவிளம்பனம்
அனுஸர தம் ஹ்ருதயேசம் (தீர)

2. நாமஸமேதம் க்ருதஸங்கேதம்
வாதயதே ம்ருது வேணும்
பஹுமனுதே நநு தே தனுஸங்கத
பவன சலிதமபி ரேணும் (தீர)

3. பததி பதத்ரே விசலதி பத்ரே
சங்கித பவதுப யானம்
ரசயதி சயனம் ஸசகித நயனம்
பச்யதி தவ பந்தானம் (தீர)

4. முகர மதீரம் த்யஜ மஞ்ஜீரம்
ரிபுமிவ கேளிஷு லோலம்
சல ஸகி குஞ்ஜம் ஸதிமிர புஞ்ஜம்
சீலய நீல நிசோளம். (தீர)

5. உரஸி முராரே ருபஹிதஹாரே
கனஇவ தரள பலாகே
தடிதிவ பீதே ரதிவிபரீதே
ராஜஸி ஸுக்ருதவிபாகே (தீர)

6. விகளித வஸனம் பரிஹ்ருத ரஸனம்
கடய ஜகனம் அபிதானம்
கிஸலயசயனே பங்கஜநயனே
நிதிமிவ ஹர்ஷ நிதானம் (தீர)

7. ஹரி ரபிமானீ ரஜனி ரிதானீம்
இயம் உபயாதி விராமம்
குரு மம வசனம் ஸத்வர ரசனம்
பூரய மதுரிபு காமம் (தீர)

8. ஸ்ரீ ஜயதேவே க்ருத ஹரிஸேவே
பணதி பரம ரமணீயம்
ப்ரமுதித ஹ்ருதயம் ஹரிமதிஸதயம்
நமத ஸுக்ருத கமனீயம் (தீர)

(இ - ள்.) அறிவைக் கொள்ளை கொள்ளும் அழகிய யமுனை நதிக்கரையின் உபவனத்தில் கோவையர் கனதனங்களைத் தடவும் இருகரங்களையுடைய வனமாலியான கண்ணன் வதிகின்றார்.

(1) காதல் ததும்பும் உள்ளத்துடனும் மதனைப் பழிக்கு மெழிலுடனும் திகழும் அந்த உனது ஹ்ருதயேசுவரனைச் சென்றடைவதற்குத் தகுதியான இந்த நேரத்தைப் பாழாக்காமல் விரைந்து போய் அவரது மனத்தை மகிழ்விப்பாயாக!

(2) வேணுகானம் செய்வான்போல அவன் அதில் உனது பெயரை ஜாடையாகக் கொடுத்து மெல்ல ஊதி அழைக்கின்றார் காண். நீ இருக்கும் திசையிலிருந்து காற்றினா லெழுப்பப்பட்டு வரும் தூளி (புழுதி)யையும் கௌரவித்தற்குரியதெனக் கருதுகின்றார்.

(3) பறவைகள் பறந்தாலும், சருகுகள் அசைந்தாலும், நீதான் வருகின்றாயோ என ஐயுற்று, அச்சத்தால் மருண்ட கண்களுடன் பூம்படுக்கையை நன்கமைத்துக்கொண்டு உன் (வரவை) வழியை நோக்கிக்கொண் டிருக்கின்றார்.

(4) (இதுபோன்ற அந்தரங்க கேளி காலங்களில்) பகைவனைப் போல் முறட்டுத்தனத்துடன் முணுமுணுக்கு மியற்கைக் குணமுள்ள காற்சிலம்பை அணிவதை விலக்கி யகற்று! (அக்கண்ணனுறையும்) இருள் கவிந்த பூப்பந்தருக்கு விரைந்து செல்! புறப்படும்பொழுது ஒரு கறுந் துகில் (போர்வை) கொண்டு உன்னை நன்றாய் மூடிக்கொள்!

(5) விபரீத ரதி கேளிகாலத்தில் முத்தாரம் புரளும் கறுமுகில்வண்ணனது மார்வத்தில் உனது முந்தை நல்வினைப் பெருக்கால் நீ களித்து விளையாடித் தவழ்ந்தால், வெள்ளிய நாரைகள் சார்ந்து பறக்கத் தண் முகிலூடே பளீரென மின்னும் மின்னற்கொடியை நிகர்ப்பாய்!

இவறலு மாண்பிறந்த மானமு மாணா வுவகையு மேத மிறைக்கு.

(6) ஒட்டியாணம் அரைஞாண் முதலியவற்றால் உனது அரைத்துகிலைப் பந்தித்துக் கொள்ளாமலும், கூச்சங் கொள்ளாமலும் மெல்லிய இளந்தளிர்களாலாய அமளியிற் சேர்ந்து (கண்ணனிடம்) யார்க்குங் கிடையாத பேரின்பப் புதையலைக் கைக்கொள்வாயாக.

(7) (முடிவாய்) கண்ணபிரான் கண்யம் பொருந்தியவரென்பதையும் உனக்கு வாய்த்த நல்ல இரவு நேரம் சுருங்கிவிட்டதையும் நினைந்து சீக்கிரத்தில் எனது வார்த்தையையும் மாதவன் மனோரதத்தையும் ஈடேற்றுவாயாக. பூர்த்தி செய்துவைப்பாயாக.

(8) நல்வினைப் பயனை விழைவோர்காள்! கிருஷ்ணபரமாத்மாவின் திருவடித் தொண்டில் ஈடுபட்ட ஜயதேவ கவியின் இவ்வழகிய வாக்கைக் கேட்டுச் சந்துஷ்டியடைந்த அக் கண்ணனை வணங்குங்கள் (எ - று).

மேல்வரும் நான்கு சுலோகங்களாலும்-தோழியானவள் கள்ள நாயகனையடையும்- நாயகியின் செயல்களை விவரிக்கின்றாள்.

சுலோகங்கள்

1. விசிரதி முஹு: ச்வாஸான் ஆசா:
புரோ முஹு ரீக்ஷதே
ப்ரவிஸதி முஹு: குஞ்ஜம் குஞ்ஜன்
முஹுர் பஹு தாம்யதி |
ரசயதி முஹு: சய்யாம் பர்யா—
குலம் முஹு ரீக்ஷதே
மதன கதன க்லாந்த: காந்தே
ப்ரியஸ் தவ வர்த்ததே ||

(இ - ள்.) ஹே ராதே-உனது நாயகன்-அடிக்கடி திக்குகளை நோக்கிப் பெருமூச்செறிப்பான்; அடிக்கடி தனக்கெதிரில் நோக்குவான்; அடிக்கடி புலம்பிக்கொண்டே பூம்பந்தர் மனைக்குட் புகுவான்; அடிக்கடி மிகவும் வெதும்புவான்; அடிக்கொருதரம் படுக்கையைச் சரிப்படுத்துவான்; அடிக்கடி கலக்கத்துடன் சுற்றும் பார்ப்பான்; இவ்விதமான மதனவஸ்தையில் உனது காதலன் திணறிக்கொண்டிருக்கின்றான் (எ-று.)

2. த்வத் வாக்யேன ஸமம் ஸமக்ரம் அதுனா
திக்மாம்சு ரஸ்தம் கத:
கோவிந்தஸ்ய மனோரதேன ச ஸமம்
ப்ராப்தம் தமஸ் ஸாந்த்ரதாம்;
கோகானாம் கருணஸ்வனேன ஸத்ருசி
தீர்கா மதப்யர்த்தனா
தன் முக்தே விபலம் விலம்பனம் அஸௌ
ரம்யோ பிஸார க்ஷண: ||

(இ - ள்.) உனது மொழியுடன் ஆதவன் முழுதும் அத்தமித்தான். (நீ பேசாமடந்தை போலிருப்பது அழகன்று). கோவிந்தனது மனமும் இருளும் நிறைந்துவிட்டது. சக்ரவாகப் புட்கள் புலம்புவதுபோல நெடுநேரமாய்ப்புலம்பி வேண்டிக் கொள்ளுகிறேன். ஆதலால் பயனின்றிப் பொழுதைப் போக்கிப் பிறகு அசடாக ஆகிவிடாதே. மாதவனிடம் செல்ல இதுவே அழகான பொழுதாகும் (எ - று).

3. ஆச்லே || ஷாதனு சம்பனுதனு நகோல்—
லேகாதனு ஸ்வாந்தஜ—
ப்ரோத்போதாதனு ஸம்ப்ரமாதனு ரதா
ரம்பாதனு ப்ரீதயோ: |
அன்யார்த்தம் கதயோ: ப்ரமான் மிளிதயோ:
ஸம்பாஷணைர் ஜானதோ:
தம்பத்யோ ரிஹ கோன கோன தமஸி
வ்ரீடா விமிச்ரோ ரஸ: ||

(இ - ள்.) இருளில் ஏதோ காரியமாய்ச் சென்றவர்களாயும், மயக்கத்தால் எதிர்ப்பட்டவர்களாயும், ஒருவர் ஸம்பாஷணையை ஒருவர் கேட்பதால் உள்ளக் கருத்தை யறிந்துகொண்டவர்களாயும், தழுவி முத்தாடி நகத்தாற் பரண்டி ஆசையை எழுப்பி பரபரப்புக்கொண்டு கூடி மகிழ்ந்தவர்களாயுமுள்ள தம்பதிகளின் (நாயக நாயகிகளின்) நாணஞ் செறிந்த ஒரு இன்பத்தை வர்ணிப்பது கூடுமோ? (எ - று).

4. ஸபய சகிதம் வின்யஸ்யந்தீம்
த்ருசம் திமிரே பதி
ப்ரதிதரு முஹு: ஸ்தித்வா மந்தம்
பதானி விதன்வதீம் |
கதமபி ரஹ: ப்ராப்தாம் அங்கை:
அனங்க தரங்கிதை:
ஸுமுகி ஸுபக: பச்யன் ஸ த்வாம்!
உபைது க்ருதார்த்ததாம் ||

(இ - ள்.) ஹே அழகிய முகத்தையுடைய ராதே! இருளில் அஞ்சித் தயங்கி வழியில் பார்வையைச் செலுத்துபவளாயும், அடிக்கடி மரத்தடிகள்தோறும் நின்று மெல்ல அடியெடுத்து வைப்பவளாயும், சிருங்கார ரஸம் நிறைகட்டி வந்தாற்போல-மெல்லிய அவயவங்களுடன் கஷ்டப்பட்டுத் தனிமையில் தன்னை வந்தடைந்தவளாயுமிருக்கும் உன்னைப் பார்த்துப் புண்யசாலியான அக் கண்ணன் நமது கருத்து நிறைவேறிற்றென்று உள்ளங்களிக்கட்டும். (எ - று).

மேல் சுலோகம் ஸர்க்கமுடிவில் அச்சுதனைத் துதிப்பது.

சுலோகம்

ராதா முக்த முகாரவிந்த மதுப:
த்ரைலோக்ய மௌளி ஸ்தலீ -
நைபத்யோசித நீலரத்னம் அவனீ -
பாராவதாராந்தக: !
ஸ்வச்சந்தம் வ்ரஜ ஸுந்தரீஜனம்மனஸ் -
தோஷப்ரதோஷ: சிரம்
கம்ஸத்வம்ஸன தூமகேது ரவது
த்வாம் தேவகீ நந்தன: ||

(இ - ள்.) இராதையின் மலர்ந்த தாமரை போன்ற முகத்தை விரும்பும் வண்டு போன்றவனும், மூன்று உலகத்தையும் நடித்து வைப்பதில் சிறந்த ஸூத்ரதாரனும் - அல்லது - மூன்று உலகிலும் பிறந்து வந்த ஆன்மகோடிகளுள் - முடிமேல் விளங்கும் உயர்ந்த இந்திர நீலக் கல்லைப்போலச் சிறந்து விளங்குபவனும்-புவிக்குச் சுமையாய் வருவோர்க்கு-அசுரர்க்கு முடிவைச் செய்யத் தன்னைத்தானே வந்தவனும், கம்ஸன் அழிவதற்குத் தூமகேதுப்போல் தோன்றியவனும், கோபிகைகளின் உள்ளத்தில் - களிப்பைப் பெய்யும் - களங்கமற்றவனும் தேவகியின் தவப் புதல்வனுமான - கேசவன் உன்னை (எல்லோரையும்) காக்கக் கடவன் (எ - று).

கிருஷ்ண பக்தரான ஜயதேவ மகா கவியால் செய்யப்பட்ட கீத கோவிந்தமென்னும் சிருங்கார மஹா காவியத்தில் அபிஸாரிகையை வர்ணிப்பதில் - கண்ணனது ஆவலைக் குறிக்கும் ஐந்தாவது ஸர்க்கம்

முற்றும்.

கிராமச் சீர்திருத்தம்

VILLAGE RECONSTRUCTION

இந்தியாவின் ஜனத் தொகை 35-கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இந்த 35 கோடி ஜனங்களில், 100-க்கு 9 பேர் வீதம் எழுத்துணர்ந்தவர்கள்; 100-க்கு 90 பேர் வீதம் கிராமவாசிகள்; 100-க்கு 73 பேர் வீதம் விவசாய விருத்தி யுடையவர்கள். நவீனகால அபிப்பிராயப்படி, நம் நாட்டுப்புறங்கள் எவ்விதத்திலும் முன்னேற்ற மடையவில்லை என்றே கூறவேண்டும். விசித்திரமான பருவகால வேறுபாடுகளாலும், திரவிய உற்பத்தி விஷயத்தில் ஒழுங்கான முறைகள் அநுஷ்டானத்தில் இல்லாமையாலும், இந்திய ஜனத்தொகையில் நான்கிலொரு பங்கினர், வருஷத்தில் பெரும்பாலான பகுதியில் ஒரு வேலையுமற்றுச் சோம்பியிருக்கின்றனர். வேலையில் ஈடுபடுபவர்களுக்குத்தானும் போதுமான வேலையில்லாமற் போகின்றது. இவற்றின் பயனாக, பொருள் உற்பத்திக் குறைவும், சம்பாத்திய சக்திக் குறைவும், மேனாடுகளில் கனவிலும் கருதப்படாத ஏழ்மையும் இந்தியாவில் பரவியிருக்கின்றன.

இந்தியாவில் கிராமச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றால், ஜப்பானியர் இதே விஷயத்தில் செய்துள்ள முயற்சிகளைப்பற்றி நாம் கவனிப்பது நலமாகும். ஒவ்வொரு ஜப்பானிய கிராமத்திலும், அந்த கிராமக் குடும்பத்தலைவர்களை வரும் சேர்ந்த ஒரு மத்திய சபை இருக்கும். அந்த மத்திய சபை, கிராமத்தில் விளைபொருள்களின் உற்பத்தியை விருத்திசெய்யவும், அதன் பொது நன்மைகளைக் கவனிக்கவும் முயற்சி செய்யும். இவற்றைப்பற்றி ஆலோசிக்கவும், பொதுச் செலவுக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்கவும், அந்த மத்திய சபை ஆறு மாதத்திற் கொருமுறை கூடும். அந்தக் கூட்டத்தில் வேலைத் திட்டமும், வரவு செலவுத் திட்டமும் ஆலோசிக்கப்படும். சபையின் அங்கத்தினர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படும். அதாவது ஒவ்வொரு குடும்பமும் அச்சபையின் நிதிக்கு, தன் வருவாய்க்கோ சம்பாத்தியத்துக்கோ ஏற்றபடி சந்தா அளிக்கும். விவசாய சம்பந்தமாக ஏற்படும் பொருளாதார விருத்தியைப்பற்றியோ, கைத்தொழில்களின் முன்னேற்றத்தைப் பற்றியோ இதர வியாபாரங்களைப்பற்றியோ கூறப்படும் ஒவ்வொரு ஆலோசனையைப் பற்றியும் அச்சபை ஆர அமர ஆராயும். கிராம முன்னேற்ற விஷயங்களைப்பற்றி ஆராய்ந்தறிந்த நிபுணர்களுடைய அபிப்பிராயங்களை அச்சபை உபயோகப் படுத்திக்கொள்ளும். கிராம முன்னேற்ற விஷயங்களைப்பற்றிப் பிரசங்கங்களும், சம்பாஷணைகளும், சந்தைகளும், பொருட்காட்சிகளும் நிகழ்த்தப்பெறும். மகாநாடுகளில்

349

தீர்மானிக்கப்பட்ட விஷயங்களை மத்திய சபை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்.

இப்படிப்பட்ட முறையை இந்தியாவில் மேற்கொள்வோமாயின் நலமுண்டாகும். இந்திய கிராமங்களில், ஒவ்வொன்றிலும் சராசரி 418 ஆட்களையுடைய 85 குடித்தனங்கள் இருக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த அளவையுடைய ஒரு கிராமம், விருத்தி முறைகளை கையாளத்தக்க ஒரு சங்கத்தின் வேலையை இயக்கும் சாதனங்களைப் பெறுதிருக்கக்கூடும். ஆனால் 500-க்கு மேற்பட்ட குடும்பங்களையுடைய கிராமங்களில் இவ்வேலைகளை முட்டின்றிச் செய்யவல்ல அங்கத்தினர்களையும், போதுமான திரவியத்தையும் சேகரிப்பது சிரமமல்ல. சிறிய கிராமங்களில் ஐந்து அல்லது ஆறு ஒன்றுகூடி, மத்தியமான கிராமத்தைப் பிரதம காரியாலயமாகக் கொண்டு இதே மாதிரியாக வேலை செய்யலாகும். இம்மாதிரி சேரும் பல கிராமங்கள் ஒரு மத்தியக் கௌன்சிலை ஸ்தாபித்துக்கொண்டு, அதன் நிர்வாக சபையின் உதவியும் அதிகாரமும்பெற்ற பிரதிநிதிகளைக்கொண்டு காரியங்களை அங்கங்கே நடத்தவேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்தினுடைய வரும்படியையும் ஆராய்ந்து அவ்வப்போது மதிப்பிட்டு வைக்கவேண்டும். இதனால்தான் அக்குடும்பத்தின் சம்பாத்தியச் சக்தியையோ நல்வாழ்க்கையையோ விருத்தி செய்வதற்கான முறைகளைக் கையாள முடியும். ஒரு குடியானவனுடைய குடும்பத்தின் வரும்படி, பொதுவாக மூன்று வகைப்பட்டதாகு மென்னலாம் :—

(1) விவசாய வருமானம் (2) கைத்தொழில்கள் இதர வேலைகள் முதலியன (3) கூலி வருமானம்.

ஒவ்வொரு பொருளைப்பற்றியும் ஒவ்வொரு வேலையைப்பற்றியும் குறிப்புகள் வைக்கவேண்டும். குடும்ப வரவு செலவு கணக்குக் கிரமமாக இருக்கவேண்டும். சங்கத்தின் உத்தியோகஸ்தர்களில் ஒருவர், வீடுவீடாக விசாரித்துக் கணக்குகளைப் பரிசீலனை செய்யவேண்டும். கிராம விருத்தி சரியாயிருக்கின்றதா என்று அறிய, ஒரு பதிவுப் புத்தகம் இருக்கவேண்டும். கிராம சங்கம், கிராமப் பொருளாதார விஷயங்களைப்பற்றிப் பிரசாரம் செய்யவேண்டும். பதிவுகளின் ஆவசியகம் விவசாயிகளுக்கு விளங்குமானால் அவர்களுடைய பிற்போக்கான கொள்கைகள் நீங்கும். புது விதங்களில் பொருள்களின் உற்பத்தியை விருத்திசெய்ய அவர்கள் முன்வருவார்கள்.

விவசாயத்தை விருத்தி செய்யவேண்டுமானால் பயிர் செய்யும் நிலங்களை அதிகப்படுத்த வேண்டும். அதற்குத் தக்கபடி ஏரிகள் கால்வாய்கள் கிணறுகள் முதலியவற்றை விருத்தி செய்ய வேண்டும். சொத்துக்களை உறுதிப்படுத்த வேண்டும்; விவசாயக் கடன் விஷயமாக வசதியேற்படுத்த வேண்டும். பயிரிடும் பொருள்களோடு பழங்கள் முதலிய லாபம் தரத்தக்க பொருள்களையும் பயிரிடவேண்டும். மேலான எருக்களையும் விதைகளையும் உபயோகிக்க வேண்டும். வெட்டுக்கிளி முதலிய பூச்சிகளை அழித்தொழிக்க வழி தேடவேண்டும். சாஸ்திரீய வழிகளிலும் ஐக்கிய சங்க முறைகளிலும் அவர்கள் பழகவேண்டும்.

இரண்டாவது விதமான வருமானத்தை விருத்திசெய்ய நூல் நூற்றல், நெசவு, பட்டுச்சிக்கறுத்தல், தச்சுவேலை, தோல் வேலை, குயவேலை, செங்கல் செய்தல், ரத்தன கம்பளம் செய்தல், பாய் பின்னுதல், கூடை வனைதல், கயிறு திரித்தல், பசு மாடுகளை வளர்த்தல் முதலியவற்றைப்பற்றி நன்றாகக் கவனிக்க வேண்டும். இவற்றையன்றி இதர நாடுகளிற் சிறிதளவு விஞ்ஞான சாஸ்திர ஞானத்தோடும் சாமர்த்தியத்தோடும்செய்யும் சில கைத்தொழில்களையும் கிராமவாசிகள் மேற்கொள்ளலாம்.

மூன்றாவது விதமான வருமானத்தை விருத்தி செய்ய ஆயுதம் முதலியன உபயோகத்துக்காகக் கடன் தரல், வெளி வேலை வீட்டு வேலைகள் செய்தல், எருவும் விறகும் சேகரித்தல் முதலியவற்றில் கவனம் செலுத்தினால் நலமுண்டாகும்.

இவற்றைப்பற்றி தீர விசாரணை புரிவதனால் ஏற்படும் விஷயங்களை யெல்லாம் தக்கவாறு பதிவு செய்து, கிராமவாசிகள் நன்கு உணரும் பொருட்டு அவ்வப்போது ஒரு பொதுவிடத்தில் பிரசுரஞ்செய்து விளம்பரப் படுத்தவேண்டும்.

ஒரு கிராமத்தில் வசிப்பவர்களில் வயது வந்தவர்களா யிருப்பவர்களுக்கு, போதுமான கல்வி யறிவையும், விடாமுயற்சி, நிதானமான வேலை முதலியவற்றைப்பற்றிய ஆவசியகத்தை

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

யும் செட்டுத்தனத்தையும், போதித்துவிட்டால் அவர்கள் தம் குடும்பத்தின் வருமானத்தை நன்கு கவனிப்பார்கள். கல்வி விஷயத்தில் சர்க்காரும் கிராமக் குடும்பத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். அவசியமான பிரசாரத்தையும் தன் கடமையையும் தவறாமல் செய்துவரக் கிராம முன்னேற்றச் சங்கம் எவ்விதத்திலும் உழைக்கவேண்டுப். ஒவ்வொரு கிராமவாசியும், பிறர் கையை எதிர்பாராமல், தன் காரியங்களைத் தானே செய்து கொள்ளவும், அதன்பின் பிறருக்கு ஒத்தாசை செய்ய முற்படவும் பழக்கப்படவேண்டும். வயது வந்த ஒவ்வொருவரும் தினமொன்றுக்கு 8 மணி வீதமும், வாரத்தில் 6 நாட்கள் வீதமும் சோம்பலின்றி வேலை செய்ய உற்சாகப்படுத்தப்படவேண்டும். வேலையின் தன்மையுப், அதைச் செய்யும் நேரமும் சமயோசிதம்போல் மாற்றப்படலாம். அறுவடை, ஏர் உழுதல் முதலிய காலங்களில் விவசாயி ஒருவன், அதிகாலையிலிருந்து மாலையில் அதிக நேரம் வரை வேலை செய்ய வேண்டியிருக்கின்றது. கிராமவாசிகள் ஒரு சீராக, தினந்தோறும் எட்டு மணிநேரம் வேலை செய்வதென்ற பழக்கத்தை உடையவர்களாயிருந்தால் இதனாலேயே அவர்கள் மிக முன்னேற்றத்தை யடைந்துவிடக் கூடும்.

ஒவ்வொரு குடும்பத்தின் பிள்ளைகளும் சிக்கனமாக இருந்து பொருளைச் சேமிக்கும் வழக்கத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் எப்போதும் லாபமற்றசெலவுகளுக்காக(உதாரணம்: கலியாணச்செலவுமுதலியன)வீணாகக் கடன் வாங்கவேண்டிய அவசியமிராது. கிராமவர்சிகள் அடிக்கடி இப்படிப்பட்ட கடனை வாங்குவதற்காகத் தம் நிலங்களை விற்றுவிடுகிறார்கள்; இன்றேல், முழுகிப்போகும் விதமாக அடமானம் போட்டுக் கடன் வாங்குகிறார்கள். அறுவடைக்காலம் முதலிய சமயங்களில், குடியானவர்கள் ஒருவருக்கொருவர் சகாயம் செய்துகொள்கின்றனரே யாயினும், அவர்கள் சகாய முறைகளைத் திட்டமாக ஒழுங்குபடுத்திக்கொண்டு ஒத்துழைக்கவேண்டும்.

ஒரு கிராமத்தில் சம்பாத்தியமுடைய குடிகளின் தொகையை விருத்திசெய்ய அவர்களை உபயோகமுள்ள கைத்தொழில்களிலும் வியாபார முறைகளிலும் உத்தியோகங்களிலும் பழக்க வேண்டும். இப்படிப்பட்ட பழக்கம் இந்தியாவில் ஒழுங்காக இதுவரையில் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் ஜப்பான் தேசத்திலோ, ஒவ்வொரு குடியானவனுக்கும் இவ்விஷயங்களில் தக்க வசதிகள் ஏற்பட்டுள்ளன. அறுவடை முதலான அதிக வேலையுள்ள காலங்களில் தவிர மற்றச் சமயங்களில் இராப் பள்ளிக்கூடங்களில் விவசாய விஷயமான கல்வி போதிக்கப்படுகின்றது. ஜப்பானில் கிராமக் கைத்தொழில்கள் விசேஷமாக ஆதரிக்கப்படுகின்றன.

இந்தியக் கிராமங்கள் முன்னேற்ற மடைவதற்கு முக்கியமான கருவி கல்வியேயாகும். ஜப்பானிய கிராமங்களில் வசூலாகும் வரிப் பணத்தில் 100-க்கு 60 வீதம் கிராமப் பாடசாலைகளுக்கென்றே செலவிடப்படுகின்றது.

தொழில் முறையான கல்வி கற்பிப்பதற்கு இராப் பாடசாலைகளும், வாசக சாலைகளும், ஊரூராகச் செல்லும் பாடசாலைகளும் ஏற்படுத்த நாம் மிகவும் முயற்சிக்க வேண்டும். காலக்கிரமத்தில் இவற்றோடு ரேடியோ, சினிமா முதலியவற்றையும் பயன் படுத்திக்கொள்ளலாகும். இவற்றில் சர்க்காரும் கிராமச் சங்கத்தார்களும் பொறுப்போடு ஒத்துழைக்கவேண்டும்.

இவற்றிற்கெல்லாம் அடிப்படையானது வருவாய் விருத்தியே யாகும். இது உறுதியாகும் பக்ஷத்தில் கிராம விஷயங்களில் எப்படிப்பட்ட காரியங்களையும் சாதித்துவிடலாம். இந்திய மாகாண சர்க்கார்கள் சுதந்தரமடைகின்ற காலத்தில், ஜப்பானில் இருப்பதுபோலக் கிராமங்களில் சுய ஆட்சியுண்டாகும்படி ஏற்பாடு செய்ய வேண்டும், தம் காரியங்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ளும் கிராமங்கள், ஒவ்வொரு துறையிலும் வெகு சீக்கிரத்தில் விருத்திக்கு வந்து தேசத்தின் க்ஷேமத்துக்குக் காரணமாகும்.

(மைசூர், மாஜி திவான், ஸர். எம். விசுவேசுரய்யா அவர்கள், 'நியூ இந்தியா' பத்திரிகையில் எழுதியது.)

1930-31-ம் வருஷத்தில் தபாலாபீசு மூலமாய் மணியார்டர்கள் :— உள்நாட்டு மணியார்டர்களும், அயல் நாட்டு மணியார்டர்களுமாக 390-லட்சம் மணியார்டர்கள் பட்டுவாடா செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு 86¼ கோடி ரூபாய். மணியார்டர் கமிஷனாக சர்க்காருக்கு வரும்படி 112-லட்சரூபாய். தந்தி மணியார்டர்கள் 9,72107. இவற்றின் மதிப்பு 7.3 கோடி ரூபாய். இவற்றின் கமிஷனாக 7.7 லட்ச ரூபாய் சர்க்காருக்கு வரும்படி கிடைத்துள்ளது.

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி னென்குற்ற மாகு மிறைக்கு.

✓மனிதனின் உண்மை உணர்ச்சி

MAN'S REAL FEELING

[ஸ்ரீமான் அ. இரத்தினசபாபதி அவர்கள்.]

"உண்மை உணர்ச்சி" ஆம்! மனிதனின் உண்மை உணர்ச்சியினைப்பற்றி ஒவ்வொரு மனிதனும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். மனிதனின் உண்மை உணர்ச்சி மிகவும் அருமையானது. எனவே அதைப்பற்றி இதன் கீழே சிறிது தருகிறோம்.

உலகில் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும், ஏனைய எல்லா உயிர்களையும்விட மேலானவனாகக் கருதப்படுகிறான். ஆம்! மனிதன் மேலானவனே! எதனால்? மற்றெல்லா உயிர்களிடத்திலும் காணப்படாத பகுத்தறிவு மனிதனுக் கிருப்பதால்! இத்தகைய உன்னதமான பகுத்தறிவைப் பெற்றிருந்தும் மனிதன் அதனைச் சரியான வழியில் உபயோகித்துப் பயனடைய வழி அறியாது தயங்குகிறான். பகுத்தறிவென்ற மேலான சக்தியொன்று தன்னிடமிருக்கின்றதென்பதையே அவன் மறந்துவிடுகின்றான்; அல்லது தெரிந்துகொள்ளாமலே போய்விடுகின்றான். பகுத்தறிவிற்கும் உண்மைஉணர்ச்சிக்கும் என்ன சம்பந்தமெனில், தனது பகுத்தறிவைச் செவ்வனே உபயோகிக்க எவன் கற்றுக்கொள்கிறானோ, அவனே, தன் மனதில் எழும் உணர்ச்சியின் உண்மையைக் கண்டுகொள்ள முடியும். எனவே முதலில் மனிதன் தன்னை மனிதன் என்று உணரவேண்டும்.

"என்ன! இதுவரையில் மனிதன் தன்னை மனிதன் என்று உணராமல் மிருகமென்றா எண்ணிக்கொண் டிருக்கிறான்?" என ஒரு சிலர் ஐயுறலாம். ஆனால் உண்மையில் மனிதன் தன்மை இன்னதென்பதையும், மனிதனது வல்லமை இவ்வளவென்பதையும் நன்றாகத் தெரிந்துள்ள மனிதர்கள் நம் நாட்டில் இப்பொழுது எங்கோ ஆயிரத்திற்கு ஒருவர்தான் இருக்க முடியுமென நாம் கூறினால், வாசகர்கள் பொறுமையுடன் அதைக் கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்! நம் நாட்டில் வாழும் 35 கோடி மக்களும் தம்மை மனிதரே! சர்வ வல்லமையுள்ள மனிதரே! என அறிந்துகொண் டிருப்பார்களானால், அந்தோ! நம் நாடு இன்று இந்நிலையில், - இந்த வறுமை நிலைமையில் பரிதாபகரமான இந்நிலையில்-இருக்கமுடியாதென்று நாம் துணிந்து கூறுவோம். ஒரு காலத்தில் இந்நாட்டு மக்கள் இவ்வுணர்ச்சியை அடைந்து, செயற்கரிய காரியங்களைச்செய்து எந்நாட்டினரும் மதிக்கும் நன்னாட்டினராய், வீரராய்த் திகழ்ந்த காலம் ஒன்றுண்டு. ஆனால் நாளாவட்டத்தில் இம்மனிதன் தான் மனிதன் என்ற உணர்ச்சியைப் படிப்படியாய் இழந்துவிடவே, கடைசியாக, இன்று ஏனையர் எள்ளி நகையாடும் நிலைமைக்கு வந்துவிட்டான். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!!

இப்படியாக மனிதன் தன் உணர்ச்சியை இழந்துவிட்டமைக்கு வருந்தி, மறுபடியும் அதனைப் பெற்று மேம்பாடடைய முயலுகையில், முதலாவது, இயற்கையாயுள்ள அந்த மேலான உணர்ச்சி தன்னிடமிருந்துமறைந்துவிட்டதற்கு எதுகாரணம் எனப் பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். இப்படி நோக்குங்கால், 'வழக்கம்' என்னும் வார்த்தையும், "ஊர் ஓடினால் ஒக்க ஓடு; ஒருவன் ஓடினால் கேட்டு ஓடு" என்பது போன்ற வார்த்தைகளுமே, மனிதனது உண்மை உணர்ச்சி அவனிடமிருந்து அடியோடகன்றுவிட்டதற்குக் காரணங்களாகும்

எவ்வாறெனில், அது மிக விரியும். எனினும் சுருக்கமாகக் கூறி விளக்குகிறோம். பகுத்தறிவும், மனிதனின் உண்மை உணர்ச்சியும் மிக நெருங்கிய சம்பந்தமுடையவை என்று நாம் மேலே கூறியுள்ளோம். வழக்கம் என்னும் வார்த்தைக்குட்பட்டு, தான் செய்யும் எதையும், அதன் காரண காரியங்களைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்தறியாது எதையும் ஒப்புக் கொள்வதால், இங்கு பகுத்தறிவென்பது உபயோகப் படுத்தப்படாது போகிறது. எனவே, அப் பகுத்தறிவின் செயலற்றுப்போன இடத்தில் உண்மை உணர்ச்சி ஆதிக்கம் பெறுவது முடியாத காரியமாகும்.

முதலில் மனிதன், தன் பகுத்தறிவுகொண்டு நல்லவற்றைச் செய்யவும், தீயவற்றை அகற்றவும் கற்றுக்கொள்ளவேண்டும். அப்படி நல்லவற்றைக் கைக்கொண்டு நடைமுறையில் கொண

செயற்பால செய்யா திவறியான் செல்வ முயற்பால தன்றிக் கெடும்.

ரும்பொழுது அவன் பல இடையூறுகளையும், கஷ்டநஷ்டங்களையும் எதிர்த்துப் போராட நேரிடும். மான அவமானங்களையும் பொருட்படுத்தாது வேலைசெய்ய நேரிடும். சிற்சில காரியங்களில் உயிருக்கும் ஆபத்து வரலாம். ஆனால் மனிதன் தான் செய்யும் காரியம், உண்மை, நேர்மை என்னும் அஸ்திவாரத்தைக் கொண்டது என்பதை நன்கறிந்து கொள்வானாயின் - உண்மை, நேர்மை ஆகியவற்றின் சக்தி எவ்வளவு வல்லமை யுடையது என்று தெரிந்து கொள்வானாயின் - ஆ! அப்பொழுது அவனே வீரனாவான்! எத்தகைய இடையூறுகளையும் பொருட்படுத்தாது, தான் எடுத்த காரியத்தைச் செய்து முடித்து புகழ்பெற்று விளங்குவான். ஆனால் இத்தனைக்கும் அடிப்படையாக அவன், நல்லது எது, தீயது எது என்பதைத் தன் பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்தறிவதும், 'நன்மை' அல்லது 'நல்லது' என்பதில் உண்மை, நேர்மை என்பவை எவ்வாறு ஒன்றாகக் கலந்து நிற்கின்றன வென்பதையும் கண்டு தெளிதல் அவசியமானதாகும். இவ்வாறு தெளிந்த பின்னர் தான், மனிதன் நற்காரியங்களில் ஊக்கங் குன்றாதுழைக்கும் வலிய மனோ தைரியத்தைப் பெறுகிறான். அதன் பின்னர் அம் மனோதைரியமானது அவனை எத்தகைய பெரிய எதிர்ப்புகளையும் லட்சியஞ் செய்யாது நல்லவற்றையே செய்யத் தூண்டித் துணைநிற்கிறது. எதனால்? சத்தியம், நேர்மை ஆகியவற்றின் மகத்தான பலம் எவ்வளவு என்று அவன் நன்கறிந்து கொண்டிருப்பதால்தான்!

உண்மை உணர்ச்சி எப்படி வெளிப்படுகிறது? இனி இவ்வுண்மை உணர்ச்சியின் செயல்கள் யாவை எனக் கூறுகிறோம். இவ்வுணர்ச்சியின் பயனாய், வீரம், அஞ்சாமை, தன்னம்பிக்கை, நன்மைக் குழைக்கும் ஆற்றல் முதலிய எழுகின்றன என்று முன்னே கூறியுள்ளோம். உலகில் வீரன் எனப்படுபவன் யாவன் என விளக்குமிடத்து, ஒரு பெரியார் பின்வருமாறு கூறியுள்ளார். "தன் கொள்கைகளுக்கிணங்கி நடக்கும் ஒரு கூட்டத்தாரிடையி லிருந்துகொண்டு, தன் கொள்கைகளின்படி நடப்பவனும், தன்னுடன் இருப்போர் தனது கொள்கையை ஆதரிக்காதது கண்டு ஏகாந்தமான காட்டையடைந்து அங்கு எவ்வித எதிர்ப்புமின்றித் தன்னந்தனியே தனது கொள்கைகளை அனுஷ்டிப்பவனும் வீரன் ஆகமாட்டான். ஆனால், தன் கொள்கையை ஆதரியாத ஒரு கூட்டத்தாரின் இடையி லிருந்துகொண்டு, வரும் இன்ப துன்பங்களைச் சட்டை செய்யாமல் தனது கொள்கையை அனுஷ்டிப்பவன் எவனோ அவனே உண்மை வீரனாவான்!"

ஆம்! உண்மை! உண்மை! இப்பெரியாரது பொன்னுரைகள் முற்றிலும் உண்மையே! தன் கொள்கைகளுக்கு மாறான கொள்கையுடையவர்களின் இடையே இருந்துகொண்டு, எதையும் லட்சியம் செய்யாமல் நடப்பவனே வீரன் என்பதை யாரே மறுக்கவல்லார்? அத்தகைய சந்தர்ப்பத்தில் அவ்வீரனுக்கு எவ்வளவோ எதிர்ப்புகளும் இடையூறுகளும் ஏற்படினும், அவன் அவை எல்லாவற்றையும் புன்னகையுடன் ஏற்றுக்கொள்வது எதனால்? "தான் செய்யும் காரியம் சத்தியமும் நேர்மையுமானது; சத்தியமும் நேர்மையும் அழிவற்றது" என்ற எண்ணம் அவன் மனதில் திண்ணமாய் ஊறிக்கிடப்பதால்தான்! அத்தகைய கொள்கை உள்ளவனிடத்தில்தான் சாத்மீகமும் அஹிம்சையும் உற்பத்தியாகின்றன! ஆ! அப்படியாயின் மனிதனின் உண்மை உணர்ச்சியின் நேர்மைதான் என்னே! இதுபற்றி இரண்டொரு உதாரணங்கள் கொடுத்து இக்கட்டுரையை முடிப்போம்.

பூமியின் வடிவம் உருண்டை என்பதை இக்காலத்தில் பாடசாலையில் படிக்கும் சிறுவனும் கூறக்கூடும் ஆனால், இப்பூமி தட்டையான வடிவமுடையது என மக்கள் எண்ணிக்கொண்டிருந்த காலம் ஒன்றுண்டு! உலகமக்கள் எல்லோரும் பூமியின் வடிவம் தட்டையென நம்பிக்கொண்டிருக்கையில் ஒரு பண்டிதன், பூமியின் உருவம் உருண்டையெனக் கண்டுபிடித்தான். ஆனால் அதுவோ, அவனைத் தவிர ஏனைய எல்லோரும் பூமி தட்டை வடிவமானதே என்று எண்ணிக்கொண்டிருந்த காலம்! அக்காலத்தில் அவன் தனது கொள்கையைத் துணிந்து வெளியிடவேண்டும்! இங்குதான் மனிதனின் உண்மை உணர்ச்சியின் வேகம் நன்கு விளங்குகிறது. தன் பகுத்தறிவுகொண்டு அப் பண்டிதன் உலக வடிவம் உருண்டை எனக் கண்டான். அது உண்மை என அவன் பகுத்தறிவு அவனுக்குணர்த்தினமையின் அவ்வுண்மை அழிவற்றது என்றும் கண்டான். எனவே, அவ்வுண்மையையே

வெளியிட்டான். உலகத்தார் அனைவரும் அவனை ஒரு பைத்தியக்காரன் எனக் கூறினர். அத் தேசத்து அரசாங்கத்தார், அவன் இயற்கைக்கு மாறானவற்றைப் பிரசாரம் செய்கிறான் என்றும், அவன் சாத்தானின் கையாளென்றும் கூறி அவனைத் தூக்கிலிட்டனர். அப்பொழுதும் அவ்வீரன் என்ன கூறினான்? 'நான் கண்ட உண்மைக்காக என் உயிரை இப்பொழுது கொடுக்கிறேன். என் உயிரை நான் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமாயின் எனது கொள்கையை மாற்றிக்கொண்டு, உலகம் தட்டை வடிவமே என்று கூறவேண்டும். ஆனால் நான் அவ்வாறு கூறப்போவதில்லை. நான் இப்பொழுதும் பூமியின் உருவம் உருண்டையே எனக் கூறுவதால், இதோ நான் உயிரிழக்கப் போகிறேன். ஆனால் நான் கூறும் செய்தியோ உண்மையானது. அது அழிவற்றது. எனவே, அதனைக் கூறும் என் சரீரம், இப்பொழுது அழிந்துவிடக் கூடுமாயினும், நான் கண்டு கூறிய இவ்வுண்மை அழியாத தன்மையுடையதாதலின், என்றேனும் ஒரு நாள், அது உலகில் நிலைநிறுத்தப்பட்டே தீரும்" என்றுதான் அவ்வீரன் கூறியிருக்க வேண்டும். அப்படியே அவன் இறந்த பின்னர், பல ஆண்டுகள் கழித்து, பூமியின் வடிவம் உருண்டையே என்று கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, உண்மைக்காகத் தனது உயிரைக் கொடுத்த அவ்வீரனை இன்று உலகோர் போற்றுகின்றனர். அவன் கண்ட உண்மை அழிவற்றதாதலின், இதே உலகில் இன்று பிரகாசிக்கிறது. "எல்லோரும் செய்தால் நாமும் செய்வோம், யாரேனும் முதலில் செய்யட்டும், நாம் பிறகு செய்வோம்" என்போர் இதனைக் கவனிக்கவேண்டும்.

ஏன் ?

WHY?

(ஒரு ஜனாசார நாடகம்)

[ஸ்ரீமான் பெ.கோ. சுந்தரராஜன் அவர்கள், பி. ஏ.]

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல; கால வகையி னானே"

நாடக பாத்திரங்கள்

ராமநாதய்யர்—ஒரு மிராசுதார்
மகாதேவய்யர்—உபகாரச் சம்பளம் பெறும் ஓர் உத்தியோகஸ்தர்
சுப்பிரமணிய சாஸ்திரி—ஒரு புரோகிதர்
கிருஷ்ணமூர்த்தி—மகாதேவய்யரின் ஒரே புத்திரன்
முத்துசாமி—கிருஷ்ணமூர்த்தியின் நண்பன்
ராமகிருஷ்ணய்யர்—சென்னையில் ஓர் உத்தியோகஸ்தர்
காமாக்ஷியம்மாள்—ராமநாதய்யர் மனைவி
மீனாக்ஷியம்மாள்—மகாதேவய்யர் மனைவி
லக்ஷ்மி—ராமநாதய்யரின் ஒரே புத்திரி
காமு, சாவித்திரி, சுப்பு, சீதா } — நான்கு பெண்கள்

இராமகிருஷ்ணய்யர் மனைவி, குஞ்சு, கிருஷ்ணமூர்த்தியின் மற்றும் பாத்திரங்களின் நண்பர் முதலானோர்.

நிகழிடம்:—ஒரு சிற்றூரிலும் சென்னையிலும்.

அங்கம் 1

காட்சி 1

[மாலை: மிராசுதார் ராமநாதய்யர் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை போட்டுக்கொண் டிருக்கிறார்.]

[பிரவேசம்—மகாதேவய்யர்]

மகாதேவய்யர்:— ஏது! ராமநாதய்யர்வாள்! என்ன ரொம்ப சாவகாசம்போல் இருக்கிறதே!

ராமநாதய்யர்:— வாங்கோ, வாங்கோ, உட்காருங்கோ, சாவகாசமென்ன. இப்பொழுதுதான் வயலுக்குப் போயிருந்தேன். இப்படி கொஞ்சம் சிரமபரிகாரம் செய்து கொள்ளலாமென்று உட்கார்ந்தேன்.

மகா:— அதிருக்கட்டும், ஏதோ சில நாட்களாய் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறீர்களே. என்ன மிராசுதாரரான உங்களுக்குக் கூடவா கவலை?

ராம:—என் சொல்ரேள். குழந்தை லக்ஷ்மிக்கு இப்பொழுதே 9-வயதாய்விட்டது. மாப்பிள்ளை தேடவேண்டியதுதானே.

மகா:—ஆமாம், நீங்கள் ஏன் இரண்டு மாதத்திற்கு முந்தியே விவாஹத்தை நடத்தவில்லை. இப்பொழுது பால்ய விவாஹத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டதே.

ராம:—மகாதேவய்யர்வாள்! நான் இந்தச் சட்டங்களுக்கெல்லாம் சிறிதும் பயப்படப்போவதில்லை. என்னுடைய சட்டம் சுருதியும் ஸ்மிருதியுந்தான். யாரோ வேலையில்லாதவர்கள் சட்டத்தைக் கொண்டுவந்தால் அதற்காக நம் தர்மத்தை நட்டாற்றில் விட்டுவிடுவதா? நீங்கள் என்னமோ கொஞ்சம் படித்தவர். சர்க்கார் உத்தியோகத்திலும் இருந்திருக்கிறீர். உங்களுக்கு அச்சட்டம் சகஜமாயிருக்கலாம்.

மகா:—அடடா அப்படிச் சொல்லிவிடாதீர்கள். சட்டம் என்னமோ நன்மைக்காகத்தான் வந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. இருந்தபோதிலும் எனக்கும் நம் சாஸ்திரங்களைத் திடீரென்று கை விட்டுவிட இஷ்டமில்லை. எனக்கும் ஒரு பெண்ணிருந்தால் இப்பொழுதே விவாஹம் செய்து ஜெயிலுக்குப் போவேன்.

ராம:—அதுதான் சரி, மகதேவய்யர்வாள்! நான் உங்களைக் கேட்பதற்குக் கொஞ்சம் பயப்பட்டுக்கொண் டிருந்தேன். இப்பொழுது நீங்களும் என் அபிப்பிராயத்துட னிருப்பதால் குழந்தை லக்ஷ்மியைத் தங்கள்பிள்ளை கிருஷ்ணமூர்த்திக்குக் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். ஆனால் நான் ஜெயிலுக்குப் போவதால் உம்மையும் இழுக்கிறேனென்று நினைக்கவேண்டாம்.

மகா:—அதெல்லாம் ஒன்றுமில்லை. இம்மாதிரி முதலில் இரண்டுபேர் 'சத்தியாக்கிரகம்' செய்தால்தான் மற்றவர்களும் பின்பற்றுவார்கள்.

ராம:—ஆமய்யா! என்னமோ, நேற்றுப் பிறந்த பையன்களெல்லாம் கதரைக் கட்டிக்கொண்டு கதறுகிறார்கள்; உடனே கடுங்காவல் தண்டனை பெறுகிறார்கள்; விடுதலை யடையும்போது, தேசாபிமானிகளும், தலைவர்களு மாய்விடுகிறார்கள். எனக்கு மதாபிமானமே தேசாபிமானத்திலும் சிறந்ததென்று படுகிறது.

மகா:—ஆனால் இந்த விவாஹத்தைப்பற்றி என்னுடைய நிலைமையோ உங்களுக்குத் தெரியும். கிட்டு இப்பொழுதுதான் காலேஜியில் முதல் வருஷம் படிக்கிறான். தவிர, கோர்ட்டு தாவா வேறே இருக்கிறது.

ராம:—அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். எனக்கு லக்ஷ்மி ஒரே குழந்தை; என்னுடைய சொத்து எல்லாம் நான் கட்டிக் கொண்டு போகப்போகிறதில்லை.

மகா:—ஆனால் சாஸ்திரிவாளிடம் ஜாதகத்தைக் காண்பிக்கலாமே.—

(பிரவேசம்: சுப்ரமணிய சாஸ்திரி.)

அடடா! உங்களுக்கு நூறு ஆயுசு, வாங்கோ, இப்பொழுதுதான் உங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

சாஸ்திரி:—என்ன போங்கோ, எனக்கு ஒழிவிறதேயில்லை. காலையில் எதிர்த்தாத்துலே சிராத்தத்திற்குப் போயிருந்தேன். அதுக்கப்புறம் அடுத்த தெருவில் விவாஹ விஷயமாய்ப் போயிருந்தேன்.

மகா:— நாங்களும் விவாஹ விஷயமாய்த்தான் பேசிக்கொண் டிருந்தோம். சாஸ்திரிவாள்! என்னுடைய பையன் ஜாதகத்தையும், ராமனுதய்யர் குழந்தை லக்ஷ்மி ஜாதகத்தையும் கொஞ்சம் பார்க்கவேண்டும்.

சாஸ்:—அடடா அதற்கென்ன! அப்படியே. ஆனால், என்ன ராமனுதய்யர்வாள், தங்கள் குழந்தைக்கு 9 வயதுதானே ஆகிறது. அதற்குள் எவளோ ஒருத்தி சாரதாளாமே என்னமோ சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறாளாமே.

ராம:—சாரதா என்பது பெண்ணல்ல ஐயா. அவர் சட்ட சபை அங்கத்தினர். அவர் பெயர் சாரதா என்பது.

சாஸ்:—அது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். ஒன்று மாத்திரம் நிச்சயம். கலியுகம் முடிவுபெறுகிறது. அதனால்தான் இப்படித் துர்க்குணங்களெல்லாம் தோன்றுகின்றன. உபநிஷத்திலே ஏழாம் அத்தியாயத்திலே, பதின்மூன்றும் சலோகத்திலே சொல்லுகிறார் -

மகா:—சாஸ்திரிகளே, நாங்கள் இரண்டு பேரும் 'சத்யாக்ரகம்' செய்யத் தீர்மானித்துவிட்டோம். நீங்கள்தான் விவாஹத்தை நடத்திவைக்கவேண்டும். பகவத் கிருபையை முன்னிட்டு நடத்தப்படும் விவாஹம், சர்க்காரால் அழியப்போவதில்லை.

சாஸ்:—இதென்ன வேடிக்கையாயிருக்கிறது. பகவான் போட்ட முடிச்சை அவிழ்க்க, கேவலம் மனிதனால் முடியுமா? என்ன 2 அல்லது 3 வருஷம் ஜெயிலுக்குப் போகப் போகிறோம். எப்படியும் விவாஹம் விவாஹந்தான். அதை நிறுத்த சர்க்காரால் முடியப்போவதில்லை. ஆனால் நான் புரோகிதரா யிருந்தால் எனக்கும் தண்டனை ஏற்படும். நான் கொஞ்சம் பிள்ளை குட்டிக்காரன். என்னமோ பார்த்துக்கொள்ளுங்கள். உங்களைத்தானே ராமனதைய்பர்வாள்!!

ராம:—அதெல்லாம் என்னிடம் விட்டுவிடுங்கள். நான் இதோ குழந்தை ஜாதகத்தை எடுத்துக்கொண்டு வருகிறேன்.

(உள்ளே செல்கிறார்.)

மகா:—சாஸ்திரிவாள்! பையன் கொஞ்சம் படித்தவன்; சென்னையில் இருந்திருக்கிறான். ஆகையால் விவாஹ விஷயமாய்க் கொஞ்சம் தொந்தரவு கொடுப்பான். நீங்கள்தான் அவனுக்கு உபதேசிக்கவேண்டும்.

சாஸ்திரி:—அதற்கென்ன! ஆனால் ஒன்று சொல்லுகிறேன். இந்த ஆங்கிலப் படிப்பே நம்முடைய தர்மத்தைபெல்லாம் கெடுக்கின்றது. பிராமணனுடைய குலதர்மத்தைப்பற்றி ஸ்மிருதியிலே -

(ஜாதகத்துடன் வருகிறார்.)

ராம:—சாஸ்திரிவாள்! இதுதான் குழந்தை லக்ஷ்மியின் ஜாதகம்.

மகா:—சாஸ்திரிகளே! ஆத்துப்பக்கம் வாங்கோ. கிட்டு ஜாதகத்தையும் கொடுக்கிறேன்.

ராம:—ஆனால் மகாதேவய்யர்வாள்! இந்த விஷயம் ஆத்துலே தெரிந்தால், அவள் உத்திரவு கொடுப்பாளோ என்னமோ தெரியவில்லையே. ஜெயிலென்றால் பயப்படுவாளே.

மகா:—இந்த சட்டத்தைப்பற்றி ஒன்றும் ஆத்தில் சொல்லவேண்டாம். எல்லாம் போலீஸ்காரன் நம்மை ஜெயிலுக்கு அழைக்கும்போது பார்த்துக்கொள்ளலாம். ஏனெனில் கொஞ்சமேனும் தடையின்றி விவாஹம் முடிந்து, சத்யாக்ரகத்தையும் பூர்த்தி செய்யவேண்டும். சாஸ்திரிகளே! வாங்கோ போகலாம், பையன் லீவுக்கர்க நாளைக் காலையில் வருகிறான். சரி போய் விட்டு வருகிறேன்.

ராம:—அடடா, நல்லது, நல்லது—சாஸ்திரிகளே ஜாதகத்தைக் கொஞ்சம் கவனமாய்ப் பாருங்கோ. (போகிறார்.)

காட்சி 2

[ராமநாதய்யர் வீட்டு உட்புறம். ராமநாதய்யர் மனைவி, தன் குழந்தை லக்ஷ்மிக்குத் தலை வாரிப் பின்னல் போட்டுக் கொண்டிருக்கிறாள். பிரவேசம்: ராமநாதய்யர் - அவர் மனைவி எழுந்து நிற்கிறாள்.]

ராம:—அடியே! நான் நேற்று மகாதேவய்யருடன் விவாஹ விஷயமாய்ப் பேசி முடித்துவிட்டேன். இன்னமே கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்ய வேண்டியதுதான். அப்பளம், வடாம், பக்ஷணம் முதலியவைகள் செய்ய நாளைக்கே ஆரம்பித்துவிடு. அதோடே, மகாதேவய்யர் ஆத்துக்குப் போய் புடவை, நகை முதலியவைகளைப் பற்றி விவரமாய்ப் பேசி முடித்துக்கொண்டுவா.

மனைவி:—ஆம், மொதல்லே ஜாதகம் பொருந்தவேண்டாமா?

ராம:—அதற்குத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன் (திரும்பிப் பார்த்து) அடடா சாஸ்திரிவாள், வாங்கோ! ஜாதகம் எப்படி?

(சாஸ்திரி வருகிறார்.)

சாஸ்திரி:—ஐயர்வாள்! உங்க அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இந்த இரண்டு ஜாதகங்களையும் போல், இவ்வளவு திருப்தியாய்ப் பொருந்ினது நான் இதுவரையில் பார்த்ததேயில்லை.

ராம:—அடி! சாஸ்திரிவாளுக்கு வெற்றிலை பாக்கு கொண்டுவா! லக்ஷ்மி, சாஸ்திரிக்கு நமஸ்காரம் பண்ணு.

லக்ஷ்மி:-(இதுவரையில் பொம்மைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தவள்) என்னப்பா? எனக்கா கல்யாணம்? மாப்பிள்ளை எங்கே? மேளத்தைக் காணோமே.' இரு, அப்பா, என் பட்டுப் பாவாடையைக் கட்டிக்கொண்டு வருகிறேன்.

(உள்ளே ஓடுகிறாள்.)

[ராமநாதய்யர் மனைவி கொண்டுவந்த தாம்பூலத்தை தக்ஷிணையுடன், (ஒரு சுலோகத்தை முணங்கிக்கொண்டே) சாஸ்திரி எடுத்துக் கொள்ளுகிறார்.]

சாஸ்:—பாருங்கோ, அதிலே-அதுதான் அந்தப் பையன் ஜாதகத்திலே, கும்பத்திலே குரு இருக்கிறான். அதோடே, ஏழாம் வீட்டுக்குடையவன், ஜன்ம லக்னாதிபதியைப் பார்ப்பதினால் கோசார பலன் -

லக்ஷ்மி:—(பட்டுப் பாவாடையுடன் ஓடிவந்து) அப்பா, மேளம் வந்துவிட்டதா? அம்மா, பாட்

டுப் பாடுவதற்கு ஒருவரும் காணுமே. அடுத்தாத்து விசாலத்தைக் கூட்டிக்கொண்டு வரட்டுமா ?

ராம - மனைவி:—லக்ஷ்மி, இந்தப் பக்கம் வா, உனக்கு ஒண்ணும் தெரியாது. இன்னும் ஒண்ணுமே சரியாக ஏற்பாடாகவில்லையே. கொஞ்சம் இரு, இன்னும் ஒரு வாரத்தில் உனக்குக் கல்யாணமாகிவிடும்.

லக்ஷ்மி:—என்னம்மா! இன்னும் என்ன வேணும். வாத்தியார் இருக்கார்; நீயும் அப்பாவும் இருக்கேள்; மாப்பிள்ளையும் மேளமும் தானே வேணும்.

ராம:—லக்ஷ்மி! மேளக்காரன் ஊரிலில்லையாம். இன்னும் ஒரு வாரத்திற்கு அப்புறந்தான் வருவானம். அவன் வந்த பிறகு உனக்குக் கல்யாணம் செய்யலாம்.

லக்ஷ்மி:—ஆனா, இப்போ நலுங்கு மாத்திரம் வச்சுக்கலாமே.

சாஸ்திரி:—(மூட்டையைக் கட்டிக்கொண்டு) குழந்தைதானே, அப்படித்தான் பேசும் ஐயர்வாள், இன்றைக்கு எட்டாவது நாள் காலை பத்து நாழிகைக்குள், கடக லக்கினம் மிகவும் சுபம்.

ராம:—சரி, அன்றைக்கே முகூர்த்தம் வைத்துக்கொள்ளலாம்.—ஏது புறப்பட்டுவிட்டீர்கள், சரி, நல்லது. (சாஸ்திரி போகிறார்.) ஏண்டி அடியே, நீ மகாதேவய்யர் ஆத்துக்குப் போய், அவர் கொஞ்சம் ரூபாய் அதிகமாய்க் கேட்கிறார், - அதைக் கொஞ்சம் அவர் மனைவியிடம் சொல்லிச் சரிப்படுத்திக்கொண்டு வா.

மனைவி:—சரி இதோ போகிறேன்.

லக்ஷ்மி:—அம்மா நானும் வருவேன்.

மனைவி:—அங்கே வந்து கூச்சல் போடக்கூடாது. அந்த அம்மாமி பிள்ளை வந்தால், என் பின்னால் வந்து ஒளிந்துகொள்ளவேண்டும். வா போகலாம், அந்தப் பொம்மையை வைத்துவிட்டு வா.

(போகிறார்கள்.)

காட்சி—3

[மகாதேவய்யர் வீட்டு உட்புறம்]

[அவர் குமாரன் கிருஷ்ணமூர்த்தி, ஒரு சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொண்டு ஒரு பத்திரிகையைப் படித்துக்கொண் டிருக்கிறான். லக்ஷ்மி ஓடிவருகிறாள்.]

லக்ஷ்மி:—மாமா-அத்திம்பேரே - அத்தான்-எனக்கும் உங்களுக்கும் கல்யாணமாம். எனக்கு நல்ல ரப்பர் பொம்மை வாங்கிக் கொடுத்தால் தான் நான் நலங்கிடுவேன்.

கிரு:—(நியூஸ்பேப்பரைக் கீழேபோட்டுவிட்டு) லக்ஷ்மி! இந்தா கிறுக்குத்தனமாய் உளருதே. ரப்பர் பொம்மை வாங்கித் தருகிறேன். கல்யாணமென்று உனக்கு யார் சொன்னா?

லக்ஷ்மி:—ஏன், எனக்குத் தெரியாதோ? எங்காத்திலே வாத்தியார் வந்து சொல்லி விட்டுப் போனாரே. மேளம் வந்தவுடனே கல்யாணந் தான்.

கிரு:—(ஒரு புறமாய்) அடடா, என்ன பாதகம்! விவாஹமென்ற பதத்திற்கே பொருள் தெரியாத குழந்தைக்கு இம்மாதிரி எண்ணங்களை மனதிலூட்டிக் கெடுக்கின்றார்களே.

லக்ஷ்மி:—என்ன மாமா—சீ—அத்திம்பேரே என்ன சொல்றேள். நான் உங்களை எப்படிக் கூப்பிட்றது? எங்கம்மா அம்மாமியோடே அடுக்குள்ளே பேசிண்டிருக்கா. எனக்குப் பச்சை மேகவர்ணப் புடவையும், சில்க் ரவிக்கையும் வாங்கப் போறாளாம் அம்மாமி.

கிரு:—லக்ஷ்மி! இந்தா கண்டபடியெல்லாம் உளருதே; வெளியில் போய் விளையாடிவிட்டுவா.

லக்ஷ்மி:—மாட்டேன், உங்களோடுதான் விளையாடுவேன். நம்ப ரெண்டு பேரும் நலுங்கு வச்சு விளையாடலாம்.

கிரு:—சரி; அதெல்லாம் நாளைக்காகட்டும். அதோ பார், அம்மா வந்திருக்கிறாள்.

ல-தாயார்:—(ஓர் மூலையிலிருந்து மெதுவாக) ஏண்டி லக்ஷ்மி, வாடி இப்படி. வெட்கமில்லே கொஞ்சங்கூட! வாடி இந்தப் பக்கம்! கழுதை.

லக்ஷ்மி:—(உரத்த குரலில்) அம்மா உன் மாப்பிள்ளை, எனக்கு ரப்பர் பொம்மை வாங்கித் தர்ரேன்னு சொன்னா!

(ல-தாயார், அவளை இழுத்துக்கொண்டு வெளியே போகிறாள்.)

[கிருஷ்ணமூர்த்தி, சிறிது நேரம் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு,ஆழ்ந்த யோசனையுடன் உட்கார்ந்துகொண் டிருக்கிறான். பிரவேசம்—மகாதேவய்யரும் சாஸ்திரியும்.]

மகா:—கிட்டு! சாஸ்திரிகள் வந்திருக்கிறார். ஜாதகங்கள் பொருந்திவிட்டதாம். அடுத்த

புதன் கிழமையன்று முகூர்த்தம் நிச்சயித்திருக்கிறது.

கிரு:—(எழுந்து நின்றுகொண்டு) ஜாதகங்கள்! முகூர்த்தம்! எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

மகா:—ராமனாதய்யர் இருக்கிறாரோ இல்லையோ; அவருடைய பெண்ணை உனக்குக் கொடுப்பதாக நிச்சயித்திருக்கிறது.

கிரு:—யார்? அந்தப்பால் மணம்மாறாத குழந்தையையா? நீங்கள் சொல்வது உண்மையா?

சாஸ்திரி:—ஏண்டாப்பா கிட்டு, கல்யாணமென்று மங்களமாய்ப் பேச வரும்போதே கோபிச்சிக்கிறையே. பெரியவாள் சொல்வதைக் கேட்டுக்கொள்.

கிரு:—சாஸ்திரிகளே! எனக்கு நீர் புத்திமதி சொல்லவேண்டாம். அப்பா, நீங்கள் சாரதா சட்டம் இருப்பதை அறிந்திருப்பீர்களே. ஏதோ சிலர் சட்டம் அமுலுக்கு வருமுன் விவாஹங்களை முடித்தார்கள். இப்பொழுது சட்டம் அமுலுக்கு வந்துவிட்டதே. தவிர, என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாமல் முகூர்த்தம்நிச்சயித்துவிட்டீர்களே. அப்பா, நான் உம்மை எதிர்த்துப் பேசுகிறேனென்று நினைக்கவேண்டாம். முதலில் எனக்கு விவாஹத்திற்கே இஷ்டமில்லை. இரண்டாவதாக, ஒன்றும் தெரியாத குழந்தையை ஆயுள் முழுவதும் கட்டிப்போடுவது எனக்குச் சற்றும் நியாயமாகத் தோன்றவில்லை.

சாஸ்:—பார்த்தேளா, காலேஜ் படிப்பின் லாபத்தை! வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதைதான். இதெல்லாம் தெரியாமலா யயாதி புத்திரன் புரூவைப்பற்றி எட்டாம் சுலோகத்தில் ஆசார்யாள் -

மகா:—கிட்டு, சட்டத்தின் உண்மை எனக்குத்தெரியும். ஆனால் நம்முடைய தர்மத்தையும் மதத்தையும் கைவிடலாமா? கேவலம், சர்க்காரால் செய்யப்பட்ட ஒரு சட்டத்திற்குப் பயந்து கடவுள், வேதம், சாஸ்திரம் எல்லாவற்றையும் கைவிட்டுவிடுவதா? நம் தேசம் உற்பத்தியானது முதல், பால்ய விவாஹம் நடக்கவில்லையா? அதனால் என்ன தீங்கு விளைந்தது? நான் இன்னும் சிறிது காலமே உயிருடன் இருக்கப் போகிறேன். அதற்குள் நான் நம்பும் தர்மத்திற்காக, நான் கொஞ்சமாவது தியாகம் செய்யவேண்டாமா? நீ படித்த இங்கிலீஷ் படிப்பிலும் ஒருவன், தான் மனப்பூர்வமாய் நம்பும் விதிகளையே கடைப்பிடிக்கவேண்டும் என்று சொல்லப்படவில்லையா? நான் உனக்கும் லக்ஷ்மிக்கும் விவாஹத்தை முடித்து, ராமநாதய்யருடன் சிறைக்குப் போவதென்று துணிந்துவிட்டேன். நான் என் தர்மத்திற்காக செய்யப்போகும் தியாகத்திற்காக என் புத்திரனாகிய நீ, உன்னுடைய கடமையைத் தவறாது செய்யவேண்டும்.

கிருஷ்:-[கண்களில் நீர்ததும்பக் கேட்டுக்கொண்டிருந்தவன்] அப்பா நீங்கள் சொல்வதில் சில உண்மையே. ஆனால் ஒரு சிறு குழந்தையை சம்சார சாகரத்தில் மூழ்குவிக்கும் மதத்தை நீங்கள் நம்புகிறீர்கள். அப்பா, நம் ஹிந்துமதத்தில் அப்படிப்பட்ட கொடிய விதியும் இருக்குமென்று நான் நம்பவில்லை. இவ் வழக்கமெல்லாம் ஜனங்களே, தங்கள் சௌகரியத்திற்காக, காலத்தை அநுசரித்துச் செய்துகொள்ளப்பட்டவை. விவாஹம் என்றால் விளையாட்டு என்று நினைத்துக் கொண்டிருக்கும் சிறு குழந்தையான லக்ஷ்மியையா? அந்தோ! பாவம். எத்தனை பெண்கள் தங்களுடைய கடமைகளையும் பொறுப்பையும் சரிவர உணராமல் ஒவ்வொருவரும் இரண்டு மூன்று குழந்தைகளுடன் கஷ்டப்படுகிறார்கள். அப்பா! இப்பொழுது நீங்கள் கடைப்பிடிக்கும் ஒரு மார்க்கத்திற்காக, எனக்கு லக்ஷ்மியை விவாஹம் செய்வித்தால் இன்னும் சில வருஷங்களுக்குப் பின் ஒரு குழந்தையுடன், நான் மாதம் 25 ரூபாய் வேலைகூட கிடைக்காமல் அலைவேன் என்பதையும் நினைத்துப் பாருங்கள். விவாஹ வாழ்க்கை எவ்வளவோ பொறுப்பையுடைய ஆசிரமம்! ஏன், நம் மதத்தின் கிரகஸ்தாசிரம விதிகளில், ஒரு கிரகஸ்தன் தன்னுடைய கடமைகளைச் சரிவரத் தெரிந்துகொண்டு நடக்கவேண்டுமென்று கூறப்படவில்லையா? ஒரு சிறு குழந்தையை மனைவியாக அடைந்து நான் இல்லற தர்மத்தை எப்படி நடத்தக்கூடும்? மேலும், நீங்கள் நம்பும் ஒரு விதிப்படி நீங்கள் நடக்க விரும்பினால், அதே மாதிரி நானும் என்னுடைய முழு நம்பிக்கையுள்ள ஒரு மார்க்கத்தைப் பின்பற்ற உரிமையுள்ளவனன்றோ?

மகா:—கிட்டு, நீ சிறுவன். உனக்கு உலகானுபவம் போதாது. ஏதோ சில ஆசார சீர்திருத்தப் புலிகள் அதிகப்பிரசங்கித்தனமாய் உளறி

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்.

னால் அதை நீ நம்புகிறாய். நமக்கு நம்முடைய பழைய சுருதி ஸ்மிருதிகளே விதிகள்.

கிரு:—அப்பா நீர் சொல்வது முற்றிலும் தவறு. தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் மற்றவர்கள் சொல்வதினால் இப்படிப் பேசவில்லை. விவாஹம் நடந்தால் கஷ்டப்படுபவன் நானல்லவா? விவாஹமான மறு நிமிஷமே, பெற்றோரைப் பறிகொடுத்து, சம்சார சாகரத்தின் நடுவில் உதவியின்றி, தலைவனைச் சிறைக்குப் பறிகொடுத்த தாயார் ஒருபுறம் துக்கமுற, ஒன்றும் தோன்றாது ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாமல் கட்டுப்பட்டுத் தத்தளிக்கும் சிறு தம்பதிகளின் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை ஆலோசித்துப் பாருங்கள். மேலும், என்னை சிறுவனென்றீர். உலகானுபவம் தெரியாத சிறுவனுக்கு மணம் புரிவித்தால் அவனுக்கு இல்லற தர்மம் கிஞ்சித்தேனும் தெரியுமா? பாவம், குழந்தை லக்ஷ்மிக்கு ஒன்றுமே தெரியாது. அவளுக்கு விவாஹத்தின் பொறுப்பு தெரிய சில ஆண்டுகள் செல்லும். அவளுக்கு நீங்கள் விவாஹம் செய்வித்தால், அது சிசுஹத்திக்கும் மேலான பாவமாகும். இது நிச்சயம்.

சாஸ்:—நான் அப்பொழுதே சொன்னேனே! விவாஹத்திற்கெல்லாம், பையனுடைய உத்தரவைக்கேட்டால் இப்படித்தான் வியாக்கியானம் பேசுவான். என்னப்பா, கிட்டு, எங்களுக்கெல்லாம் தெரியாதது உனக்குத் தெரிந்துவிட்டது! எனக்கு என்ன சிரத்தை; இதோ இவ்விவாஹத்தை முடித்துவிட்டு நானும் ஜெயிலுக்குப் போகப்போகிறேன். ஏன்? அது என் மதாபிமானம்.

கிரு:—ஓஹோ! மதாபிமானம் சொர்ண புஷ்பமும் தக்ஷிணையுடன் தாம்பூலமும் கேட்கிறதோ? நீர் ஜெயிலுக்குப்போனால் சாதாரண தக்ஷிணைக்குமேல் இரட்டிப்பு வாங்கப்போகிறீர். கஷ்டப்படப் போகிறவன் நானன்றோ! என்னைப்பற்றிக்கூட எனக்கு அதிக கவலையில்லை. பாவம் பச்சைக் குழந்தை லக்ஷ்மியல்லவோ பரிதவிப்பாள். அப்பா! இவ்விவாஹத்திற்கு அம்மா எப்படி சம்மதித்தாள்! இச்சட்டத்தின் விஷயம் தெரிந்திருந்தால் சம்மதித்திருக்க மாட்டாளே.

மகா:—கிட்டு, அதெல்லாம் உன் வேலையல்ல. உன் தாயாரும் விவாஹத்திற்குச் சம்மதித்து வேண்டிய வேலைகளைச் செய்கிறாள். உன்னுடைய படிப்பை யெல்லாம் அவளிடம் சொல்ல வேண்டாம். அவளிடம் சட்டத்தைப் பற்றிய சங்கதியும் ஒன்றும் சொல்ல வேண்டாம். எனக்கு வேலையிருக்கிறது. சரியாய் ஆலோசித்து நீ எனக்குச் செய்யவேண்டிய கடமையைத் தவறாது செய்.

[சாஸ்திரியும் மகாதேவய்யரும் போகிறார்கள்.]

[கிட்டு அப்படியே சிறிது நேரம் அசைவின்றி நிற்கிறான். அங்குமிங்கும் போகிறான். நாற்காலியில் உட்காருகிறான்.]

கிரு:—(திடீரென்று எழுந்து) ஆம்! அம்மாளிடம் உண்மை முழுவதையும் தெரிவித்தே இத் தர்ம சங்கத்திற்கு வழிதேடவேண்டும் அம்மா! அம்மா! (போகிறான்.)

காட்சி - 4

[மகாதேவய்யர் கையில் விசிறியுடன் ஒரு புத்தகத்தைப் படித்தவண்ண மிருக்கிறார்: அவர் மனைவி வேகமாய் வருகிறாள்.]

மகா:—எங்கே போய்விட்டு வருகிறாய்?

மனைவி:—எங்கே போவா? உங்க சம்மந்தியாத்துக்குத்தான்.

மகா:—என்ன, கல்யாண விஷயமாகவா? பேஷ்! அந்தப் பயல் கிட்டு என்னமோ உளறினானே.

மனைவி:—ஆம், கால்யாணத்தை நிறுத்துவதற்காகத்தான் போயிருந்தேன்.

மகா:—(திடுக்கிட்டு) என்ன, என்னடி உளறுகிறாய்? கல்யாணமாவது நிறுத்துகிறதாவது! இப்போ சாஸ்திரி வரப்போகிறார். மாங்கல்ய தாரண விஷயமாய்ப் பேசவேண்டும்: ஓடுகிறையே!

மனைவி:—ஐயோ! போருமே! கல்யாணமும் கல்லெடுப்பும். தாலியைக் கட்டிவிட்டு நீங்க ரெண்டுபேரும் ஜெயிலில் போய் உட்காருங்கோ. கல்யாணம் ரொம்ப அழகாய் நடக்கும். காமாக்ஷியிடம் இந்த சட்டத்தைப்பற்றி எல்லாம் சொல்லிவிட்டேன். நன்னாருக்கு. இது ஒண்ணுதான் குறைச்சல்.

(போகிறாள்.)

மகா:—அடி, இந்தாடி, இந்தா, இங்கே - (விழிக்கிறார்) அட எழவு சனியனே! அந்தப் பயல் சொல்லிவிட்டான்போலே இருக்கு. இன்னமே கல்யாணம் நடந்தாப்பிலேதான்.

(சாஸ்திரி பிரவேசம்.)

சாஸ்:—எல்லாம் நிச்சயித்துவிட்டேன். சரி

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல் தன்மையு ளெல்லாந் தலை.

யாய் 10 நாழிகைக்குள் மாங்கல்யதாரணம் ஆகவேண்டியதுதான். ஆனால் - ஏது ஒரு மாதிரி இருக்கேள் !

மகா:—சாஸ்திரிகளே, ஒன்றும் நடக்காதுபோல் தோன்றுகிறது. அவளுக்குச் சட்டத்தைப்பற்றியெல்லாம் தெரிந்துவிட்டது. அவள் கல்யாணத்தை நிறுத்திவிடுகிறேனென்று சொல்லுகிறாள். யார் அங்கே, அடே இராமநாதய்யரே வந்துவிட்டாரே.

இராம:—(பிரவேசம்) என்னையா மகாதேவய்யரே! ஒன்றும் நடக்காதுபோலிருக்கே. தாலி கட்டியதும் ஜெயிலுக்குப்போவது அபசகுனமென்று அவள் சொல்லுகிறாள். எனக்கும் அதைப்பற்றிக் கவலையாய்த்தானிருக்கிறது. அதோடேகூட அவளோடு எதிர்த்துப் பேச நான் தயாராயில்லை.

மகா:—நானும் அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். விவாஹம் நின்றுவிடும்போல்தான் இருக்கிறது.

சாஸ்திரி:—(திடுக்கிட்டு) அடடா, அப்படிச் செய்துவிடாதீர்கள். நம் தர்மத்திற்கே கேடு வந்துவிடும். பெண்புத்தி, பின்புத்திதானே. அப்படித்தான் சொல்லுவார்கள்.

(கிருஷ்ணமூர்த்தி வருகிறான்.)

கிரு:—சாஸ்திரிகளே - பத்திரம். யாருடையது பின்புத்தி என்பதை இன்னும் சிறிது நேரத்தில் அறிவீர். மற்றவரைத் தூஷிக்கவேண்டாம். அப்பா, நான் எல்லா விஷயத்தையும் அம்மாவிடம் சொல்லிவிட்டேன். நீங்கள் தயவுசெய்து என்னை இவ்விவாஹத்திற்கு வற்புறுத்தாமலிருக்கவேண்டும்.

மகா:—கிட்டு, கோபித்துக் கொள்ளாதே உன் இஷ்டப்படியே செய்யலாம்.

சாஸ்:—(புறப்பட்டுக்கொண்டே) நான் இன்று வீட்டைவிட்டு புறப்படும்போதே ஒரு பூனை குறுக்கிட்டது. அபசகுனம் சரி! இந்த அநியாயத்திற்கெல்லாம் பகவான் இருக்கிறார்.

கிரு:—விவாஹமானதும் ஜெயிலுக்குப் போவது சுபசகுனமோ? இம்மாதிரி சிறு குழந்தைகளை அழிப்பதற்குப் பகவானைத் துணையழைக்காதீர், ஜாக்கிரதை.

இராம:—சரி, ஐயர்வாள் எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது. போய் வருகிறேன்.

(போகிறார்.)

சாஸ்திரி:—(ஒருபுறமாய்) புலிகள்! இவர்கள்தான் சத்யாக்ரகம் செய்யப் போகிறவர்களாம்! சிறு பையன் பேச்சைக் கேட்டுக்கொண்டு விவாஹத்தை நிறுத்திவிட்டார்கள். சரி, நம் தர்மம் அழியப்போகின்றது. அவ்வளவுதான். நான் இன்று காலையில் பார்த்தது நல்ல முகமில்லை போலிருக்கிறது.

(போகிறார்.)

சி று வ ர் க் கா ன ப க் க ங் க ள்

CHILDREN'S PAGES

தாமஸ் ஆல்வா எடிஸன்

கிராமபோன், பயாஸ்கோப் முதலிய மின்சார சக்தி சம்பந்தமான பல நூதன விஷயங்களைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிஸன் தமது 84-ம் வயதில், 18-10-1931-ல் காலமானது எல்லோருக்கும் தெரியும். இப் பெரியாரின் சரித்திரம், சிறுவர்க்கும் ஊக்கமூட்டுமாதலால், அதை சுருக்கமாய்க் கீழே தருகிறோம்.

தாமஸ் எடிஸன், இளமையில், பத்திரிகை விற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். இப்போது உலகத்தின் பெரியார்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஒஹியோ மாகாணத்தில் 1847-ம் வருஷத்தில், ஏழைப் பெற்றோர்களின் பிள்ளையாகப் பிறந்தார். தமக்குப் பதினோரு வயதாகும்போது, குடும்ப செலவுக்காக வெளிச் சென்று பணம் சம்பாதிக்க அனுமதி வேண்டுமென்று தம் தாயை வேண்டினார். ரெயில்களில் சென்று பத்திரிகைகள், மெழுகுவத்திகள் முதலியவைகள் விற்றுக்கொண்டிருந்தார். அமெரிக்காவில் உள்நாட்டுச் சண்டை நடைபெற்றபோது, இவர் யுத்தச் செய்திகள் நிரம்பிய ஒரு பத்திரிகையின் ஆயிரம் பிரதிகள் வாங்கி அதிக விலைக்கு விற்றுவிட்டார். இதனால் கிடைத்த இலாபத்தைக் கொண்டு, ரசாயனப் பொருள்களை வாங்கி, ஒரு ரசாயனச் சாலை வைத்தார். உபயோகப்

படுத்தப்படாத ஒரு ரெயில்வே கம்பார்ட்மெண்டில் இச்சாலை அமைக்கப்பட்டது.

தாமஸ் எடிஸனுக்குப் பதினேந்து வயதாகும் போது, "கிராண்ட் ட்ரங்க் ஹெரால்டு" என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகைக்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் தாமே எழுதி அச்சிட்டு வெளியிட்டு வந்தார். அன்றாடச் செய்திகளைத் தமக்கு அனுப்பும்படி, தந்திச் சேவகர்களுக்கு லஞ்சம் கொடுத்து வரவழைத்துக் கொண்டார். ஒருநாள் இவருடைய ரசாயனச்சாலை அமைக்கப்பட்டிருந்த ரெயில் வண்டியானது, சிறிது ஆட்டங் கொடுத்தது. எனவே, இவருடைய ரசாயனச் சாலையிலிருந்த ஒரு கந்தகப்புட்டி கீழேவிழுந்து பற்றிக்கொண்டது. ரெயில் கார்டுக்குக் கோபம் வந்து, எல்லாப் புட்டிகளையும் கீழே விசிறி எறிந்துவிட்டு, தாமஸ் எடிஸனைக் காதைப்பிடித்து இழுத்தார். இதன் பயனாக, எடிஸன் பின் காலத்தில் செவிடாராய்ப் போனார். தந்தியடிக்கும் குமாஸ்தா ஒருவருடைய குழந்தையை, ஒரு தரம் தாமஸ் எடிஸன் காப்பாற்றினார். அதற்குப் பதிலாக, எடிஸன் அவரிடமிருந்து தந்தியடிக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டார். இதனால் ரெயில்வேயிலேயே இராத்திரிக் காலங்களில் தந்திபடிக்கும் குமாஸ்தா வேலை யொன்று கிடைத்தது. இக்காலத்தில் இவர், பகல் பொழுதை, ரசாயனப் பொருள்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்து வந்தார். இராக்காலங்களில், சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக ரயில் போக்கு வரத்துகளைத் தெரிவிக்க ஒரு கருவியைக்கண்டு பிடித்தார். ஆனால் ஓர் இரவு இவரையும் அறியாமலே தூங்கிவிட்டார். இதனால் இரண்டு வண்டிகள் மோதிக் கொள்ளக் கூடிய நிலையி லிருந்தன. இஞ்சின் ஓட்டிகளின் சாமர்த்தியத்தினால், இந்த ஆபத்து தவிர்க்கப்பட்டது. இதைக் கண்டு எடிஸன் பயந்து உத்தியோகத்தை விட்டு ஓடிவிட்டார்

அதற்குப் பிறகு 5-வருஷம் அங்கு மிங்குமாகத் திரிந்து கொண்டிருந்தார். பிறகு 'டேப் மிஷன்' என்ற ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். ஆயினும், ஜீவனத்திற்கு வழியின்றி, நியூ யார்க்குக்கு வந்துசேர்ந்தார். அங்கே, ஒரு கம்பெனியின் வாயிலில் திரளான ஜனக்கூட்டம் இருந்ததைக் கண்டார். காரணம் என்ன வென்பதை விசாரிக்க, அக் கம்பெனியிலுள்ள தந்திக் கம்பிகள் கெட்டுப் போயிருகின்றன வென்று தெரிந்து கொண்டார். கம்பெனியார் மிகுந்த கலக்கத்தி லிருந்தனர். தாமஸ் எடிஸன், அக் கம்பெனி ஆபீசுகளுள் நுழைந்து, தாம் அவைகளைச் சீர்ப்படுத்தித் தருவதாகக் கூறினார். அப்படியே சீர்திருத்திக் கொடுக்க, கம்பெனியார் சந்தோஷப்பட்டு, மாதம் 300 டாலர்கள் சம்பளத்தில் இவரை அக் கம்பெனியிலேயே உத்தியோகத்தி லமர்த்திக் கொண்டனர். இக் கம்பெனியி லிருந்துகொண்டு, முன்னர் தம்மால் கண்டுபிடிக்கப்பட்ட 'டேப் மிஷன்' என்ற இயந்திரத்தைச் சீர்திருத்தி அமைத்துக்கொண்டார். இதன் பதிவு உரிமைக்கு எவ்வளவு தொகை வேண்டுமென்று கம்பெனியார் எடிஸனைக் கேட்டார்கள். ஆயிரம் பவுன் கேட்பது அதிகமோ என்று எடிஸன் தயங்கினார்.

இவருடைய மௌனத்தைக் கண்ட கம்பெனியார் 8,000 பவுன் கொடுத்தால் உங்களுக்குத் திருப்தியா யிருக்குமா வென்று கேட்டு, அத்தொகையைக் கொடுத்தார்கள். பிறகு, தந்திப் போக்கு வரத்து சம்பந்தமாகப் பலவற்றையும் டெலிபோனையும் அவர் கண்டுபிடித்தார்.

இவருடைய பரிசோதனைகள் சில, இவருக்குப் பல துன்பங்களை உண்டாக்கி யிருக்கின்றன. மின்சார விளக்கு சம்பந்தமான ஆராய்ச்சிக்காக இவர் 20,000 பவுன் செலவழிக்க வேண்டி யிருந்தது. 6000 வகையான செடி கொடிகளை இவர் பரிசோதிக்க வேண்டி யிருந்தது. கடைசியிலேயே இவர் வெற்றிபெற்றார். இதுபோன்ற பல ஆராய்ச்சிகளைச் செய்து இவர் வெற்றி பெற்றிருக்கிறார். இவரது ஆராய்ச்சியின் பயனாக ஏற்பட்டிருக்கும் கைத்தொழில்களின் மதிப்பு 3,120,000,600 பவுன் என்று மதிப்பிடப்பட் டிருக்கிறது.

இப்பெரியார், தினந்தோறும் மிகக் குறைவான ஆகாரத்தையே சாப்பிடுவார். நாடோறும் 3 அல்லது 4-மணி நேரமே தூங்குவது வழக்கம். இவர் அநேக சமயங்களில், தமது பெயரையே மறந்திருக்கிறார். இவர் மிகுந்த எளிய உடையே தரிப்பது வழக்கம். இவர் மதுபானத்தை அறவே ஒழித்தவர். இப்பெரியாரின் சரித்திரம் சிறுவர்க்கு ஒரு நல்ல விருந்தாகும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சிறுமிகளுக்கேற்ற கைத்தொழில்கள்

[ஸ்ரீமதி ஆர். ரங்கமணி அம்மாள்.]

நம் தேசத்தில், பெண் கல்வி விசேஷமாக விருத்தியடையாமலிருப்பதும் தவிர, கல்வி கற்பிக்கும் ஸ்தாபனங்களெல்லாம் எழுதப்படிக்கப் போதிப்பதோடு நின்றுவிடுகின்றன. நம் பெண் குழந்தைகள் வீட்டில் அடைபட்டிருப்பதை விட்டு, பள்ளிக்கூடங்களில் அடைக்கப்பட்டு சிறிதுகாலம் எழுதவும் படிக்கவும் கற்றுவைக்கப் படுகிறார்கள். பரீக்ஷைகள் தேறின பிற்பாடு, சிறுவர்களைப் போலவே அவர்களும் புஸ்தகப் படிப்புப் படித்து உயர்தரக் கல்வி பயிலுகிறார்கள். தேகப் பயிற்சிக்கும் கைத்தொழில்களுக்கும் ஸாதனமில்லை. ஆனால், நம் தேசத்தில் பெண்களை, வீட்டு அலுவல்களுக்கும் தண்ணீர் கொண்டுவருவது முதலிய வேலைகளுக்கும் ஈடுபடுத்துவதால் அவர்களுக்கு ஒருவாறாக தேகப் பயிற்சிக்கு இடமேற்படுகிறது. மேல் நாடுகளில் சிறுமிகள் வீட்டு வேலைசெய்ய அவகாசமிராதென்று தெரிகிறது. அவர்கள் அது காரணத்தாலேயே பந்தாட்டம் முதலிய விஷயங்களில் ஈடுபடுகிறார்கள். நம் தேசத்திய தேசாசாரமே ஸ்திரீகள் குடும்ப வேலைக்காரிகள் என்று தோன்றும்படியான விதிகள் ஏற்படுத்தியிருக்கிறதினால் தேகப்பயிற்சிக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் நாட்டில் சிறுமிகள் ஸ்வல்ப காலத்திலேயே கல்வியை நிறுத்திவிடுவதினால், அதற்குள் ஏதாவது ஜீவனோபாயத்தை ஏற்படுத்தக்கூடிய தொழில்கள் பள்ளிக்கூடங்களிலேயே கற்றுவைத்தால் அவை அவர்களுக்குப் பின் காலத்தில் உபயோகமாயிருக்கும். பள்ளிக்கூடங்களில் குடும்ப நிர்வாக விஷயமான பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்பதும் எல்லோராலும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் நம் நாட்டில் கல்வியில்லாத ஸ்திரீகள்கூட சிறு வயது முதற்கொண்டே குடும்பப் பொறுப்பு, குடும்ப நிர்வாகம், கணவனது க்ஷேமத்தைக் கருதுதல் இம்மாதிரி நல்ல குணங்களை ஏற்றுக்கொள்வதால், இம்மாதிரி பயிற்சிக்குக்கூட நம் கல்விச் சாலைகளில் அவசியமில்லையென்று தோன்றுகிறது. கல்வியேற்பட்டால், குடும்ப நிர்வாகமும் சிக்கனமும் இயற்கையாக குடும்பப் பொறுப்புள்ள நம் நாட்டு ஸ்திரீகளுக்கு ஸ்வபாவமாகவே ஏற்பட்டுவிடும். ஆனதினால் சிறிய கைத்தொழில்களை பயிர்ச்சிப்பதுதான் சிறுமிகளுக்கு மிகவும் அவசியமென்பது எனதபிப்பிராயம்.

இம்மாதிரி கைத்தொழில் பயிற்சிக்கு சர்க்கார் ஆதரவு கிடைப்பது சுலபமல்ல. இவ்விஷயங்களை அந்தந்தக் கல்விசாலைகளின் நிர்வாகிகள் உற்சாகத்தோடு ஏற்றுக்கொண்டு, பள்ளிக்கூட நேரங்களைத் தவிர மற்ற காலங்களிலும், விடுமுறை நாட்களிலும் பயிற்சி செய்வித்தால்கூட போதும். மைசூர் பெண்கள் காலேஜில், ஸங்கீதம் பள்ளிக்கூடகாலத்திற்குப் பிறகு சாயந்திரம் நடத்தப்படுகிறதை கவனித்திருக்கிறேன். மிஷன் பாடசாலைகளில் அநேக சிறு தொழில்கள் கற்பிப்பதையும் பார்த்திருக்கிறேன். இவைகள் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களில் சேர்ந்தவைகள் அல்ல. மற்றப்படி ஸ்தல ஸ்தாபனங்களாலும் சர்க்காராலும் முனிசிபாலிடிகளாலும் ஏற்படுத்தப்படுகிற பெண் பாடசாலைகளில், தையல் முதலிய அவசியமான விஷயங்கள்கூடக் கற்பிப்பதில்லை. சில தாலுகா போர்டு பாடசாலைகளில், கொஞ்சகாலமாக தையல்வேலை கற்பிக்க மனுஷ்யர்களைத் தேடுகிறார்கள். ஆனால் அது வெகு ஸ்வல்பமாகவேயிருக்கிறது.

என்னுடைய அபிப்பிராயப்படி நம் தேசத்தில் ஸ்திரீகள் அடைந்திருக்கும் ஸமூக நிலைமையைக் கவனிக்கும்போது, சாதாரணமாக வீட்டிற்குள் இருந்துகொண்டு அவர்கள் ஏதாவது சிறு தொழில்கள் செய்து காலக்ஷேபம் செய்யக்கூடிய முறைகள் ஏற்படவேண்டும். சில இனத்தார்கள் வெளியில் போய் கூலிவேலை செய்கிறார்கள். சில தொழிலாளிகளுடைய கூட்டத்தைச் சேர்ந்த ஸ்திரீகள், அந்தந்தத் தொழில்களில் புருஷர்களுக்கு அநேகவிதமான ஒத்தாசை செய்கிறார்கள். இவர்களுடைய விஷயத்தைப்பற்றி இந்த வியாஸத்தில் நான் குறிப்பிடவில்லை. ஆனால் இவர்கள் தொகை நாளுக்கு நாள் குறைகிறதென்கிற கவலைமாத்திரம் எனக்கு ஏற்படுகிறது. வீட்டிற்குள்ளிருந்துகொண்டு ஸ்திரீகளே யாருடைய ஸகாயமுமில்லாமல் செய்யக்கூடிய தொழில்களையும் அந்தந்த தொழில்கள்

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே கெடுக்குந் தகைமை யவர்.

எந்தெந்தப் பிரதேசங்களிலிருக்கிறதோ அங்கே பாடசாலைகளில் அவைகளைக் கற்பிக்கவேண்டுமென்பதுதான் எனதபிப்பிராயம். ஒரு குடும்பம் இம்மாதிரி சிறிய தொழில் ஒன்றில் காலக்ஷேபம் செய்துவந்தால், அந்தக் குடும்பத்திலுள்ள சிறுமிகள் தானாகவே அவசியத்தையும் ஸகவாஸத்தையும் உத்தேசித்து அந்தத்தொழிலிலீடுபடலாம். இதற்குப் பள்ளிக்கூடப் பயிற்சியே தேவையில்லை. ஆனால் அதே சமூகத்தில் செல்வந்தர்களாக விருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுமிகள், இம்மாதிரித் தொழிலை லக்ஷ்யம் செய்யமாட்டார்கள். பள்ளிக்கூடங்களில் இம்மாதிரிப் பயிற்சியிருந்தால்தான் இதை ஒரு உத்சாகத்தோடு எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, பணக்காரர்களாக விருந்தாலும் சரி, அதைப் பயிலுவார்கள். காலக்ஷேபத்திற்காகப் பிறகு உபயோகப்படுத்துகிறவர்கள் அதை ஜீவனோபாயமாக உபயோகிக்கக்கூடும். மற்றவர்கள் இவைகளின்பேரில் ஆதரவு காட்டுவார்கள். அவர்கள் இந்தக் கைத்தொழிலையே நாகரிகமாகவும் நுட்பமாகவும் ஏற்படக்கூடிய முறையில் விருத்திசெய்வார்கள்.

கர்நூல், பல்லாரி முதலிய ஜில்லாக்களில் மகம்மதிய ஸ்திரீகள் கோஷாக்களாகவிருந்து வீட்டிற்குள்ளிருந்துகொண்டு வெகு நேர்த்தியான ஜமக்காளங்கள் நெய்துவிடுகிறார்கள். இந்த தாலுகாவில் முகமதிய ஸ்திரீகள் கோஷாக்கள் வீட்டிற்குள் ளிருந்துகொண்டு இளம் குருத்துகளான பனை ஓலைகளைக்கொண்டு அநேக வர்ணங்களும் கொடுத்து பாய்கள் செய்து, தாங்கள் உபயோகப்படுத்துவதும் தவிர கிரயத்திற்கும் விற்கிறார்கள். பரதஸ்திரீகள் இந்தப் பனங்குருத்தால் அழகான பெட்டிகள் தயார்செய்கிறார்கள். அவைகள் சிலோன் முதலிய விடங்களில் ஆதரிக்கப்படுகின்றன. மேல்நாட்டார்கூட இந்தப் பெட்டிகளை விரும்புகிறார்கள். ஆனால் இது ஒரே ஒரு கிராமத்தில் மாத்திரம் தயாராகிறது. சில நாடார் ஸ்திரீகள்கூட இதே மாதிரி பனங்குருத்துகளால் சிறிய பெட்டிகள் தயார்செய்து ஸ்வல்ப தொகைக்கு விற்றுவருகிறார்கள். அவை மோட்டாவாக விருக்கிறது. ஆனாலும் புதிதாகப் பார்க்கிறவர்களுக்குப் பிரியத்தைக் கொடுக்கிறது. சிலவிடங்களில் ஸ்திரீகள் வாஸனைத் திரவியங்கள் ஊதுவர்த்திகள் செய்கிறார்கள். மைசூர் வில்லைகள் ஸ்திரீகளால் தயார் செய்யப்படுகிறதை நான் பார்த்திருக்கிறேன். நம் நாட்டில் புதுச்சேரி பொம்மைகள், பண்ருட்டி பொம்மைகள் என்று நவராத்திரி காலத்தில் விற்கவரும் பொம்மைகள் ப்ரவின பிற்பாடு, பீங்கான் பொம்மைகள் நம் தேசத்தில் அதிகமாக ஆதரிக்கப்படுவதில்லை இந்தத் தொழில் விருத்தியானால் ஜனங்களுக்கு பிரியத்தைக் கொடுக்கக்கூடிய அநேக விதமான உருவங்கள் செய்யப்படலாம்.

சில இடங்களில் பாய்த்தொழில், பிரம்புத்தொழில், நார்த்தொழில், வலைகள் பின்னுவது இம்மாதிரி ஸ்திரீகள் செய்கிற அநேக தொழில்களும் இருக்கின்றன.

மேலே சொன்ன பிரகாரம் எந்தெந்தத் தொழில்கள் எந்தெந்தப் பிரதேசங்களிலிருக்கின்றனவோ அந்தப் பிரதேசங்களிலுள்ள பெண்கள் பாடசாலைகளில் அவைகள் கற்பிக்கப்பட்டால், நம் தேசத்தில் ஸ்திரீகளிடத்தில் கைத்தொழில் விருத்தியாகும். பொருளாதார நிலைமை விஷயம் ஒருபுறமிருக்க, கைத்தொழிலின் பேரில் ஒரு பற்றுதல் ஏற்படும். நம் ஸ்திரீகள் வீண்பொழுது போக்கும் ஸமயங்களை இவைகளில் உபயோகப்படுத்துவார்கள். நான் ஸ்திரீகளுக்கேற்ற சில தொழில்களைப்பற்றி தனித்தனியாக எழுத உத்தேசித்திருக்கிறேன்.

அநேக பெண் பாடசாலைகளில் தையல்கூட கற்பிக்கப்படாமலிருப்பது வருந்தத்தக்கது. பாடங்களைவிட கைத்தொழில் முக்கியம் என்பது எனது அபிப்பிராயம். முக்கியமாக உயர்குலத்தோர்தான் இந்த விஷயத்தில் குற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக விருக்கிறார்கள்.

மற்ற இனத்தோர்களில் எவ்வளவு செல்வந்தர்களாக இருந்தாலும் கைத்தொழில்களைக் கேவலமாக நினைக்கிறதில்லை. உயர்குலத்தைச் சேர்ந்தவர்களில் அநேகர் தங்களுடைய ரவிக்கைகளைத் தாங்களே தைத்துக்கொள்வதைக் கேவலமாக நினைக்கிறவர்கள்கூட யிருக்கிறார்கள். மற்ற இனத்தோர்கள் கைத்தொழில்களுடைய மதிப்பை அறிந்திருக்கிறார்கள். கைத்தொழில்கள் பேரில் நாளுக்கு நாள் நம் தேசத்தில் பற்றுதல் குறைந்திருப்பதினால் கைத்தொழில்களினால் ஜீவனத்தை நடத்திக்கொண்டு வந்த அநேக இனத்தோர்கள் தங்களுடைய தொழிலுக்கு ஆதரவில்லாமல் அவஸ்தைப் படுகிறார்கள்.

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்.

கைத்தொழிலினுடைய மதிப்பைக் கவனிக்கும்படியான ஒரு மனோபாவம் ஏற்படவேண்டும். சீனக்காரர்கள் காகிதத்தால் ஏதாவது விளையாட்டுச் சாமான்கள் செய்துவந்து விற்றால் அதை விசேஷமாக வாங்குகிறோம். அது எவ்வளவு சுலபமான காரியம், நாம் செய்து பார்ப்போமென்கிற எண்ணம் நமக்குத் தோன்றுவதில்லை. நம் தேசத்தார்கள் ஏதாவது சிறிய தொழில் முறைகளில் சாமான்கள் செய்துவந்தால் அதை நாம் கவனிப்பதேயில்லை. நெல் குத்தக் கூட மனுஷ்யர்களைத் தேடுவதைவிட்டு யந்திரங்களைத் தேட ஆரம்பித்துவிட்டோம். இதனால் சரீர சிரமத்தால் ஸம்பாதிப்பவர்களுக்கு வழிகள் குறைந்துவருகின்றன.

மேலே சொன்ன காரணத்தினால் சிறுவயதிலுள்ள பெண்களுக்கு பள்ளிக்கூடங்களில் தொழில்களுடைய மதிப்பைப் புகட்டினால், பலர் பிற்காலத்தில் அவைகளால் ஜீவிப்பார்கள்; சிலர் அவைகளை ஆதரிப்பார்கள்; பொதுவாக கைத்தொழிலின்பேரில் ஒரு பற்றுதலும் மனோபாவமும் ஏற்படும்.

அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதி

"விக்டர் ஹ்யூகோ" என்னும் மிக்கப் பிரஸித்திபெற்ற பிரெஞ்சு நூலாசிரியரின் நூல்களுள் தலைமை வகிப்பதான, "லேஸ் மிஸரபிள்ஸ்" என்னும் நூலைத்தழுவி, தமிழன்பர்களால் போற்றப்பட்ட ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., அவர்களால் எழுதப்பட்டது. (முதல் பாகம், பல அழகிய போடோ படங்களுடன், ஏற்கெனவே வெளிவந்துள்ளது. விலை ரூ. **1—8—0**. "விவேக போதினி" சந்தாதார்க்கு ரூ. **1—4—0**.

AMBALAVANAN or THE GALLEY SLAVE

An Adaptation of Victor Hugo's Immortal
Master-piece "Les Miserables"

(By Sriman P. S. SUBRAHMANYAM, M. A.)

[Author of very popular Tamil Works, (1) "The Mystery of Vikramasingan Fort or The Triumph of Chastity" (2) "Shanmukhasundaram or The Might of Love" (3) "Fall of the Tanjore Naiks or The Might of Fate" (4) "Shanmukha Vijayam or Kandapurana Vachanam" (5) "Tiruppughaz Viruthi Urai" etc. etc.]

முன்னுரை

இவ் உயரிய நூலின் இரண்டாம் பாகத்தின் கையெழுத்துப்பிரதிகள் வெகு காலமாய்த் தயாராயிருந்தும், சில ஆண்டுகளாக நமக்கு நேர்ந்த பல அசௌகர்யங்கள் காரணமாக இதைப் புத்தக ரூபமாகக் கொண்டுவரத் தாமதமேற்பட்டதற்கு மிக வருந்துகிறோம். ஆனால், இவ் உயரிய நூலுக்கு நேரிலும், தபால் மூலமாகவும் எமக்கு வந்துள்ள கடிதங்கள் கணக்கில் அடங்கா. ஏற்கெனவே அம்பலவாணன் எனும் நூலின் முதற் பாகம் வாங்கியுள்ளவர்களின் அடங்கா ஆவலைப் பூர்த்திசெய்ய வேண்டியே, இம்மாதம் முதல், இரண்டாம் பாகத்தை, பிரதி மாதமும், போதினியில், அவ்வப்போது அழகிய படங்களுடன் வெளியிட ஏற்பாடுகள் செய்துள்ளோம். நேயர்கள் படித்து மகிழ்வதுடன், ஏனையோரையும் வாங்கச்செய்து நற்பயனடையுமாறும், இன்னும் இதுபோன்ற கையிலுள்ள

அநேகம் கையெழுத்துப் பிரதிகளை புத்தக ரூபமாய் வெளியிடுவதற்கான ஊக்கமும், சௌகர்யமும் நமது நேயர்கள் அளிக்குமாறும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஏற்கெனவே அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதி என்னும் உபரிய நூலின் முதல் பாகம், கையில் வைத்திராதவர்கள் எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். கைவசமிருப்பவை கொஞ்சம் பிரதிகளே யாதலால், வேண்டுவோர் தாமதியாது உடனே எழுதிப் பெறுதல் நலம்.

அழகிய போடோ படங்களுடன் கூடிய முதல் பாகத்தின் விலை ரூ. 1-8-0. விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் ரூ. 1-4-0.

முதற் பாகத்தின் கதைச் சுருக்கம்

எண்டிசைகளிலும் பரந்துள்ள இப் பூவுலகின்கண் சுகதுக்கங்களை அனுபவித்துழன்று களைத்துத் தியங்கும் ஆன்மகோடிகளுள் ஒவ்வொருவரிடத்தும் அவர்களைப் படைத்தருளிய சர்வேசுவரனுடைய அனந்த கல்யாண குணங்களிற் பல பொதிந்திருக்கின்றன. நற்சகவாசத்தினும் கல்வியினும் அவைகள் வெளிப்பட்டு விளங்குகின்றன. துற்சகவாசத்தினும், கல்வியின்மையினும் அவைகள் அடியோடு அழிந்தே போகின்றன. ஆதலின் தன்னிலடங்கிய மாந்தர்கள் தீயநெறியிற் செல்லாது தடுப்பதற்கு, கல்வியை யாவரும் போதிக்கவேண்டுவது ஒவ்வொரு ஜனசமூகத்தின் கடமையுமாகிறது.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு." — திருக்குறள்.

என்ற நீதி வாக்கியத்தின்படி, கல்வி யிலாதான் கண்களிரண்டும் குருடான அந்தகனுக்குச் சமானமாகிறான். அவ்வந்தகன் பாதையிலுள்ள குழியில் விழுவானேயாகில், அது பாதையில் குழிகள் இராதபடி பாதுகாக்காத ஜனசமூகத்தின் குற்றமும், அவனை அந்தகனுக்கிய விதியின் குற்றமுமாகுமேயன்றி அவனுடைய குற்றமாகாதன்றோ? அவ்வண்ணமே, ஒருவன் தீயநெறியிற் செல்வது, அவனுக்குக் கல்வியைப் போதிக்காமலும், தன்னிடத்துத் தீயநெறிகள் உண்டாகாமல் பாதுகாக்காமலும் விட்டுத் தன் கடமைகளை மறந்த ஜன சமூகத்தின் குற்றமேயன்றி அவனுடைய குற்றமாகாதன்றோ?

எந்த ஜனசமூகத்திலும், பெரும்பான்மையோரும் இவ்வுண்மையை ஆராய்ந்தறியவில்லையென்பதற்கு, ஒவ்வொரு ஜன சமூகத்திலும் தீயநெறியிற் செல்லுவோருக்குக் கொடுந் தண்டனைகள் விதிக்கப்பட்டுவருவதே ஒப்பற்ற சான்றாகும். ஒவ்வொரு ஜனசமூகமும் தீய நெறியிற் செல்லுவோரைத் தண்டிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கும் நியாய சபைகளுக்கும் சிறைச்சாலைகளுக்கும்செலவழிக்கும் பொருளை,தன்னிடத்திற் பொருந்தியுள்ள மாந்தர்களது அறியாமையை யகற்றுவதற்கு அவர்களுக்குத் தக்கபடி கல்வியைப் போதிப்பதற்காகக் கலாசாலைகளை யேற்படுத்துவதற்குச் செலவழிப்பார்களே யாகில், அது அந்த ஜனசமூகத்திலுள்ளவர்கள் யாவரும் துன்பமின்றி முற்றிலும் இன்பமடைந்திருப்பதற்கு ஏதுவாகும்.

இதுவுமன்றி, ஜனசமூகங்கள் தங்களுள் தீயநெறியிற் செல்வோர்களுக்கு அவர்களுடைய குற்றத்துக் கேற்ற தண்டனையை விதித்து, அவர்கள் திரும்பவும் குற்றஞ் செய்யாம லிருக்குமாறு அவர்களுக்கு அறிவைப் புகட்ட முயலாமல், அவர்கள்மீது கடுங்கோபங் கொண்டும் ஏனையோர் அக் குற்றத்தைச் செய்யாமலிருக்குமாறு அவர்கள் மனத்திற் பயத்தை யூட்ட வேண்டுமென்ற நோக்கங் கொண்டும், அற்பக் குற்றத்துக்கும் கொடுந்தண்டனை விதித்து வருகின்றன. அப்படித் தண்டித்த பின்னராவது, அத்தண்டனையை யடைந்து அனுபவித்தவன் தாங்கள் தண்டனையை விதித்த காலத்தில் பயமுறுத்த வேண்டுமென்று கொண்ட நோக்கத்திற்கேற்ப, தன் குணத்தைச் சீர்திருத்திக் கொண்டு, அதன் பிறகேனும் தீயநெறியிற் செல்லக் கூடாதென்று தன் மனத்தில் நிச்சயஞ் செய்து கொண்டிருப்பான் என்று ஜனசமூகங்கள் எண்ணுவதில்லை. அப்படி அவர்கள் எண்ணவில்லை யென்பதற்கு, குற்றங்களுக்காகத் தண்டனை யடைந்து அனுபவித்து மீண்டவர்களை ஜனசமூகங்கள் ஏற்றுக் கொள்ளாமல், அவர்களைத் திருத்த வொண்ணாத தீயோர்களாக மதித்து, அவர்கள்மீது பகைமை பாராட்டி அவர்களை இகழ்ந்து அவர்களுக்குப் பிழைக்கும் வழியும் ஈயாது மறுப்பதே மறுக்க வொண்ணாத சாட்சியமாகும்.

இன்னொரு உண்மையையும் ஜனசமூகங்கள் ஆராய்ந்தறியவில்லை. உலகிற் பிறக்கும் மாந்தர்

கள், தங்கள் பழைய வினைகளின் பயன்களை யனுபவிப்பதற்கு ஏற்றவாறு பிறக்கிறார்களாதலால், சமமான சக்திகளையும், சமமான சந்தர்ப்பங்களையும் உடையவர்களாய்ப் பிறப்பதில்லை. ஆதலின், சிலர் செல்வத்தில் தேங்கித் திளைத்தும், சிலர் வறுமையிலாழ்ந்தித் தியங்கியும் உலக வாழ்க்கையை முறையே ஆநந்தவாரிதியாகவும் துக்கசாகரமாகவும் மதிக்கின்றனர். அவ்வாறு வறுமையிலாழ்ந்தி யிருப்போரில், சிலர் சக்திக் குறைவினாலும், சிலர் சக்தியைப் பெற்றிருந்தும் சந்தர்ப்பம் வாய்க்காததனாலும் வறுமை யுற்றவர்களாயிருக்கின்றனர். சிலர், தாம் சக்தியும் சந்தர்ப்பமும் வாய்ந்திருந்தும், சோம்பலினால் அவைகளை உபயோகிக்க மனமில்லாமல் வறிஞர்களா யிருக்கின்றனர். ஆனால் ஜனசமூகத்தில் செல்வச் செருக்குற்றவர்கள், வறிஞர்க ளெல்லோரும் பொருளீட்டச் சக்தியும் சந்தர்ப்பமும் வாய்க்கப் பெற்றும், சோம்பலினாலேயே பொருளீட்டாமல் வறிஞர்களா யிருக்கிறார்களென்று தவறான அபிப்பிராயப் படுகிறார்கள். அப்படிப்பட்ட தவறான அபிப்பிராயம் கொள்வதனால், அவர்கள், வறிஞர்கள் ஜனசமூகத்தின்மீது வளரும் புல்லுருவிக ளென்றும், அதன் "இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் அட்டைக" ளென்றும் கருத, வறிஞர்கள் எல்லோரும் அயோக்கியர்க ளென்றும் ஜனசமூகம் சற்றுக் கண்ணயர்ந்தால் அதன் பொருளை அவர்கள் கொள்ளையடிப்பார்களென்றும் எண்ணி மயங்கி, வறிஞர்களைப் பின் தொடர்ந்து சென்று, அவர்கள் நடத்தையைக் கவனித்து அவர்கள் ஜனசமூகத்துக்குத் தீங்கு செய்யாமல் தடுப்பதற்காக ஒற்றர்களை நியமிக்கிறார்கள். வறுமையிற் பட்டு பசிப்பிணியினால் வருந்தித் தியங்கும் ஏழைகளுக்கு உண்டி யளித்து அவர்களைப் பாதுகாப்பது தம் கடமை யென்பதையும், யாவற்றினும் மேலான தர்மமென்பதையும் ஜனசமூகங்கள் சிறிதும் அறியவில்லை.

> "ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
> மாற்றுவா ராற்றலிற் பின்"
>
> — திருக்குறள்.

தவமியற்றித் தமது பசிநோயை யகற்றிக் கொள்வாரது வலிமையானது, பசியினால் வருந்துபவருக்கு உணவளித்து அவரது பசியைத் தணிப்பவரது வலிமையைவிடக் குறைந்ததென்று பெரியோர் கூறியிருக்கிறார்கள். அதை யறியாமல், ஜனசமூகங்கள் தங்களிடத்துப் பசியினால் வருந்தும் ஏழைகளைக் காப்பாற்றும் தம் கடமையை மறந்து, தருமத்தைத் தவிர்த்து, பசியைத் தீர்த்துக்கொள்ள முயன்று அவர்கள் செய்யும் அற்பக் குற்றங்களுக்காக அவர்களைக் கொடிய தண்டனைகளுக்கு ஆளாக்குகின்றன.

இவ்வுண்மைகளை எடுத்துரைத்து ஜனசமூகங்களுக்கு அறிவூட்டுதற்காகவே, இந்நூல் எழுதப்பட்டது. இதன் கதாநாயகனாகிய அம்பலவாணன் என்பான், விறகுவெட்டிப் பிழைத்துவந்த பேதைக் குடியானவன். தன் உடன்பிறந்தவளின் பெரிய குடும்பத்தைக் காப்பாற்றும் தாங்கவொண்ணாச் சுமை அவன்மீது விழுந்தது. ஒரு காலத்தில், பிழைக்க வழியில்லாமல், அக்குடும்பத்திலுள்ள குழந்தைகள், பசியினால் இளைத்துச் சோர்ந்து கிடப்பதைக்கண்டு வெறிகொண்டு, அவன் சில பணியாரங்களைத் திருடுகிறான். உடனே பாண்டிய நாட்டின் இராஜாங்கத்தார் அவனைப் பிடித்து, ஐந்து வருஷகாலம் அரசனது படகுகளைத் தள்ளும் நாவாய்க் கைதியாக விருக்கும் தண்டனையை அவனுக்கு விதித்தார்கள். அத்தண்டனையின் சொல்ல வொண்ணாக் கொடுமையைச் சரித்திரத்தில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளது. அம்பலவாணன், பலமுறை அத்தண்டனையை அனுபவிக்காமல் தப்பியோட முயன்றான். ஆகையினால் அவன் பத்தொன்பது வருஷ காலம் அத்தண்டனையை அனுபவிக்கும்படி நேர்ந்தது. நாவாய்க் கைதியாக வான பொழுது, புத்தியீனனாக விருந்த அம்பலவாணன் அத்தண்டனையை யனுபவித்த நீண்ட காலத்தில் சதா காலமும் தன் குற்றத்தையும், அதற்கு ஜனசமூகத்தார் விதித்த கொடுந்தண்டனையையும் பற்றி யோசித்துக்கொண்டே யிருந்து, அறிவுற்று ஜனசமூகத்தார் செய்தது தன் குற்றத்தைவிடப் பன்மடங்கு பெரிய பிழையென்று தீர்மானித்து, ஜனசமூகத்தின்மீது கடுங்கோபமுற்று, அது தனக்கு அநியாயமாய் விதித்த தண்டனைக்காகப் பழிதீர்க்க நிச்சயித்தான். பத்தொன்பது வருஷ காலம் கைதியாகவிருந்து, விடுதலைபெற்ற அம்பலவாணன், ஜனசமூகத்தின் மீது பழிதீர்க்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தன் நாட்டுக்குச் செல்லுகையில், ஜனசமூகமானது அவனுக்குப் பிழைப்புக்கு வழியில்லாமற் செய்து, அவன் பொருள் கொடுத்து

போதிலும் அவனுக்கு உணவளிக்க மறுத்தது. பசியினால் வாடி வருந்திய அம்பலவாணன், தான் நாயினும் கடையனாகக் கருதப் பட்டதை யுன்னி மனம் வெதும்பித் துயரிலாழ்ந்திருந்த சமயத்தில், "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" ஆகிய ஒரு துறவியின் மடத்தை யடைந்து உணவு பெற்று, அறியாமையினால், இரவில் அவர் பொருளைப் பறித்து, காவலாளரால் பிடிக்கப்பட்டு அத்துறவிக்கு முன் கொண்டு போய் நிறுத்தப்பட்டு, அப்போது அவர் காட்டிய கருணை மிகுதியினால் மனம் திருந்தப் பெற்று, பழிதீர்க்கும் நோக்கத்தைத் தவிர்த்து அத்துறவியைப் போலவே தானும் கருணை மிக்கோனாக ஆகவேண்டுமென்று நிச்சயித்து, தன் பெயரை மறைத்துக்கொண்டு, மாறு வேடம் பூண்டு ஒரு நகரத்துக்குச் சென்று, தன் புத்தியினாலும் உழைப்பினாலும் ஒரு கைத்தொழிலை மிகவும் அபிவிருத்தி செய்து, தானும் தனவந்தனாகி, பிறருக்கும் பிழைக்கும் வழி யுண்டுபண்ணுகிறான். அதுகண்டு அரசனும் ஜனசமூகமும் அவனைக் கௌரவப் படுத்துகின்றன. அப்படியிருக்கையில், யாரோவொருவனை இராஜாங்கத்தார் பிடித்து அவனே அம்பலவாணனென்று மயங்கி, அவனுக்குத் தண்டனை விதிக்கப் போகும் சமயத்தில், இவன் அந்த நியாயசபைக்குச் சென்று, தானே அம்பலவாணனென்று வெளிப்படுத்தி, அவ்வேழையை விடுவித்துப் பிறகு தான் கைதியாகி, பிறகு சிறையைவிட்டுத் தப்பியோடுகிறான். இதுவே முதல் பாகத்தின் கதையாகும். இது அழகாக எழுதப்பட்டுளது.

அம்பலவாணன் :: இரண்டாம் பாகம்

:: முதல் அத்தியாயம் — போரின் கொடுமைகள் ::

பாண்டிய நாட்டின் அரசனான விக்கிரமபாண்டியன் இறந்தபின், அவன் அண்ணன் மகனான பராக்கிரம பாண்டியன் பட்டத்துக்கு வந்தான். ஆனால் அவன் சிற்றப்பன் குமாரனாகிய குலசேகர பாண்டியன், பட்டத்துக்கு வரவேண்டியவன் தானென்று சொல்லிக்கொண்டு, பாண்டிய நாட்டிலுள்ள சிற்றரசர்கள் பலரை வசப்படுத்திக்கொண்டு, பெருஞ்சேனையுடன் வந்து, பராக்கிரம பாண்டியன் பயமற்று வசித்துவந்த மதுரைமாநகரத்தை முற்றுகை போட்டான். தனது சிற்றரசர்களிற் பெரும்பான்மையோர் தனது எதிரியுடன் சேர்ந்து கொண்டதையும் மதுரைக்கோட்டைக்குள் ளிருந்த சேனையைத் தவிர வேறுசேனை தன் வசத்தி லில்லாததையும் உன்னி மனந்தளர்ந்து, பராக்கிரம பாண்டியன் இலங்கை யரசன் பராக்கிரமபாகுவைத் தனக்கு உதவிபுரியும்படி வேண்டி ஒரு லிகிதமெழுதி ஒரு தூதனிடம் கொடுத்தனுப்பினான்.

தூதன் கொண்டு வந்த லிகிதத்தைப் பார்வையுற்ற பராக்கிரம பாகு, பாண்டியராஜனொருவன் தனது உதவியை நாடியதைக் குறித்து மகிழ்ச்சியுற்று, தனது முக்கிய தளகர்த்தன் இலங்காபுரி தண்டநாயகனை யழைத்து, பெருஞ்சேனையுடன் தென்னிந்தியாவுக்குச்சென்று, குலசேகர பாண்டியனைப் பொருது வென்று, பராக்கிரம பாண்டியனை அரசனாக ஸ்தாபிக்கும்படி கட்டளையிட்டான். ஆனால் இலங்காபுரி தண்டநாயகன் இந்தியாவுக்குப் புறப்படுவதற்காக இலங்கைத்தீவில் இந்தியாவுக்கு மிகவும் சமீபமாயுள்ள துறைமுகத்துக்குத் தன் சேனையுடன் போய்ச் சேருமுன், குலசேகர பாண்டியன் மதுரைமா நகரத்தைப் பிடித்துக் கொண்டு பராக்கிரம பாண்டியனை அவன் மனைவி மக்களுடன் கொன்றுவிட்டதாகக் கேள்விப்பட்டு, அச்சமாசாரத்தை இலங்கேசுவரனான பராக்கிரம பாகுவுக்குத் தெரிவித்தான். அதுகேட்ட பராக்கிரமபாகு தன் உதவியை நாடிய பாண்டிய ராஜனுக்குத் தான் உதவிபுரிய முடியாமற் போனதைக் குறித்து மனம் வருந்தி, பிறகு எப்படியும் குலசேகர பாண்டியனைச் சிம்மாசனத்திலிருக்க விடுவதில்லையெனத் தீர்மானித்து, குலசேகர பாண்டியனைப் போரில் வென்று, அவனிட

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க் கினத்தியல்ப தாகு மறிவு.

மிருந்து பாண்டிய நாட்டைப் பிடுங்கி பராக்கிரம பாண்டியனது மக்களில் எவருக்காயினும் அளித்துவிட்டு வரும்படி தனது தளகர்த்தன் இலங்காபுரி தண்டநாயகனுக்குக் கட்டளையிட்டான்.

இலங்காபுரி தண்டநாயகன் தன் சேனையுடன் கப்பலேறி இந்தியாவுக்கு வந்து, பல சிற்றரசர்களுடன் போர் செய்து, பிறகு இராமேசுவரம் என்னும் தீவைப் பிடித்துக்கொண்டான். அங்கிருந்து புறப்பட்டு, அவன் குண்டுக்காளம் என்னும் ஊருக்குச் சென்று, அதை எளிதிற் பிடித்துக்கொண்டு, அங்கே ஒரு கோட்டை கட்டுவித்து, தன் அரசன் பெயர் நிலைபெற்று வழங்குமாறு அதற்குப் பராக்கிரம புரம் என்று பெயர் வைத்தான். இவ்வாறு அவன் ஜயம் பெற்று, கோட்டையும் கட்டிக் கொண்டதைக் கேள்விப்பட்டு, குலசேகர பாண்டியன் பெருஞ் சேனை திரட்டி, அச்சேனையுடன் பராக்கிரம புரத்துக்குச் சென்று சிங்களத்தார்களை அக்கோட்டையிலிருந்து துரத்திவிட்டு வரும்படி சுந்தரபாண்டியனுக்கும் பாண்டிய ராஜனுக்கும் கட்டளை யிட்டான். அவர்களிருவரும் அச்சேனையுடன் வருவதைக் கேள்வியுற்ற இலங்காபுரி தண்டநாயகன் கோட்டைக்கு வெளியே வந்து அவர்களுடன் திறத்துடன் அமராடி அவர்களை முறியடித்தான். சுந்தரபாண்டியனும் பாண்டியராஜனும் தங்கள் சேனையுடன் அமர்க்களத்தை விட்டு வெருண்டோடினார்கள். இலங்காபுரி தண்ட நாயகன் வெற்றியினால் புயம் பூரித்திருந்த தன் சேனையைச் சருக்கட்டை என்னும் பட்டணத்தின்மீது செலுத்தி அதை எளிதிற் பிடித்துக்கொண்டான்.

பிறகு கொளுவூரும் மருதூபமும் சிங்களத்தார் கையிற் சிக்கின. கங்குண்டிய நாட்டு மறவ வீரர்கள் இலங்காபுரி தண்டநாயகனை வணங்கினார்கள். சிங்களத்தார் வீரகங்கை நாட்டிலுள்ள குனப்புனலூர் என்னும் பட்டணத்தையும் மற்றும் அநேக பட்டணங்களையும் கிராமங்களையும் அழித்து நாட்டைப் பாழாக்கினார்கள். பிறகு சிங்களத்துச் சேனை பராக்கிரமபுரத்துக்குத் திரும்பிப் புறப்பட்டது. வடலி யென்னும் ஊரில் ஆள்வந்தார் என்னும் அப்பிரதேசத் தலைவன் அச் சேனையைத் தடுத்தான். வெற்றியினால் கோஷித்துக்கொண்டு வந்த அச் சேனைக்கு முன்னிற்கத் திறமற்றதாய் ஆளவந்தார் சேனை முறிபட்டு ஓடிற்று; அமர்க்களத்தில் புறங்காட்டாது பொருது நின்ற சுத்த வீரனாகிய ஆளவந்தார் வீரசுவர்க்க மடைந்தான். சிங்களத்துச் சேனை ஜயபேரி அடித்துக்கொண்டு பராக்கிரமபுரத்தை யடைந்தது.

இவ்வாறு தன்னை எதிர்த்து நிற்கவல்லாரற்றுத் தென்னாட்டில் தன்னிச்சைப்படி உலவி வந்த இலங்காபுரி தண்டநாயகனது தீரத்தைக் கண்டு அஞ்சினவனாய்க் குலசேகர பாண்டியன் அவன் சேனையை விடப் பன்மடங்கு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு தான் தோல்வியடைவதற்குச் சிறிதும் இடமில்லாமல் அவனை எதிர்க்கவேண்டுமென நிச்சயித்து, பாண்டிய நாட்டில் எஞ்சியிருந்த சேனைகளையும், தன் மாமன்மார்கள் தேசமாகிய கொங்குநாட்டுச் சேனைகளையும், திருநெல்வேலி இராஜ்யத்துச் சேனைகளையும் ஒருங்கே திரட்டி, அவைகளைத் தானே நடத்திக்கொண்டு பராக்கிரமபுரத்தை நோக்கிச் சென்று அதற்கருகில் எருக்கோட்டை, இடகளீசுவரம் என்னும் இரு கிராமங்களிலும் கோட்டைகள் கட்டுவித்துப் பிறகு பராக்கிரம புரத்தை முற்றுகை போட்டான். அவன் சேனைகள் அக் கோட்டையை கடற்புறத்திலும் நாட்டுப்புறத்திலும் தாக்கின. கோட்டைக்குள்ளிருந்த சேனையும், முற்றுகை போட்ட சேனையும் பலமுறை ஒன்றோடொன்று கைகலந்தன. கடைசியில் குலசேகர பாண்டியனே தன் சேனையை நடத்தி அக்கோட்டையைத் தாக்கினான். கோட்டை மதிட்சுவர்களின்மீது ஏறியோ அவைகளை யிடித்து வழி யுண்டாக்கிக்கொண்டோ கோட்டையைப் பிடிக்கவேண்டுமென்று பல முறை பலவிதமாய்த் தாக்கிய பாண்டிய சேனை அயர்வடைந்த தருணம் பார்த்து இலங்காபுரி தண்டநாயகன் தன் கோட்டை வாயிலைத் திறந்துகொண்டு தன் சேனையுடன் புலிபோல் வெளியே பாய்ந்து பாண்டிய சேனையைத் தாக்கி அதை எளிதில் முறியடித்தான். கோட்டையை முற்றுகை போட்டு, உணவுப் பொருள்கள் உள்ளே செல்லாது தடுத்து, கோட்டைக்குள்ளிருந்த சேனை பசியினால் வாடித் தன்னைச் சரணமடையும் வரையில் பொறுத்திராமல், கற்கோட்டையை வீணே தாக்கி அயருமாறு தன் சேனையைச் செலுத்திய புத்தியீனனான குலசேகர பாண்டியன், சிங்களத்துச் சேனையினால் சின்னாபின்னமாக்கப்பட்டு அமர்க்களத்தை விட்டு

368

வெருண்டோடும் தன் சேனையைப் பின்தொடர்ந்து சென்று அதைத் தைரியப்படுத்தி திறத்தி, தன்சேனையைத் துரத்திவந்த இலங்காபுரி தண்டநாயகனுடன் குறும்பண்டாங்கலி என்னும் ஊரில் திரும்பவும் போர்புரிந்தான். ஒருமுறை தோல்வியடைந்து பகைவரால் துரத்தப்பட்டு ஓடியசேனை வெற்றி வெறியுடன் தன்னைத் துரத்தும் பகைவரைத் திரும்பவும் எதிர்த்து ஜயிப்பது அரிதாதலால், பாண்டிய சேனை மறுபடியும் தோல்வியடைந்து போர்க்களத்தை விட்டு ஓடிற்று. இலங்காபுரி தண்டநாயகன் எருக்கோட்டையை அக்கினிக் கிரையாக்கிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சென்று தேவி பட்டணம், சிறுவயல், கொளுவக்கோட்டை இவைகளைப் பிடித்துக்கொண்டு, சுற்று வட்டாரத்திலுள்ள இருபத்தேழு பெரிய கிராமங்களை எரித்தழித்துவிட்டு, தண்டிகைக்குச் சென்று கோட்டை, உக்கை என்னும் இரண்டு ஊர்களையும் பிடித்துக் கொண்டான். பிறகு விக்கிரமசோளபுரங் கோட்டையும் காமாந்தக்கோட்டையும் அவன் கையிற் சிக்கின.

இவ்வாறு வெற்றி வீரனாய் உலவிய இலங்காபுரி தண்டநாயகன், குலசேகர பாண்டியனால் கொல்லப்பட்டு மடிந்த பராக்கிரம பாண்டியனது கடைசிக் குமாரனாகிய வீரபாண்டியன் மலைநாட்டுக்குத் தப்பியோடிப் போய்விட்டதாகவும், தன் தந்தையின் நாட்டுக்குத் திரும்பிவரப் பயந்து கொண்டிருக்கதாகவும் கேள்விப்பட்டு, அவனை அவன் தந்தையின் சிம்மாசனத்தில் ஏற்றுவதாக வாக்களித்தும், உடனே புறப்பட்டு வரும்படி அவனை வற்புறுத்தி அழைத்தும் வீர பாண்டியனுக்கு ஒரு லிகிதம் எழுதி ஒரு தூதனிடம் கொடுத்தனுப்பினான். அந்த லிகிதத்தைக் கண்டு வீர பாண்டியன் பயந்தவிர்த்து இலங்காபுரி தண்டநாயக னிருக்குமிடத்துக்கு வந்துசேர்ந்தான். இலங்காபுரி அவனை வெகு மரியாதையுடன் எதிர்கொண்டழைத்து, இலங்கைவேந்தன் தன்னிடம் கொடுத்தனுப்பிய அநேகம் பரிசுகளை அவனுக்களித்தான்.

வீரபாண்டியன் தன்னை வந்தடைந்த பின் இலங்காபுரி வேறுவிதமாய் நடந்துகொள்ள ஆரம்பித்தான். வீரபாண்டியனுக்கு முடிசூட்டுவதற்குச் சிற்றரசர்களது ஆதரவைப் பெற வேண்டுமென்ற இச்சையுடன், அவர்களிடமிருந்து பறித்த கோட்டைகளையும் கோட்டங்களையும் அவர்களுக்கே திரும்பவும் அளித்து, அவர்களைத் தன் வசமாக்கிக்கொண்டான். தன் சேனைகள் ஜயித்துக் கட்டிக்கொண்ட கீளமங்கலம், மேலமங்கலம், கோகர்ண நாடு இவைகளை அவன் கண்டதேவ மளவராயர் என்பவர் கையில் ஒப்புவித்து அவைகளை ஆண்டுவரும்படி கட்டளையிட்டான். பிறகு அவன் மானமதுரை, ஆலத்தூர்க் கோட்டை, நடால் இவைகளைப் பிடித்துக்கொண்டான். பிறகு அவன் குலசேகர பாண்டியனது தளகர்த்தர்களாகிய தென்னவ பல்லவராயர், ஆளவந்த பெருமாள் இருவரையும் பாதபதம் என்னுமிடத்தில் எதிர்த்து முறியடித்துவிட்டு, தொண்டி, பாசை என்னும் இரு கிராமங்களையும் கைப்பற்றிக் கொண்டான். முன்னொரு காலத்தில் சோளர் சேனையினால் பிடித்துக்கொள்ள முடியாமற் போன செம்பொன்மாரிக் கோட்டை அவன் கையில் எளிதிற் சிக்கிற்று. அக்கோட்டையின் சுற்று வட்டாரத்திலுள்ள கள்ளர், மறவர் முதலிய வீரம் மிகுந்த ஜாதியார்கள் திரண்டு வந்து, செம்பொன்மாரிக் கோட்டையிலிருந்து சிங்களத்தார்களைத் துரத்த முயன்றனர். ஆனால் போர்த்தொழிலை முறைப்படி நன்கு பயின்றிருந்த சிங்களத்தார்முன் அவர்கள் தீரம் பயன்படாமற் போயிற்று. கோட்டையிலிருந்து திடீரென்று வெளிக்கிளம்பி வந்து தாக்கிய சிங்களத்தவர்களால் தோல்வியடைந்து, அவர்கள் கலைந்தோடி காடுகளுக்குள்ளும் மலைகளுக்குள்ளும் ஒளிந்துகொண்டு, அக்கோட்டைக்குக் கொண்டு போகப்படும் உணவுப் பொருள்களை மறித்துப் பறித்துக்கொண்டும், கோட்டையைச் சேர்ந்த ஆடுமாடுகளைத் திருடிக்கொண்டும் பலவிதமாய்ச் சிங்களத்தவர்களை மிகவும் தொந்தரவு செய்து வந்தார்கள். அவர்களை யடக்குவதற்கு வழியில்லை யென்றுணர்ந்த இலங்காபுரி, அவர்களுடன் சமாதானஞ் செய்து அவர்களைத் தன் கட்சியிற் சேர்த்துக்கொள்வதே நலமெனத் தேர்ந்து, அவர்கள் தலைவர்களில் முக்கியமானவனாகிய மாளவ சக்கரவர்த்தி யென்பவனுக்கு அக்கோட்டையைக் கொடுத்து, தனக்காக அக்கோட்டையைக் காத்துவரும்படி கட்டளையிட்டான்.

இவ்வாறு இலங்காபுரி தனது வெற்றியினாலும் பரிசுகளினாலும் நயவார்த்தைகளினாலும் பாண்டியநாட்டுச் சிற்றரசர்களைத் தன் கைவசப்

மனத்து ளதுபோலக் காட்டி யொருவற் கினத்துள தாகு மறிவு.

படுத்திக்கொண் டிருக்கையில், குலசேகர பாண்டியன் தனது பெருமுயற்சியினால் திருநெல்வேலி, தென் கொங்கு, வடகொங்கு இந்நாடுகளின் சேனைகளை ஒருங்கே திரட்டிக்கொண்டிருந்தான். அதையறிந்த இலங்கேசன் தன் தளகர்த்தர்களில் ஜகத்விஜயன் என்னும் மற்றொருவனைப் பெருஞ்சேனையுடன் இலங்காபுரி தண்டநாயகனுக்கு உதவியாக அனுப்பினான். இருதிறத்தவர்களும் இராஜிநா என்னும் கோட்டையின் புறத்தில் அமராடினர். குலசேகர பாண்டியன் தோல்வியடைந்து, அக்கோட்டைக்குள் புகுந்துகொண்டான். சிங்களத்தார் அக்கோட்டையைத் தாக்கிப் பிடித்துக்கொண்டனர். குலசேகர பாண்டியன் அஞ்சி நடுங்கித் தான் அணிந்திருந்த உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு மாறுவேடம் பூண்டு அதிருஷ்ட வசத்தால் தப்பியோடி, தொண்டைமான் நாட்டுக் காட்டில் ஒளிந்துகொண்டான்.

பிறகு இலங்காபுரி பாண்டிய நாட்டின் எல்லையில் குறும்பாயர் நாட்டிலுள்ள திருப்பத்தூருக்குச் சென்று, குலசேகரனது கட்சியைச் சேர்ந்த அக் குறும்பராயரையும் அவருடன் கலந்துகொண்ட சில சோளதேசத்துச் சிற்றரசர்களையும் பொன்னமராவதி என்னுமிடத்தில் எதிர்த்துப் போர் செய்தான். அச்சண்டையில் இருதிறத்தவர்களிலும் இறந்தவர்களைக் கணக்கிட முடியவில்லை. மூன்று காத தூரம் பிணங்கள் மலை மலையாய்க் குவிந்து கிடந்தன. இருதிறத்தவர்களும் தாமே வெற்றியடைந்ததாகச் சொல்லிக்கொண்டார்கள்.

வெகு காலமாய் ஓயாது நடந்துவந்த இப்போரினால் இருதிறத்தவர்களும் இளைத்துப் போயினர். புகழ் பெறவேண்டுமென்ற ஆசையினால் தன் சேனையைப் பாண்டியனுக்கு உதவிபுரிய அனுப்பிய பராக்கிரமபாகு தன் சேனை மிகவும் குன்றியதை யறிந்து, போரைப் பின்னாள் பின்னும் நடத்த இஷ்டமில்லாதவனாய் தன் வாக்குத்தத்தத்தைப் பேருக்கு நிறைவேற்றிவிட்டுத் தன் சேனையைத் திரும்பிவரும்படிக் கட்டளையிடுவதே தகுதியென்று நிச்சயித்து, மதுரைக்குச் சென்று வீரபாண்டியனுக்கு முடிசூட்டிவிட்டு இலங்கைக்கு திரும்பி வரும்படி இலங்காபுரிக்குக் கட்டளையிட்டான். இலங்காபுரி அப்படியே மதுரைக்குச் சென்று, தான் வசப்படுத்திக் கொண்ட சிற்றரசர்களை வைத்துக்கொண்டு வீரபாண்டியனுக்குச் சிறப்பாய் முடிசூட்டி, பாண்டிய இராஜ்ய சிங்காதனத்தில் அவனை இருத்திவிட்டு, தன் நாட்டுக்குப் புறப்பட யத்தனிக்கையில், குலசேகர பாண்டியன் தனது மாமன்மார்களாகிய தென் கொங்கு வடகொங்குகளின் அரசர்களோடும், பல்லவராயர் முதலிய பேர்பெற்ற சோளநாட்டுச் சிற்றரசர்களோடும், பெரிய சேனா சமுத்திரத்துடன் தன்னை எதிர்த்துப் பொருது வென்று வீரபாண்டியனைச் சிங்காதனத்தினின்றும் வீழ்த்தவேண்டுமென்ற எண்ணத்துடன் சாந்தனேரிக் கோட்டையில் வந்து தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டு, ஜகத்விஜயனுடன் புறப்பட்டுச்சென்று,சோளகுலாந்தகபுரத்தில் பாளையமிறங்கினான். குலசேகரபாண்டியன் தன் பெருஞ்சேனையுடன் பாளையங்கோட்டைக்கு வந்தான். ஆங்கு இரு சேனைகளும் கைகலந்தன. எப்பொழுதும் போலவே குலசேகர பாண்டியன் தோல்வியடைந்து சோளதேசத்துக்கு ஓடி, சோள மகாராஜனைத் தனக்கு உதவிபுரியும்படி வேண்டினான். சோளவரசன் நரசிம்ம பத்மராயர் முதலிய பேர்பெற்ற தளகர்த்தர் வசம் பெருஞ்சேனை திரட்டியனுப்ப, அச்சேனை அது வருவதைக்கேட்டு அதை எதிர்க்கவந்த இலங்காபுரி தண்டநாயகனது சேனையுடன் கீழநிலையம் என்னுமிடத்தில் அமர்புரிந்தது. குலசேகரனுடைய துரதிருஷ்டத்தினால் வீரர்கள் நிறைந்த அச்சேனையும் சிங்களத்தவரால் தோல்வியுற்றது. இலங்காபுரி வட மணமேல்குடி, மணமேல்குடி, மஞ்சக்காடு இவைகளை யழித்துத் தரையோடு தரை யாக்கிவிட்டு, குலசேகரன் சேனையில் மீதமாயிருந்ததைத் திரும்பவும் பொன்னமராவதியில் எதிர்த்து முறியடித்தான். குலசேகரன் போனவிடந் தெரியாமல் ஓடி யொளிந்துகொண்டான். தான் சிங்காதனத்தி லமர்த்தின வீர பாண்டியனுக்குக் குலசேகரனால் இனியொரு தொந்தரவும் ஏற்படாதென்று தீர்மானித்து, இலங்காபுரி தண்டநாயகன் இராஜ்யத்தை வீர பாண்டியனிடம் ஒப்புவித்து, என்றென்றைக்கும் பராக்கிரமபாகுவின் பெயர் வரையப்பெற்ற காசுப்பணக்காசே பாண்டி யநாட்டில் உபயோகிக்கப்பட வேண்டுமென்று கட்டளை யிட்டுவிட்டு, ஜகத்விஜயனையும், சிங்களத்துச் சேனையிற் பெரும்பான்மையையும் அழைத்துக்கொண்டு, கொஞ்சம் சேனையை வீர பாண்டியனுக்கு, ஆத

ரவாயிருக்கும்படி வைத்துவிட்டு இலங்கைக்குப் போனுன்.

மேற்கூறியவாறு பாண்டியர்களுக்குள் நடந்த பெரும் போரில் பொன்னமராவதிக் கோட்டையினருகே இரண்டாவது முறை நடந்த சண்டைதான் இருதிறத்தாருக்கும் மிகுந்த சேனைச் சேதத்தை விளைவித்தது. அரைக் காத தூரம் பிணங்கள் மலை மலையாகக் குவிந்து கிடந்தன வென்றும், இரத்தம் ஆறுப் பெருகி ஓடிற்றென்றும் தேசச் சரித்திரத்திலிருந்து தெரிய வருகிறது. அச்சண்டையில் வெற்றி யடைந்த சிங்களத்துச் சேனையும், தோல்வியடைந்த குலசேகர பாண்டியன் சேனையும், இரண்டும் சண்டை நடந்த அன்றிரவு சண்டையின் உக்கிரத்தினுலும் ஆட்சேப மிகுதியினுலும் மிகுந்த சோர்வுற் றிருந்தன. குலசேகர பாண்டியனுக்கு உதவி செய்த பக்கத்துக் கிராமங்களிரண்டு சிங்களத்தவரால் கொளுத்தப்பட்டு எரிந்துகொண்டிருந்தன. சேனைகள் தங்களுணவைச் சமைக்கவும், துஷ்ட மிருகங்களை வெருட்டவும் மூட்டிய நெருப்புகள் ஆங்காங்கு ஜ்வலித்துக்கொண்டிருந்தன. சந்திரனும் தனது பூரண கலைகளோடு பிரகாசித்துக்கொண் டிருந்தான்.

அச்சமயத்தில் போர்க்களத்தினருகே யிருந்த சாலையின் வழியாக ஒருவன் வெளிச்சமாயிருந்த விடங்களில் வேகமாய் நடந்தும், இருட்டாயிருந்த விடங்களில் பதுங்கியும், அடிக்கடி தன் பின்னே திரும்பிப் பார்த்துக்கொண்டும் போய்ப் போர்க்களத்துக்குட் புகுந்தான். புகுந்தது முதல், சில சமயங்களிற் குனிந்தும் க்ஷண நேரத்துக்கெல்லாம் நிமிர்ந்து சுற்றிப் பார்த்துக் கொண்டும், சில சமயங்களில் முழந்தாளிட்டு உட்கார்ந்து க்ஷணநேரத்துக்கெல்லாம் எழுந்து முன்போலவே பத்திரமாய்ச் சுற்றிப் பார்த்துக் கொண்டும், அவன் உலவிக் கொண்டிருந்தான்.

பெருஞ் சேனைகளைப் பின்தொடர்ந்து செல்லும் அயோக்கியர் கூட்டம் சேனைகளை விடப் பெரிதாயிருப்பது எல்லா நாடுகளிலும் வழக்கம். கூத்தாடிகளும், கோமாளிகளும், குறிசொல்லுபவர்களும், பச்சை குத்துபவர்களும், வேசிகளும் மற்றும் பலரும் சேனைகளுடன் சென்று போர்வீரர்களுடைய பொருளைப் பலவிதமாய்ப் பறித்தும் இராக்காலத்தில் திருடியும் ஜீவிப்பது வழக்கம். சண்டைகள் நடந்தபின், அவர்கள் இராக்காலங்களில் போர்க்களத்தினுட் சென்று உயிரிழந்து கிடந்த வீரர்களது மோதிரம், கடுக்கன், பணப்பை முதலிய பொருள்களை மட்டுமே யன்றி அவர்களுடைய உடைகளையும் பறித்துக்கொண்டு போய்விடுவார்கள். அக்கொடுமையை யொழிக்கச் சேனுதிபதிகள் எவ்வளவு கடுமையான தண்டனை விதித்தும் அது நிற்பதில்லை. அவ்வாறு திருடுபவர்களைப் போர்வீரர்கள் ஒருபுறத்தில் சிரச்சேதஞ் செய்து கொண்டிருக்கையிலேயே மற்ருேர் புறத்தில் மற்றுஞ் சிலர் அப்படியே திருடிக்கொண் டிருப்பார்கள். அவர்கள் போர்வீரர்களைப் போலவே உடை தரித்துக் கொண்டிருப்பது முண்டு.

மேலே சொன்ன மனிதன் அப்படிப் பட்டவர்களில் ஒருவன். அவன் பிணங்களின் பொருள்களை யெல்லாம் பறித்து, தன் கால் சல்லடத்திலுள்ள பெரிய பைகளிற் போட்டுக் கொண்டே போனுன். ஓரிடத்தில் ஒரு வைரம் ஜ்வலிப்பதைக் கண்டு அவன் அவ்விடத்துக்கு ஓரேபாய்ச்சலாய்ப் பாய்ந்து முழந்தாளிட்டு உட்கார்ந்து பிணக்குவியலின் இடையே தோன்றிய ஒரு கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றித் தன் கையி லணிந்துகொண்டு எழுந்தான். அப்போது தன் அங்கியை யாரோ பிடித்திழுப்பதாக உணர்ந்து அவன் தன் பின்னே திரும்பிப் பார்த்தான்; தான் மோதிரத்தைக் கழற்றிய கையானது தனது அங்கியைப் பற்றிக்கொண்டதெனக் கண்டான். பிணத்தின் அங்கங்கள் அவ்வாறு சேஷ்டைகள் செய்வதை அவன் அதற்குமுன் எத்தனையோ முறை பார்த்ததுண்டாதலால் சற்றும் மனந்தளராது மெல்ல நகைத்தான். பிறகு அவன் தன் அங்கியை அப்பிடியினின்றும் விடுவித்துக்கொள்ளத் தன் கையை நீட்டினுன். அதற்குள் அந்தக் கையின் பிடி தளர்ந்துவிட்டது. அது கண்ட அத்திருடன் அந்தக் கையை யுடையவன் உயிருடனிருக்கவேண்டுமென நிச்சயித்து, அவன் மேலே கிடந்த பிணங்களை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அம்மனிதனைப் பிடித்திழுத்துத் தரையிற் போட்டான். பிறகு அவன் அம்மனிதனுடைய அங்கிப் பைக்குள் கையைவிட்டு அதிலுள்ள பணப்பையை எடுத்து அதையும் அம்மனிதனுடைய இரத்தினங்களிழைத்த பிடியையுடைய உடைவாளையும் தன் சல்லடத்தின் பைக்குள் போட்டுக்கொண்டான்.

371

அச்சந்தர்ப்பத்தில் அம்மனிதன் கண்களை மெல்ல விழித்து, "ஐயா! தங்களால் பிழைத்தேன்!" என்றான். அத்திருடன் யாதும் பதிலுரையாமல் உட்கார்ந்திருந்தான். சிறிது தூரத்தில் போர்க்களத்தைக் காத்துச் சுற்றிவரும் போர்வீரர்களது சத்தம் கேட்டது. தரையிற் கிடந்த போர்வீரன், "ஐயா! யாருடைய கட்சி ஜயமடைந்தது?" என்று கேட்டான். திருடன், "சிங்களத்தவருடைய கட்சி" என்றான். போர்வீரன், "ஐயா! என்னுடைய அங்கிப் பையிலுள்ள பணப்பையையும், என் உடைவாளையும் நீர் எனக்குச் செய்த பேருதவிக்குப் பிரதிப்பிரயோஜனமாக எடுத்துக் கொள்ளும்" என்றான். திருடன் அவைகளுக்காகத் தேடுவது போல் பாசாங்கு செய்துவிட்டு, "அவைகளைக் காணோம்" என்றான். "அப்படியா? யாரோ திருடிக் கொண்டு போயிருக்கவேண்டும். என்னுயிரைக் காப்பாற்றிய நீர் யார்?" என்று போர்வீரன் கேட்டான்.

திருடன், "நானும் தங்களைப் போலவே குலசேகர பாண்டியரது சேனையைச் சேர்ந்த போர்வீரன்தான். சமீபத்தில் சிங்களத்துப் போர்வீரர்கள் வரும் சத்தம் கேட்கிறது. நீங்கள் இறந்தவர்போல் கிடந்து தப்பித்துக் கொள்ளுங்கள். நான் ஓடிப்போகிறேன்" என்றான். போர்வீரன், "சரி. தங்கள் நாமதேயமென்ன?" என்று கேட்டான். "என் பெயர் சுடலைமாடன்" என்றான் திருடன். "சேனையில் தங்கள் பதவியென்ன?" என்று போர்வீரன் கேட்டான். "நான் ஒரு சேனை நாயகன்" என்றான் திருடன். போர்வீரன், "தங்கள் பெயரை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன். என் பெயர் பொன்னமராவதிப் பிரபு குமாரசுவாமி சேதுராயர்களத்து வென்றார் என்பதை நீர் மறவாமலிரும். இனி நீர் போய்வரலாம்!" என்றான். சுடலைமாடன் கைகளையும் கால்களையும் தரையிலூன்றி மிருகத்தைப் போல் நடந்து விரைவிற் சென்று போர்க்களத்தைவிட்டு நீங்கிச் சாலையின் அப்புறத்தில் ஒரு பெரும் புதர் மறைவில் நின்றுகொண்டிருந்த தன் வண்டியினண்டை சென்று "கறுப்பாயி! இன்றைக்கு நல்ல கொள்ளை!" என்று வண்டியிலிருந்த பூதாகாரமான ஒரு பெண்பிள்ளையினிடம் மிகுந்த குதூகலத்துடன் சொன்னான். அவனும் மனிதன்தான்!

இரண்டாவது அத்தியாயம்

அம்பலவாணன் கடலில் விழுகிறான்

அம்பலவாணனைத் திரும்பவும் காவலாளர் பிடித்துக்கொண்டு விட்டார்கள். அத் துக்கச் சரித்திரத்தை விவரித்து நமது நண்பர்கள் மனத்தைப் புண்படுத்த நமக்கு இஷ்டமில்லை யாதலின் அதை இங்கு சுருக்கமாகச் சொல்லிவிடுவோம். ஷண்முகதாசர் தாமே அம்பலவாணனென்று நியாய சபையில் பகிரங்கமாய்க் கூறி விட்டு, அமராவதி நகரத்தினின்று வீரபாண்டிய நல்லூருக்குத் திரும்பி வந்ததும், தாம் அந்த நகரத்துக்குப் புறப்படு முன்னர், தமது தனத்திற் பெரும்பான்மையை வைத்துக் காப்பாற்றிய காசுக்கடை குமாரசுவாமி செட்டியாருக்கு ஒரு கடிதமெழுதி முத்திரை யிட்டு வைத்திருந்ததை அவசரமாய் ஒரு குதிரைச்சேவகன் மூலம் அவருக்கு அனுப்பினாராதலால், கவுந்தியடிகள் செய்த பேருதவியினால் அவர் மாயாண்டியின் கையிற் சிக்காது தப்பி மதுரைக்கு ஓடி, தாம் இன்னாரென்ற சங்கதி அந்நகரத்துக்குப் பரவு முன் அக் காசுக் கடைக்காரச் செட்டியிடமிருந்து தமது தனத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு போய்விட்டார். அத் தனத்தை அவர் கடம்பவனத்தில் எங்கேயோ ஒளித்து விட்டாரென்று ஒரு வதந்தி பிறந்து, சிலர் முடியிறக்கும் தலத்தில் மொட்டைத் தலையனைத் தேடும் அறிஞர்களைப் போல், காடெல்லாம் அலைந்து திரிந்து, நரிக்குழிகளை யெல்லாம் தோண்டித் தோண்டிப் பார்த்து அயர்ந்து ஆசையற்றுத் திரும்பினர்.

ஷண்முகதாசருடைய ஏராளமான தனம் அம்பலவாணனைக் கொடிய தண்டனையினின்றும் காப்பாற்றிச் சுகத்திலிருத்தும் வல்லமையற்றதா யிருந்தது. அம்பலவாணன் திரும்பவும் நாவாய்க் கைதியானான்.

ஷண்முகதாசருடன் இலக்குமி தேவியும் வீரபாண்டிய நல்லூரை விட்டு அகன்றாள். உன்னதமான பாறை யொன்றிலிருந்து ஒரு பேருவியின் நீர்த்தொகுதி கீழேயுள்ள மற்றொரு பாறையின்மீது வீழ்ந்து சிதறும்போது, சிறு சிறு நீர்த்துளிகள் விசையுடன் மேலேயெழும்பி மேற்பாறைக்கு வெகு சமீபத்திற் சென்று, கண்ணிமைக்கும் நேரம் அவ்வியாத்தில் நின்று,

சூரியனொளியில் அழகாய்ப் பிரகாசித்துக் கீழே விழுவதை யாவரும் கவனித்திருப்பார்கள். அவ்வாறே வீரபாண்டிய நல்லூரின் முழு வளத்தின் சொரூபமான ஷண்முகதாசர் தமது உன்னதமான பதவியிலிருந்து கீழே வீழ்ந்ததும், அவ்வளத்தின் அணுக்களின் சொரூபங்களான கண்காணிகள் தனித்தனியே தொழிற்சாலைகள் ஏற்படுத்தி முன்போலவே தொழில் நடத்திச் சில காலம் வாழ்வுற்று, பிறகு தமது திறமையின் புன்மையினாலும் ஒருவர்க்கொருவர் நேர்ந்த விரோதப் போட்டியினாலும், தங்கள் பதவிகளினின்று பிறழ்ந்து இருந்தவிடந் தெரியாமல் மறைந்தனர். ஷண்முக தாசரது திறச்சிறப்பினாலேயே நடந்துவந்த தொழில் நிலைகுலைந்தது. தொழிலாளிகள் அவ்வூரைவிட்டகன்று வேறு பிழைப்புகளைத் தேடிக் கொண்டார்கள். வீரபாண்டிய நல்லூர் வளங்குன்றித் தன் செல்வ மிழந்து, அம்பலவாணன் அவ்வூருக்கு வந்தபொழுது இருந்ததைக் காட்டிலும் தாழ்ந்த நிலைமையையடைந்தது.

அம்பலவாணன் திரும்பவும் நாவாய்க் கைதியாகிச் சுமார் மூன்று மாதங்கள் கழிந்து ஒரு நாள் சாயங்காலம் புயலிலகப்பட்டுச் சிறிது சிதைந்திருந்த ஒரு போர்க்கப்பல் தோண்டித் துறைமுகத்துக்குள் நுழைந்தது. அதன் வருகையை எதிர்பார்த்து அநேக ஜனங்கள் துறைமுகத்தின் கரையிற் கூடியிருந்தனர். அதன் பாய்மரங்கள் சற்றுக் கெட்டுப்போயிருந்ததால், மாலுமிகள் பாய்களை அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள். நடுப் பாய்மரத்தின் உச்சியில் ஒரு சிறு குறுக்குக் கொம்பின்மீது நின்றுகொண்டு அதன் பாயின் மேல்முனையை அவிழ்த்த மாலுமியொருவன், பாயின் பளுவினால் சற்று அதிகமாக முன்புறமாய்ச் சாய்ந்து கால் தவறித் தலைகீழாக விழுந்துகொண் டிருக்கையில், பாய்கட்டும் மேல் குறுக்குக் கொம்பின் ஒரு கோடியில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு கயிற்றைத் தற்செயலாய் முதலில் ஒரு கையினாலும், பிறகு மற்றொரு கையினாலும் பிடித்துக்கொண்டு ஒரு கரணம் போட்டு, தலை மேலும் கால்கள் கீழுமாகத் தொங்கினான். தலைகீழாகவிருந்து திரும்பவும் சரியான நிலையை யடையும்பொழுது போட்ட கரணத்தில் அவன் தேகத்தின் முழுப் பளுவினாலும் விசையாய்ச் சொடக்கியிழுக்கப்பட்டதினால் அவன் கைகள் அயர்ந்து அவன் தேகத்தின் பளுவை வெகுநேரம் தாங்க முடியாத ஸ்திதியி லிருந்தன. அவன் கைகள் சோர்ந்து பிடியை விட்டுவிட்டால், அவன் அகபாதாளத்திலுள்ள கடலில் விழுந்து, விழும் விசையினால் மூச்சை யிழப்பதுடன், நீர் மட்டத்துக்குக் கீழ் வெகு தூரம் கொண்டுபோகப்பட்டுத் திரும்பவும் மேலெழும்பாமலே உயிர் மாய்வது திண்ணமென யாவரும் அறிந்து கொண்டனர். ஆயினும் அவனை அவ்வபாயகரமான நிலைமையிலிருந்து தப்புவிக்க எவரும் முன்வரவில்லை. ஏனெனில், அவன் தொங்குமிடத்தை யணுகுவதே அசாத்தியமாகத் தோன்றிற்று. கப்பலிலும் கரையிலும் நின்றுகொண்டிருந்த யாவரும் துடிக்கும் மனத்துடன் கையைப் பிசைந்துகொண்டு நின்றார்கள்.

அந்த க்ஷணத்தில் ஆயுள் பரியந்தம் சிக்ஷை பெற்ற நாவாய்க் கைதிகள் அணியும் உடுப்பைத் தரித்துக் கொண்டிருந்த தலை நரைத்த கிழவனொருவன் வேகமாயோடிப் பாய் மரத்தின்மீது அணிப்பிள்ளையைப் போல் வெகு விரைவாய்ப் பாய்ந்து செல்லுவதைக் கண்டு யாவரும் ஆச்சரியத்துடன் கவனித்து நின்றனர். அந்நாவாய்க் கைதி வேறொருவனுமல்ல, நமது ஏழை அம்பலவாணன்தான். கப்பலின் மேல்தட்டின் மீது ஏதோ வேலை செய்து கொண்டிருந்த அம்பலவாணன் உச்சியில் தொங்கும் மாலுமியின் அபாய நிலைமையைக் கண்டு பரிதபித்து, பாய் மரத்தின் அடியண்டையில் நின்ற அதிகாரியினிடம் சென்று, அங்குக் கூடிநின்ற மாலுமிகளில் எவரும் செய்ய மனந்துணியாத காரியத்தைத் தான் செய்வதாகச் சொல்ல, அவ்வதிகாரி அவனுக்கு அனுமதி கொடுத்தான். உடனே அம்பலவாணன் அங்குக் கிடந்த ஒரு சம்மட்டியையெடுத்துக்கொண்டு அதனால் தன் காலிலிட்டு மருவியிருந்த பளுவான சங்கிலியை ஒரே அடியில் தறித்துக் கழற்றி யெறிந்துவிட்டு, அங்கே கிடந்த ஒரு பெரிய கயிற்றை எடுத்து வாயிற் கௌவிக்கொண்டு பாய்மரத்தின்மீதேறி இமைப்பொழுதில் பாய்மரத்தின் மேற் குறுக்குக் கொம்பை யடைந்து, தான் கொண்டுபோன கயிற்றை அக்கொம்பில் அம்மாலுமி தொங்கிக் கொண்டிருந்த கயிறு கட்டப்பட்டிருந்த விடத்துக்குச் சமீபத்திற்கட்டித் தொங்கவிட்டு அக்கயிற்றின் வழியே கீழேயிறங்கி பக்கத்துக் கயிற்றில் தொங்கும் மனிதனை தான் தொங்கிக்

கொண்டிருந்த கயிற்றின் நுனியில் இடுப்பில் இறுகக் கட்டிவிட்டு, தன் கயிற்றின் வழியே மேலே ஏறி மேற் குறுக்குக்கொம்பை யடைந்து, முழங்கால்களின் உட்புறத்தினால் அதை இறுகக்கட்டிக்கொண்டு தலைகீழாகத் தொங்கிக்கொண்டு தன் கயிற்றைப் பிடித்து அம்மாலுமியை மேலே தூக்கி, அவனைத் தன் இடது கையினால் அணைத்துக்கொண்டு நகர்ந்து பாய்மரத்தை யடைந்து நிமிர்ந்து பாய்மரத்தின் வழியே கீழே யிறங்கினான். பாய்மரத்தின் நடுவை அவன் அடைந்ததும், அங்குள்ள பெரிய குறுக்குக் கொம்பின்மீது நின்றுகொண்டிருந்த பல மாலுமிகள் அவனிடமிருந்து அம்மாலுமியை வாங்கிக்கொண்டு அவனைப் புகழ்ந்தனர். அப்போது கரையி லிருந்தவர்களும் கப்பலிலிருந்தவர்களும் கரகோஷஞ் செய்து இவ்வளவு தைரியசாலியாயும் அனுதாபமுள்ளவனாயுமுள்ள அவனை இராஜாங்கத்தார் விடுதலை செய்துவிட வேண்டுமென்று கூவினர். யாவரும் அம்பலவாணனையே பார்த்தவண்ணமாக விருந்தனர். ஆயினும் அவன் அவர்கள் தன்னைப் புகழ்ந்ததைக் கேட்க இச்சையில்லாதவன்போலும், நாவாய்க் கைதியாகிய தான் தனக்கு விதிக்கப்பட்டிருந்த இடத்தை யடையவேண்டுவதே முதற் கடமையென்று கருதியவன்போலும், கப்பலின் கீழ்த்தட்டுக்குச் சீக்கிரம் செல்லுவதற்காக நடுக் குறுக்குக் கொம்புக்கும் பாய்மரத்தின் அடிக் குறுக்குக் கொம்புக்கும் இழுத்துக் கட்டப்பட்டிருந்த ஒரு கயிற்றின் வழியே விரைவாய் நடந்து சென்றான். அவன் சாகசத்தைக் கண்டு யாவரும் வியந்தனர். ஆயின், அரைக்கணத்தில் அவ்வியப்பு பெரும் பயமாக மாறிற்று. ஏனெனில் அக்கயிற்றின் நுனியை அணுகும் சமயத்தில் அவன் அயர்வினாலோ, உயரத்தில் கயிற்றின்மேல் நடந்த மயக்கத்தினாலோ கால் தவறிச் சாய்ந்தான். யாவர் மனமும் படபடவென்று அடித்துக்கொண்டது; யாவரும் மூச்சும் விடாமல் நடுங்கி நின்றனர்; பரோபகாரச் சிந்தையுள்ள அவன் அப்படி மரிக்காமல் காப்பாற்றவேண்டுமென யாவரும் தம் மனத்துக்குள் ஈசுவரனைப் பிரார்த்தித்தார்கள். நமது பிரார்த்தனை நமக்குக் கெடுதி விளைவிக்கக்கூடியதாயிருந்தால் நாம் பிரார்த்தித்ததைத் தந்தருளாது நமக்கு நன்மையையே புரிந்தருளும் ஜகத்ரக்ஷகன் அம்பலவாணன் யாவராலும் புகழப்பெற்ற அச்சமயத்திலேயே மரித்துத் தன் துக்கசாகரத்தைக் கடப்பதே நன்மையென எண்ணினார் போலும்! அம்பலவாணன் தலைகீழாகக் கடலில் விழுந்து, உயரத்திலிருந்து விழுந்ததனால் மிகுந்த ஆழம் வரையில் பாய்ச்சப்பட்டு, திரும்பவும் மேலெழாமல் மறைந்தான். அம்பலவாணன் கடலில் விழுந்ததும், கப்பலிலிருந்த மாலுமிகள் பலர், கப்பலின் பக்கத்தில் மிதந்துகொண்டிருந்த படகுகளிற் குதித்து, அவன் மேலே எழும்பினால் அவனைக் காப்பாற்றத் தயாராகச் சிறிதுநேரம் காத்துக்கொண் டிருந்துவிட்டுப் பிறகு அவன் இறந்தானென நிச்சயித்து, பாதாளக் கரண்டிகளையிட்டு அச் சுற்றுவட்டார முழுவதும் தேடி, தாங்கள் எவ்வளவு முயன்றும் அவன் உடல் அகப்படாததனால் அவன் உடலைப் பெரிய மீன்கள் விழுங்கியிருக்கவேண்டுமெனத் தீர்மானித்து மனவருத்தத்துடன் கப்பலுக்குத் திரும்பினர். கரையிற் கூடியிருந்த ஜனங்கள் அம்மாலுமிகள் விசனக் குறிகளுடன் திரும்பிவந்ததைக் கண்டு அம்பலவாணன் இறந்தானென அறிந்துகொண்டு, கண்களில் நீர்பெருகத் துயரமுற்று, அவன் நற்குணத்தையும், மனோதைரியத்தையும், தேக வலிமையையும் புகழ்ந்துகொண்டு அவ்விடம் விட்டகன்றனர்.

ஷண்முகதாசர் என்று வேறு பெயர் பூண்டு தான் இன்னானென்பதை மறைத்து யாவரையும் ஏமாற்றி வீரபாண்டிய நல்லூர் நகராள்வாராக வாயின அம்பலவாணன் என்னும் துஷ்டன் திரும்பவும் காவலாளர் கைப்பட்டு, தான் முன்பு செய்த குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டுத் திரும்பவும் நாவாய்க் கைதியாகித் தோண்டித் துறைமுகத்தில் ஒரு நாவாயில் வேலை செய்துகொண் டிருக்கையில், ஒரு மாலுமியை மிகவும் அபாயகரமான நிலைமையிலிருந்து தப்புவித்துவிட்டுத் திரும்புகையில் கடலில் வீழ்ந்து இறந்தானென மதுரைக் காவலாளர் தலைமைக் கோட்டத்திலுள்ள ஏட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டது. குற்றங்களைக் கவனிக்க வேண்டுவதுதான் காவலாளர் கடமையாதலால், அம்பலவாணன் அன்று காட்டிய அற்புத அனுதாபத்தைக் குறித்து யாதொன்றும் எழுதப்படவில்லை. ஆயின் இதுவே உலக வியல்பாதலின், இது சிறிதும் ஆச்சரியத்தை விளைவிக்கத் தக்கதன்று. ஆனால் கருணை சொருபமான கடவுள் அவ்வற்புத அனுதாபத்தைக் குறித்துத்

தமது புத்தகத்தில் விசேஷமாய் எழுதிக்கொண்டிருப்பார் என்று நாம் நிச்சயமாய் நம்பலாம். ஏனெனில், அவர் குற்றமே பெரிது முடைய மாநிடர்களை நற்கதியிற் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தையே உடையவராதலால், அவர் குற்றங்களைக் கவனிக்காமல், சிறிது குணத்தைக் கண்டாலும் அதைப் பெரிதாக மதிக்கிறார். புல்லறிவுடைய மாநிடர்களும் அவ்வியல்புடையவராகி பிழைபுரியும் தமது சகோதரர்களிடத்தே அன்பு பாராட்டும்படி சர்வேசுவரன் அருள் புரிவாராக?

ததாஸ்து !!

(தொடரும்.)

சமயபுரத்தின் மாகாத்மியம்

NOTABILTY OF SAMAYAPURAM

[ஸ்ரீமான் ல. அனந்தய்யர் அவர்கள், ‘இந்து நேசன்’ பத்திராதிபர்.]

சிறப்பும் செல்வமும் வாய்ந்த நமது தேசத்திலே எத்தனையோ விடங்களில் ஆதி குருவான சிவபிரான் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் நேர்மையையும், ஒவ்வோரிடத்திற்கும் போய்ப் பரம்பொருளிடம் பரிபூரணமாய்ப் பக்தி வைத்திருக்கக்கூடிய அடியார்களான சிவனடித் தொண்டர்கள் சித்தமுத்த சுத்தனும் அவ்வம்பலவாணனை அடிபணிந்து தொழும் விமரிசையையும், யாத்திரிகர் பலர் கூறக்கேட்டுப் பரமானந்த மடைந்திருக்கிறோம். புராதன மகிமைகொண்ட சிவ ஸ்தலங்கள் மட்டுமேயல்ல, பேர்போன விஷ்ணு ஸ்தலங்களும் நிரம்பியுள்ள நமது நாட்டில் விஷ்ணு பக்தி செய்யும் ஆழ்வாராதியரால் பாடப்பெற்ற எண்ணிறந்த விடங்களுமுண்டு. பாடல் பெற்று, பக்தகோடிகளால் தரிசனஞ் செய்யப்பெற்று, பண்டைக்கால வாராய்ச்சிக்குப் போதிய உறைவிடங்களாய் மதிக்கப்பெற்று,மகநீயமாய் மானிடர் கண்களுக்குப் புலப்படும் மகா மகாஸ்தானங்களை இச்சிறு வியாஸத்தில் எழுதி முடியாது. எனினும், நம்மாற் கூடுமானவரையில் சிவன், விஷ்ணு என்னும் பேத மெதுவுமில்லாமல் ஏகோமய ஸ்வரூபியாய், நம்பினரை நளினமாய் ஆதரிக்கும் தன்மையளாய், தொழுது ஸ்தோத்திரஞ் செய்ய வரும் தன்யர்களது பாபகர்மங்களைத் தரணியில் தொலைத்துத் தீவிரமாய் அவர்களுக்கு மனதில் ஆனந்த மூட்டுபவளாய், மற்றெங்கும் பிரகாசிக்கும் பராசக்திரூபியாய் தேவி ஆங்காங்கு கொலுவிருப்பதையும், சிவனார் வேடரூபியாயும், பிட்டுக்கு மண் சுமந்தும், சித் ஸபையில் ஆனந்தத் தாண்டவ மாடியும், பின்னும் எத்தனையோ விதங்களில் பக்தர்களுக்குத் தொண்டு புரிந்திருப்பதையும், மஹா விஷ்ணுவானவர் அலங்காரப்பிரியம் வைத்த சிங்கார சிகாமணியாய்த் தம்மை அண்டிவரும் ஆன்மகோடிகளை அடிவயிற்றில் வைத்துக் காப்பாற்றும் ஆபத்பாந்தவனாய், ஆலிலைமேற் பள்ளிக்கொண்ட அனாதைரக்ஷகனாய், அபலையான பாஞ்சாலிக்குத் துரியோதனாதியர் சபையில் மானமழிய விருந்தகாலத்து அம்மான ஸம்ரக்ஷணார்த்தம் அவளது ஹிருதய கமலத்தில் அவதரித்த புண்ணியராய்ப் பிரகாசித்திருப்பதையும் பார்க்கப்புகின் பெரும் பாரதமாய் எழுதிவிடுக்க முடியும். ஸர்வலோக சரண்யனும் ஸர்வாந்தர்யாமியுமான ஆதியந்த மில்லாத அப்பராபர வஸ்துவே மேற்சொன்னவாறு தரணியில் தாண்டவமாடுகிறா ரென்பது ஆசிரம வாஸிகளா யிருக்கும் ஆத்மாநந்தர்களின் துணிபு. ஆகவே, அப் பரமபதியின் பிரபாவத்தைப் பரிசிலனை செய்யவோ, பக்தர்களுக்கு உரைக்கவோ, உரைத்து அவர்களது மனதைப் புளகிதமாக்கவோ, நவத்துவாரங்களோடு கூடின பொய்ச் சடலமுடைய புழுக்கூடெனத்தகும் மானிடவுருக் கொண்டோரால் இயலாது. அங்ஙன மிருந்தபோதிலும், பூதவுடலைத் தரித்து நிற்கும் புவியிலுள்ளார்க்கு இவ்விடத்து ஸ்வாமிக்கு நல்ல சத்தியுண்டென்றும், அவ்விடத்து ஸ்வாமிக்கு கைகொண்ட பலனென்றும், மற்றோரிடத்துத் தேவருக்கு மகாவீரமென்றும், வெண்காட்டம்மனுக்குப் பராக்கிரமம் அதிகமென்றும் பிதற்றுவது இயல்பு. இத்தியாதி பேதங்களைக் காட்டுவதில் பிரயோசன மொன்றுமில்லை. ஆதலின் ஆங்காங்கிருக்கும் தெய்வங்களைப் பேதாபேதமின்றிப் பார்த்து பஜிப்பதே (மநநம் பண்ணுவதே) பாரத தேவியின் புதல்வராய்ப் பிறந்த

பக்த கோடிகளுக்கு அழகு. இவ்வாறாகப் பார்த்துப் பரவசமடையவேண்டிய ஸ்தலங்களில் சமயபுரமும் ஒன்று.

அந்தச் சமயபுரம் திருச்சி ஜில்லாவில் இருக்கும் ஒரு ஸ்தலமாகும். அது ரெயில்வே வசதியில்லாததொரு சிறிய குக்கிராமமென்று பலர் நினைத்தபோதிலும், செவ்வாய்க் கிழமையன்றும் ஞாயிற்றுக்கிழமையன்றும் அவ்விடத்திற் கூடும் ஜனப்பெருக்கத்திற்கு அளவில்லாமல் இருக்கிறது. இது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில், திருச்சி டவுனுக்கு வடக்காக 8 மைல் தூரத்தில் சென்னைக்கு வரும் பெரிய ரஸ்தாவில் நிற்கும் ஒரு கிராமம். இந்தச் சமயபுரத்துக்குத் தெற்கில் மிகுந்த ஜனத்தொகையுடன் கண்ணனூர் என்கிற கிராமமும் இருக்கின்றது. அதற்கும் சமயபுரமென்றே பெயர் வழங்கி வருகின்றது. அவ்விடத்துக்குக் கண்ணனூர் எனப் பெயர் வந்த காரணம் என்னையெனில், அவ்விடத்துத் தொன்மையாராய்ச்சியை அனுசரித்த சிலா லேகங்களால் (Archaeological Inscriptions) தான். ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திற்கு வடக்காய் ஐந்துமைல் தூரத்தில் விக்ரமபுரம் என்று சொல்லப்பட்டு வந்த கிராமமே இப்போது சமயபுரமென்று பெயர்கொண்டு நிற்கின்றது. இந்தக் கிராமத்தில் கால் மைல் தூரத்திற்குள்ளாக இரண்டு கோவில்களிருக்கின்றன. ஒன்றுக்கு போஜேசுவர ஸ்வாமி கோவிலென்றும், மற்றொன்றுக்கு மாரியம்மன் கோவிலென்றும் பெயர். 1752-வது வருஷத்தில் பிரான்சிய சைந்நியமானது படையெடுத்து வந்தபோது, ஐரோப்பியர்களும் சிபாய்களும் மேலேசொன்ன இரு கட்டிடங்களுக்குள்ளு மிருந்தார்கள்; மராட்டியரும் தஞ்சாவூர்த் துருப்புகளும் வெளியிற் கூடாரமடித்துத் தங்கியிருந்தனர். சரித்திர சம்பந்தமான இவை யனைத்தையும் ஆர்மி என்னும் ஆங்கில நிபுணர் தமது புத்தகத்தில் விரிவாய் எழுதியுள்ளார். ஹாய்சால வமிசத்தைச் சேர்ந்த வெள்ளாழ அரசனொருவன் இந்த போஜேசுவர சுவாமி கோயிலைக் கட்டுவித்தான் என்றும், 13-ம் நூற்றாண்டில் ஹாய்சாலரது தலைமை ஸ்தானமாயிருந்தது விக்ரபுர மென்பதாகக் கண்ணனூரே காட்டப்பட்டதென்றும் கூறப்படுகின்றது. திருவானைக்காவெனும் ஜம்புகேசுவரம் கோவிலில் இருக்கப்பட்டதொரு சிலாலேகத்தைப் பார்க்கும்போது அதனில் வீரஸோமேசுவர அரசன் சொன்னதாகக் குறிப்பிடுவ தென்னவென்றால், 'கண்ணனூர் என்கிற விக்ரமபுரத்தில் நாங்கள் வைத்துத் தொழும் பாய்சாலீசுவரரது விக்ரஹம்' என்று காணப்படுகிறது. கண்ணனூர் கோவிலின் தென்பாகத்துச் சுவரிலிருக்கும் ஹாய்சால வமிசத்தரசனான வீரராமநாததேவர் எழுதிவைத்த சிலாலேகத்தினால் ஹாய்சாலவரசனது ஈசுவரர் கோவில் என்றுந்தெரிகிறது. மேலும் மைசூர் அரசர், கி. பி. 1253-வது வருஷத்தில் விக்ரமபுரத்தில் வீற்றிருக்குங்கால் வீரஸோமேசுவரரைப்பற்றிப் பதிப்பித்ததொரு செம்புச் சிலாலேகமானது இன்றும் பெங்களூர் மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத்திலிருந்தே மாரியம்மன் கோவிலும் வெகுவாய்ப் பிரகாசித்து வந்ததற்கிணங்க நாளுக்குநாள் அது மிக்க மேன்மை பெற்று இராஜதானியின் நாற்புறத்தினின்றும் அளவற்ற யாத்திரிகர்களும் பிரார்த்தனை கர்த்தர்களும் இந்த மாரியம்மன் கோவிலுக்கு வந்துகொண்டே யிருக்கிறார்கள். பராசக்தி அக்கோயிலின்கண் ஆவாகனம் ஆயிருப்பதாகவே ஐதிகம். அந்த அம்மன் கோயிலில் பூஜை செய்வோர் அந்தணரேயன்றி சூத்ரரல்லர்; சாதாரணமாக மாரியம்மன் கோயில்களில் பூசாரிகளிருப்பர்; அவர்களே மூலவிக்கிரகத்திற்கும் உற்சவ விக்கிரகங்களுக்கும் பூஜை செய்வது வழக்கம். ஆனால் இச் சமயபுரம் கோவிலில் அவ்வாறில்லாது அந்தணரே பூஜை செய்ய அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அக்கோயில் ஸ்ரீரங்கம் ரங்கநாதஸ்வாமி கோவில் டிரஸ்டிகளின் ஆதீனத்திற்கு உட்பட்டதாகும். எத்தனையோ வியாதியஸ்தர் தம் வியாதிகளைத் தீர்க்கும்படி அம்மன் கோயிலுக்கு வந்து பிராகாரத்தில் அங்கப் பிரதட்சிணம் செய்வதும், அடிப் பிரதட்சிணம் செய்வதும், மற்றும் மண்டலப் பிரதட்சிணம் செய்வதுமாயிருக்கிறார்கள். அந்த கோயிலுக்குள் கூன்விழுந்தபேரும், குருடான பேரும், பிள்ளையில்லாத மலடிகளும், மற்றும் தம் காரியசித்தி பெறவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டோரும் தொலைதூரத்தினின்றும் வந்து சமயபுரத்திலுள்ள தரும சத்திரங்களில் தங்கி பிரார்த்தனைகளைச் செலுத்திப் போவதுண்டு. வெளியூரிலிருந்து எவர் வந்தபோதிலும், அவர்களுக்குத் தகுந்தபடி அனுகூலங்கள் செய்துகொள்ள இடமிருக்கின்றது. கடவுள்

இல்லையென்று சொல்லும் நாஸ்திகரும் அக்கோயிலுக்குள் சென்று அம்மன் முன்னிலையில் நிற்கும்போது தேகம் பரவசமாய் விடுவது நிச்சயமென்பதைப் பலரும் அறியும்படி அந்த நாஸ்திகர்கள் சரமாரியாகத் தோத்திரம் செய்வதும், கைகூப்பி நின்று நெற்றியில் விபூதி வாங்கியிடுவதும், தீபாராதனை காலங்களில் தலை வணங்கி, தம் இரு கரங்களாலும் கன்னத்தில் போட்டுக்கொள்வதும் செப்பத்தரமன்று. அந்தக் கோயிலுக்குச் சைவர்களானாலும், வைஷ்ணவர்களானாலும் பேதாபேதமின்றி வந்து பலனடைந்து செல்லுகிறார்கள். இவ்வம்மனைத் தொழுவதாலுண்டாகும் பலன் என்னவென்று பார்க்கும்போது, திருவருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாவிலுள்ள தோத்திர முறைப்பாடல் ஒன்றும் எமது ஞாபகத்துக்கு வருகின்றது. அருள்விளக்க மாலையின் சம்பந்தமாக அவர் கூறுவதென்னவென்றால் :—

கல்லார்க்குங் கற்றவர்க்குங்
 களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங்
 கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கு மாட்டார்க்கும்
 வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
 மதிகொடுக்கு மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும்
 நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும்
 நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நட
 மிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு
 மிசையு மணிந்தருளே.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

மாசி இதழ்.—விவேக போதினி, மாசி இதழில், 'ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்' இயற்றிய லீலாசுகரின் திவ்விய சரித்திரம், கண்ணைக்கவரும் அநேக அழகிய போடோ படங்களுடன் வெளிவருகிறது. அதை நமது நேயர்கள் படித்து மகிழ்வார்களாக.

* * * * *

பத்து கோடி ரூபாய்.—இன்ஷ்யூரென்ஸ் வியாபாரத்தில், ப்ரிமியத்தின் மூலமாக (Premium) மட்டும் வருஷந்தோறும் 10-கோடிரூபாய் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்கிறதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பொருளாதார நிலையில் இந்தியா மேம்பாடடைய வேண்டுமாயின், இந்தப் போக்கு நிறுத்தப்படவேண்டும். இப் பெருந்தொகை இந்தியக் கைத்தொழில்களுக்கு உபயோகப்படுத்தப்படின் எவ்வளவு இலாபகரமா யிருக்கும்! உலகப் பிரசித்திபெற்ற ஸர். ஸி. வி. ராமன் அவர்களும், "இந்தியாவிலே வியாபாரம் செய்யும் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் இந்தியாவிலேயே தங்கள் பணத்தைப் போட்டுவைக்கவேண்டுமென்று ஒரு சட்டம் செய்யப்படவேண்டும்" என்பதையே வற்புறுத்திச் சொல்லுகிறார். நமது சென்னை நகரில், யுனைடெட் இந்தியா லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி, ஹிந்துஸ்தான் லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி, நேஷனல் லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி இவை போன்ற கம்பெனிகள் மிக்க ஒழுங்காகவும் திருப்திகரமாகவும் இலாபகரமாகவும் வேலைசெய்து வருவது இங்குக் குறிப்பிடுதல் எவ்விதத்திலும் பொருந்தும். இவைகளை நம்மவர் ஆதரித்தல் அவசியம்.

* * * * *

மாண்டிஸோரி அம்மையார்.— மாண்டிஸோரி என்ற அம்மையார், சீமையிலே ஒரு கல்லூரியை நடத்தி வருகிறார். இங்கு அவர், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நல்ல பயிற்சி அளிக்கின்றார். உத்தமமான லக்ஷியங்களுடன் இக்கல்லூரி நடைபெறுகின்றது. இந்த அம்மையாரை, காந்தியடிகள் லண்டனுக்குச் சென்றிருந்தபோது சந்தித்து, குழந்தைகள் ஆங்குப் பயிற்சிபெறும் முறைகளைக் கண்டு மிக்க மகிழ்வெய்தினார். அந்த அம்மையாரும் காந்திஜியை மிக்கப் பணிவுடனும் அன்புடனும் வரவேற்றார்கள்.

* * * * *

வள்ளல்களின் அரசர்.— ஜான் டி. ராக்பெல்லர் என்ற அமெரிக்கர், யாவருக்கும் உபயோகமாகும்படி பல நன்கொடைகள் அளித்திருக்கின்றனர். இதுவரை இவர் இருபது கோடி பவுன் நன்கொடையாக அளித்திருக்கின்றார். இவ்வளவும் இவர் தாமாகவே சம்பாதித்தது. இவர் மிக எளிய குடும்பத்தில் பிறந்து, தன் விடாமுயற்சியாலேயே அழியாப் புகழ் பெற்றவர். இவர் தம் 19-ம் வயதுக்குள் 160-பவுன் சேர்த்திருக்கிறார். இப்போது ராக்பெல்லரின் ஆஸ்தி 30-கோடி பவுன் என்று மதிக்கிறார்கள். சுமார் 20-கோடி பவுன் இவர் தருமத்திற்கெனச் செலவிட்டிருக்கிறார்.

தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்று மில்.

377

தாக்ஷாயணி அவதாரம்